
இதழ் 13 ஆவணி 2021 £4

# சிறுகதை மஞ்சரி

ஆசிரியர்: மு.தயாளன்

மாதஇதழ்



வளர்ந்த வளரும் படைப்பாளிகளுக்கான களம்

# பங்காளர்கள்


சிறுகதை மஞ்சரி




பவானி
பக்கம் 3



அகமது ஃபைசல்
பக்கம் 5



தெளிவத்தை யோசப்
பக்கம் 11



குப்ளான் ஐ. சண்முகன்
பக்கம் 17



சந்திரா இரவீந்திரன்
பக்கம் 21



தீபதிலகை
பக்கம் 27



கர்ணன் சின்னத்தம்பி
பக்கம் 33



கண்ணதாஸ்
பக்கம் 35



சம்பூர் சமரன்
பக்கம் 37



பேராசிரியர் செ. யோகராசா
பக்கம் 39



நந்தினி சேவியர்
பக்கம் 40

# உள்ளடக்கம்...


2 **யாரொடு நோவேன் ......**
மு. தயாளன்

3 **பதவி**
பவானி

5 **குறுங்கதை- பந்தாட்டம் ...** அகமது ∴பைசல்

6 **கெத்து**
நடராஜா பார்த்திபன்

10 **கடுகு குறுங்கதை - இல்லாதபோது**
திருமலை சுந்தா

11 **ஊன்றுகோல் - சிறப்புச் சிறுகதை**
தெளிவத்தை ஜோசப்

16 **அறிவுக் கதைகள் -1 உழைப்பு ....**அர்த்தநாரி

17 **சைக்கிள் புராணம் அல்லது.....**
குப்பிளான் ஐ. சண்முகன்

20 **குறுங்கதை - கண்ணுக்குத் தெரியாத...**
ஷெல்லிதாசன்

21 **ஞாபகங்கள் பேசும் 2**
சந்திரா ரவீந்திரன்

27 **என் அம்மாவும் சலித்துவிட்டாள்....**
தீபதிலகை

33 **கவிதைச் சிறுகதை - வேடிக்கை மனிதர்கள்**
கர்ணன் சின்னத்தம்பி

35 **கொரோனா தந்த பாடங்கள்....**கண்ணதாஸ்

37 **சொல்லாத கதை -**
சம்பூர் சமரன்

39 **மஞ்சரி 12 ஒரு பார்வை**
செ. யோகராசா

40 **எழுத்தின் அனுபவம்....**
நந்தினி சேவியர்


**சிறுகதை மஞ்சரி 12 இன் சிறந்த மூன்று சிறுகதைகள்**

1. புரியாத உறவுகள் - குரு. சதாசிவம்
2. டோக்கன் - ஜெ. கார்த்திக்
3. பெண்மையின் தவறோ? - தாட்சாயினி


**நன்றிகள்..** பங்காளர்களுக்கும் இச் சிறுகதை மஞ்சிரியை ஒப்பு நோக்கித் தந்த திருமதி ஆர்த்தி துவாரகனுக்கும் எனது மனைவி சாருகேசிக்கும் அட்டையை வடிவமைத்த என் மகன் ரமணனுக்கும் சித்திரங்களை அழகுற வரைந்த கைலாசநாதருக்கும் அட்டைக்கான படத்தைத் தந்துதவிய ஐஸ்னவி வினோஜனுக்கும் எனது மனமார்ந்த நன்றிகள்.


**1000 பேரை இணைப்போம்......**

**தாய்மண்ணில் உள்ள பாடசாலைகளுக்கு மஞ்சரியை அனுப்புவதற்கு புலம்பெயர் மண்ணிலுள்ளவர்கள் பங்கு பெறலாம்.**

லண்டன்: ஒரு பாடசாலை ஒருவருடம் **£5.00**
ஐரோப்பா: ஒரு பாடசாலை ஒரு வருடம் **6 Euro**
மற்றைய நாடுகள்: ஒரு பாடசாலை ஒரு வருடம் **$10**


அட்டை வடிவமைப்பு: ரமணன்
அட்டைப்படம் : ஐஸ்னவி வினோஜன்

**பிரதம ஆசிரியர்** : மு. தயாளன்
**உதவி ஆசிரியர்கள்:**செல்வி த. சரண்யா, வி.மைக்கேல் கொலின்
**ஆலோசகர்கள்** : Dr P. இராசையா , பேராசிரியர் செ. யோகராசா , நந்தினி சேவியர்



**தொடர்பு முகவரி:**
**Sirukathai manjari, 14 Brands Road, Berkshire SL3 8QP,UK**
sirukathai1@gmail.com, +447505455811
**Sirukathaimanjari 91, barathi street, Trincomalee, Srilanka**
sirukathai1@gmail.com, +94765554649



**சந்தா விபரம்:**
**Srilanka:** 800Rs/Year
Bank detail : Mrs Thanabalasingam, Commercial bank, Trinco branch, 8370042817
**England** £20/Year
**Other countries:** $80/year
Bank details: M. Natkunathayalan, Barclays,
Sort code 20-37-15, A/C Number 60389307
IBAN : GB11BUKB20371560389307 SWIFTBIC BUKBGB22

**விநியோகம்:**
யாழ்ப்பாணம்: குலசிங்கம் வசீகரன் , +94 773788795
மட்டக்களப்பு: மைக்கல் கொலின் +94 774338878
திருகோணமலை: த. சரண்யா, +94765554649


**வாசிப்பதனால் மனிதன்**
**பூரண மனிதனாகிறான்**



# யாரொடு நோவேன் ? ஆர்க்கெடுத்துரைப்பேன்?

**வை**ரசினுடைய வக்கிரத்தால் உலகம் குழம்பிப்போய் இருக்கிறது. இந்த நேரத்திலும் அரசியல் பேசுவோர்கள் தங்கள் சுயநலத்தை முன்னிறுத்திப் புரியும் செயல்கள் மனதில் துன்பத்தை விளைவிக்கின்றன. மக்கள் நலம் விரும்பும் சஞ்சிகை என்ற வகையில் எமது ஆதங்கத்தையும் பதிவு செய்யவேண்டியது அவசியமாகிறது.
இலங்கையில் சில அரசியற் கைதிகள் நீண்டகாலத்தின் பின் விடுதலை செய்யப்பட்டமை நல்லதொரு செய்தியாக இருந்தபோதும் அதையொட்டிய வேறு சில நிகழ்வுகள் மனதைத் துன்பப்படுத்துவனவாகவே இருக்கின்றன. இலங்கையின் நீதி பரிபாலன முறைமை கேள்விக் குறியாகிவிட்டதுபோல் தோன்றுகின்றது.
பல நாட்கள் வழக்குகள் நடந்து பல சாட்சிகள் விசாரணை செய்யப்பட்டு நாட்டின் உயர்ந்த பதவிகளைக் கொண்ட நீதியரசர்களினால் குற்றவாளிகள் எனத் தீர்மானிக்கப்பட்டுச் சிறையில் அடைக்கப்பட்ட அதுவும் மரண தண்டனை விதிக்கப்பட்ட கைதிகள் மிக இலகுவாக ஜனாதிபதியின் அதிகாரத்தினால் மன்னிப்பு வழங்கப்பட்டு மக்கள் மத்தியில் உலவவிடப்பட்டுள்ளமை மனதை உறுத்துகிறது. அதுவும் கொலை செய்தார்கள் என்று முத்திரை குத்தப்பட்டவர்கள் மக்கள் மத்தியில் ராசாக்களாக வலம் வருகிறார்கள்.
இவை ஒருபுறமிருக்க நம்மவர்கள் மத்தியில் ஆபத்பாந்தர்களாகக் கருதப்பட்டவர்கள் வீர புருஷர்கள் போன்றவர்களின் இதுவரை எமக்குத் தெரியாத மறு பக்கங்கள் சமூக வலைத்தளங்களில் தாராளமாக வலம் வருகின்றன. இவற்றின் உண்மை பொய்கள் புரியாவிட்டாலும் ஏதோ நடந்திருக்கவேண்டுமென மனம் அழுத்தலுக்குள்ளாகிறது.
பலரினுடைய மலையளவான பிம்பங்கள் பொலபொலவென்று உதிர்ந்து மண்ணோடு மண்ணாவதையும் அவதானிக்கக் கூடியதாகவுள்ளது.
இலக்கிய உலகம் தன் பங்கிற்கு ஒருவர் படைப்பை இன்னொருவர் களவாடித் தனது பெயரில் வெளியிடும் கொடுமையை வெளிப்படுத்திக் கொண்டிருக்கிறது.
இன்னொரு பக்கம் வெளிநாடுகளில் புலம் பெயர்ந்த தமிழர்கள் நவீன கலாசாரம் என்ற போர்வையில் தமிழர் கலாசாரங்களை அடையாளங்களைத் தொலைக்கும் செயற்பாடுகளை மும்முரமாகச் செய்து கொண்டிருக்கிறார்கள்.
இவையெல்லாவற்றையும் நோக்கும்போது மனம் சோர்வடைந்து யாரொடு நோவேன் ஆர்க்கெடுத்துரைப்பேன் என்று மிக வேதனையோடு கேட்பதை எப்படித் தவிர்க்க முடியும்?
மனிதர்கள் மாறவேண்டும். மனிதாபிமான சிந்தனைகள் அவர்களின் உள்ளங்களை நிறைக்க வேண்டும். இல்லாவிடில் மனிதகுலம் சீக்கிரமாகவே பூமியில் அற்றுப் போய்விடும்.

**மு. தயாளன்**
**ஆசிரியர்.**

சிறுகதை மஞ்சரி

# பதவி

-பவானி

**கை**யடக்க தொலைபேசி ரொம்ப நேரமாகவே அடித்துக் கொண்டேயிருக்கின்றது. இருந்தும் காலைப் பொழுதே அவனுக்கு ரொம்ப மன அழுத்தம் நிறைந்து நிம்மதியின்றி விடிந்தது. அவன் நிம்மதியாய்த் தூங்கி ஒரு வருடத்திற்கு மேலாகிவிட்டது. சுய சிந்தனையைக் கடன் கொடுத்ததாலும் பொய்யும் புரட்டும் நிறைந்த வீட்டு அங்கத்தவர்களாலும் பிரச்சனைகள் தலைக்கு மேல் ஏறிவிட்ட நிலையில் நியாயம் தெரிந்தும் தன் முன்னைய நிலைப்பாட்டையும், வீட்டாரையும் காட்டிக் கொடுக்க முடியாத கௌரவச் சிக்கலாலும் தடுமாறி நிற்கும் வாழ்க்கைப் பிரச்சனையை சரி செய்து கொள்ள முடியாமல் ஏதேதோ கதைத்து மழுப்பி மழுப்பி நம்பி வந்தவள் மேல் பழியைப் போட்டுவிட்டுத் தப்பிக்க முயன்று தோற்றுப் போன தருணத்தில் ரொம்பவே இதயம் வலிப்பதை உணர்கின்றான்.. ஆமாம்!. காந்தன் பெற்றோர் பார்த்து வைத்த பெண்ணுக்குச் சம்மதம் தெரி வித்துக் கொடுக்கல், வாங்கல் பேசி முடித்துத் திருமணத்திற்குத் தயாராகி ஊருக்கும் உறவுகளுக்கும் தெரிய மாப்பிள்ளை கோலம் புகுந்து காயத்திரி என்ற பெண்ணைத் தாலிகட்டித் தாரமாய் ஏற்று வாழ்க்கையை ஆரமபித்தான். ஆனால் அலுவ லகக் காதலியான சாமந்தி இவனை வாழ விடக்கூடாது என்ற எண்ணத்தில் முழுமூச்சாய் செயற் பட்டாள். சாமந்தியின் தொல் லையைச் சமாளிக்க முடியாதவன், நம்பி வந்தவளை வதைக்க ஆரம் பித்தான். மூன்று மொழிகளும் சர்வ சாதாரணமாய் நுனி நாக்கில் புரளும் காயத்திரிக்கு சாமந்தி காந்தனுக்கு அனுப்பும் குறுந்த கவல்களைத் தெரிந்து கொள் வதில் அவ்வளவு பெரிய சிரமம் இருக்கவில்லை. இதைப்பற்றி காயத்திரி காந் தனிடம் கேட்ட போது, சாமந்தி தனக்கு நெருங்கிய தோழி என்றும், அவளுக்கு என்ன தேவை என்றாலும் செய்வேன்



என்றும் இனியும் செய்து கொண்டே தானிருப்பேன். அதைப் பற்றி நீ பெரிதுபடுத்த வேண்டாம் என்றும் கூறி காயத்திரியின் வாயை அடைத் தான்.

சாமந்தி வேறு சமூகத்தைச் சேர்ந்த வள்!. அதனால் காந்தன் காதலிக்கும் விடயம் வீட்டாருக்குத் தெரிந்தும் அவளை காந்தன் கட்டினால் ஊரும் உறவுகளும் தம் குடும்பத்தை மதிக் காது, என்ற காரணத்தினால், காயத் திரியைப் பெண் பார்த்து, ஒரு பெண்ணின் வாழ்க்கையையே கேள் விக்குறியாக்கிச் சீரழித்து விட்டார் கள். மாப்பிள்ளை என்ற நாமத்தில் வாழ்வதாய் எண்ணி, காயத்திரி உட்பட அவளின் வீட்டாரையும் அதிகாரத்தினால், அடக்கியாள முற்பட்டான். தனதும் வீட்டாரினதும் தவறுகள் வெளியே தெரியாதிருக்க பெரிதும் முயற்சித்தான்.

காயத்திரியைத் தடித்த சொற்களால் வேதனைப்படுத்தினான். அவளின் சொத்துக்களை அபகரிக்க நினைத்த அந்த குடும்பத்திற்குச் சின்னஞ் சிறுசுகள் வாழட்டும் என நினைத்து வழிவிட மனசு வரவில்லை.

இவர்களின் வஞ்சக வார்த்தைக ளையும் அநாகரீகமான செயற் பாடுகளையும் பொறுத்துக்கொள்ள முடியாமல் காயத்திரி அந்த வீட்டை விட்டு வெளியே வந்துவிட்டாள். அவள் வெளியே வந்ததற்கு இரண்டு காரணங்கள் இருந்தன. எல்லை மீறிய கோபங்கள் எந்த ஒரு கெடு தலான முடிவுக்கும் இட்டுச் செல் லலாம்.

பிரச்சனைகளால் அவர்கள் நிம்மதி யும் அவர்களால் தனது வாழ்க்கை நிம்மதியும், பாதித்துவிடக் கூடாது. காந்தன் நினைத்தால் மட்டும் தான், எல்லார் நிம்மதியையும் காப்பாற்ற முடியும்.

அவனின் பொய்யும், சாமந்திக்காக செய்யும் திருட்டுச் செயற்பாடுகளும், தலைத் தூக்கி நிற்கும் தருணத்தில், ஞாயம் தேடி நிற்பதில் அர்த்தம் இல்லை என நினைத்தே வெளியே வந்தாள்.

அவள் கட்டிய கணவன் என்ற ரீதியில் அவன் மேல் அதிக நம் பிக்கை வைத்திருந்தாள். தன்னை ஏமாற்றவோ கைவிடவோமாட்டான் என நினைத்த அவளது நம்பிக்கை பொய்யாய் போனது.

காந்தனின் தந்தை ஒரு நேர்மை உள்ளம் கொண்ட ஒரு தியாகி என்று கூறினால் ரொம்பவே பொருந்தும்.

தனது பணத் தேவைக்காக மட்டு மின்றி, தனது மனைவியான காந் தனின் தாயாரின் பொய் பித்தலாட்டம், காரணமாகவும் கணவரோடு ஒத்து ழைத்து வாழ முடியாதவளை வெறுத்து ஒதுக்கிட முடியாமலும், நேர்மையான உள்ளத்தில் மனைவி பிள்ளைகளைக் கைவிட்டு ஓட மனசு வலித்ததன் காரணமாயும், குடும் பத்தை மரியாதையாய், வைத்திருக்க வேண்டும் என்பதற்காகவும், தனக் குத்தானே பிரிவை ஏற்படுத்திக் கொண்டு, சுமார் பதினைந்து வரு டங்களாகச் சவூதியில் தொழிலை தயார் செய்து கொண்டு போனவர் இரண்டு மூன்று வருடங்களுக்கு ஒரு முறை வீட்டுக்கு வந்து விட்டுச் செல்வார்.

அவ்வாறு தான் காந்தனின் திரு மணத்திற்கு வந்தவர், இரண்டு மாதங்களில் காயத்திரி ஒரு நல்ல குடும்பப் பெண் என்று புரிந்து கொண்ட சந்தோசமான மன நிலை யோடு மீண்டும் சவூதி சென்று விட்டார்.

அவருடைய பிரார்த்தனை எல்லாம் மகனும் மருமகளும் சிறப்பான வாழ்க்கை வாழத் தனது மனைவியும் ஒத்துழைக்க வேண்டும் என்பது தான். இருந்தும் அவரது பிரார்த்தனை அங்கே செல்லுபடியாகவில்லைப் போலும். தினம் ஒரு பிரச்சனையால் குடும்ப நிம்மதி பெரிதாய் சோபிக்க வில்லை. முடிவில் காந்தன் காயத் திரி வாழ்க்கை விவாகரத்து வரை சென்று விட்ட காரணத்தினால் மனம் பொறுக்காத தந்தை மகனுக்கு அழைப்பை ஏற்படுத்தி பிரச்சனை களை சமரசம் செய்ய எண்ணிதோற் றுப் போனார். காரணம் காந்தன் அவரின் தொலைபேசி அழைப்பை ஏற்கவேயில்லை.

இதைப் பற்றி தாயாரிடம் பேசினால் நான் எல்லா வகையிலும் நல்லாத் தான் வளர்த்துள்ளேன். மற்றவர்கள் தான் எம்மைப் பற்றிப் பிழையாகக் கதைக்கிறார்கள். என் மகனுக்கு எல்லோரும் மரியாதை கொடுத்து மாப்பிள்ளை என்ற வார்த்தைக்கு உகந்தவன் என்ற ரீதியில் மதிப்ப ளித்து வழி நடத்தியிருக்க வேண்டும். ஆண்பிள்ளை சில தவறுகள் செய் தாலும் அதைப் பொறுத்துக் கண்டு கொள்ளாமல் வாழ்க்கை நடத்தத் தெரிந்திருக்க வேண்டும்.

மகன் வெளியே யாருடன் பேசி பழகினால் என்ன!வீட்டில் காயத்தி ரிக்குக் கணவனாய்த்தானே உள் ளான். இப்படித் தாயின் அருவருப் பான பேச்சுகள் யாருக்குமே பிடிக் காத போது காயத்திரிக்கு மட்டும் எப்படிப் பிடிக்கும்.

இதுவெல்லாம் பிரச்சனைகளில் ஒரு பகுதி மாத்திரமே! ஆகப் பொறுக்காத பொன்னம்பலத்தார் மகனுக்கு நீண்ட குரல் பதிவு ஒன்றை அனுப்பினார். அதில் காந் தன் வீணே உன் வாழ்க்கையை

முடித்துக் கொள்ளாதே. நீ பெண் பார்த்து விரும்பி ஏற்றுக் கொண்டவளை ஏமாற்றிவிடாதே. உன் அம்மாவின் செயற்பாடுகள் உனக்கு நன்றாகவே தெரியும்.

மாப்பிள்ளை என்ற நாமம் பொருளினாலும் பணத்தினாலும் அலங்கரிக்க வேண்டிய பதவியல்ல. மரியாதையாகவும் பெருமையாகவும் மாப்பிள்ளை ஆவதற்கான பராயத்தை தந்த கடவுளுக்கு நன்றியுடன் பிரார்த்தித்து வாழ்க்கை முழுமை பெற்றிட அனுபவித்து வாழ்ந்திட முயற்சிப்பாய் என நினைத்து அன்போடு எதிர்பார்க்கின்றேன். எத்தனை பேர் என்ன சொன்னால் உனக்கு என்ன, உன் நடத்தையில் பிழையிருப்பது உனக்குத் தெரியும் தானே. அதைத் திருத்திக் கொண்டு உன் மனைவியிடம் மன்னிப்பைக் கேட்டு விட்டுச் சேர்ந்து வாழுங்கள். விவாகரத்து ஒன்றும் விரும்பித் தேவை என்று வாங்கிய பொருளை அழுக்குப் படுத்திய பின் வேண்டாம் என்று கொடுத்திட விலைக்கு வாங்கிய பொருளல்ல.

அதிலும் பெண் பாவம் பொல்லாதது. உன் ஏழு ஜென்மத்துக்கும் பாவப்பட்ட வாழ்க்கை வாழ்ந்திட அத்திவாரமாய் அமைந்திடும். நீ ஒருவன் நினைத்தால் மட்டும் தான் வாழ முடியும். இதற்கு யாரையும் கூட்டுச் சேர்க்காதே. மாப்பிள்ளை என்ற வார்த்தையைப் பதவி எனும் மோகத்தில் பார்க்காதே,

மாப்பிள்ளை என்ற வார்த்தையை அன்பு, ஆசை, பாசம், ஆதரவு, பொறுப்பு, கருணை, நம்பிக்கை, நேர்மை போன்றவற்றில் நுழைத்து வாழ்ந்திடு.

நேர்மையற்ற இடத்தில் தான் மன்னிப்புக்கு இடம் இருக்காது நேர்மையையும் உண்மையையும் கட்டிப் பிடித்து வாழக்கற்றுக் கொள், மன்னிப்புத் தானாகவே உன்னை அணைத்துக் கொள்ளும். நீ எல்லாவற்றையும் மறந்து கைப் பிடித்தவளை எல்லாத் தகுதிகளோடும் வாழ வைக்கத் தகுதியானவன் என்ற உண்மையை உணர்ந்து காயத்திரியை அன்போடு அணைத்து வாழ்க்கை நடத்து, இது நம் குடும்பத்திற்கு நல்ல கௌரவத்தையும், உயர்வையும் தரும். இந்த அப்பாவுக்கு நீ மரியாதை தருவதாக இருந்தால் உன் மனைவியுடன் வாழ்ந்து காட்டு, அது மட்டும் எனக்குப் போதும்.

குரல் பதிவைக் கேட்ட காந்தன் இவருக்கு என்ன தெரியும், நான் மாப்பிள்ளை, ஆண் மகன் நான் யாருக்கும் பணியமாட்டேன்.

நான் போடும் கட்டளைகளை ஏற்று எனக்கும் அம்மாவுக்கும் அடிமையாக வாழவிரும்பினால் என்னோடு வரட்டும். இல்லாவிட்டால் எனக்கு இது ஒன்றும் பெரிய பிரச்சனை இல்லை எனக் கூறிக்கொண்டே விவாகரத்து பேப்பரில் கையொப்பம் இடத் தயாராகப் பேனாவை கையில் எடுத்தான் காந்தன். இங்கே யார் பிழையெனக் காலம் தான் பதில் சொல்ல வேண்டும்.

## குறுங்கதை

## பந்தாட்டம்

பொலித்தின் பைக்குள்ளிருந்து எப்போது வெளியே வரமுடியும் என்ற எதிர் பார்ப்புடன் காத்திருந்தது பந்து. முதுகில் ஏழாம் இலக்கமும், ரதூல் என்ற பெயரும் பொறிக்கப்பட்ட வீரன் பொலித்தின் பையைக் கிழித்து பந்தைக் கையில் எடுத்தான். பந்து தன் கண்களால் எல்லாப் பக்கமும் திரும்பித் திரும்பிப் பார்த்தது. ரதூல் பந்தை உள்ளங்கையில் நிறுத்தி வைத்தான். புதிய இறப்பர் நெடி அவன் மூக்கின் அருகாமைக்கு வந்து போனது. பந்தை மேடையில் நின்றபடி பார்த்த எனக்கு பந்து அவன் கையை மறைத்து அந்தரத்தில் நிற்பதுபோல் தெரிந்தது. தன் ஆட்காட்டி விரலின்மேல் பந்தை வைத்துச் சுழற்றிவிட்டான். தான்தான் இந்த உலகமென நினைத்து சுழன்ற பந்து எதிர் பாராதவிதமாக அவன் காலால் முதல் அடியை வாங்கியது. அந்த மைதானத்தில் போய் விழுந்து உருண்டு மெள்ள நின்றது. தாமரை இலையில் ஒற்றைத் தண்ணீர்த் துளிபோல் அழகாய். நீல நிற டீ சேட்டும் வெள்ளை நிற கழிசானும் அணிந்து நின்ற அந்த உயரமானவன் பந்தின் தலையில் சரியாகப் பார்த்து சப்பாத்துக் காலைத் தூக்கி வைத்தான். அழாத குறையாக முழி பிதுங்கிய பந்து உயரே பறந்து, மேடையில் இருந்த அமைச்சரின் தலையில் மோதி கண் காணாத இடத்தில் போய் விழுந்து ஓய்வெடுக்கத் தொடங்கிற்று."இத்துடன் பந்தாட்டம் முடிந்தது" என மேடை ஒலி பெருக்கியில் அறிவிக்கப்பட்டது. அப்போதுதான் மைதானத்திற்கு வந்திறங்கினார் கிறிஸ்டியானோ ரொனால்டோ. ஒலி வாங்கியை எடுத்த அமைச்சர் "மீண்டும் ஆட்டம் தொடங்குகிறது" என்றார் குரலை உயர்த்தி. நாடாளு மன்றத்தில் கூட இப்படி அவர் குரல் உயர்ந்ததில்லை.

**அகமது ஃபைசல்**

“நிலபாவாடை என்ன? பந்தல் தோரணம் என்ன? தவில் கச்சேரி என்ன? ஆடை அலங்கரிப்பு என்ன? வீடியோ எடுப்பென்ன? கிட்டடியில ஒருத்தர் வீட்டிலயும் இவ்வளவு சிறப்பாக ஒரு கொண்டாட்டம் நடக்கேல்ல….” செல்வநாயகப்பா சொல்லிக் கொண்டிருக்கிறார்.

நிலபாவாடை என்பது செங்கம்பள வரவேற்பு போன்றது. வெள்ளை வேட்டிகளை நிலத்தில் தொடர்ச்சியாக விரித்து குறிப்பிட்டவர் நடந்து வரவைப்பது. இது ஒரு கௌரவத்தை எடுத்துக் காட்டும் செயற்பாடுதான். பந்தல்களும் பல வகையான மோஸ்டர்களில் உலாவுகின்றன. தகரங்களை அடுக்கிக் குறிப்பாக மழை, வெய்யில் என்பவற்றிலிருந்து பாதுகாத்துக் கொள்வதுதான் நோக்கம். ஆனால் இன்று அது பகட்டைக் காட்டும் அடையாளம்…..

பந்தல் போடுவதை ஒரு தொழிலாகச் சிலர் செய்கின்றனர். பெருந்தொகைப் பணத்தைக் கொட்டி, பெரிய வேலைப்பாடுகள் செய்து... ஒருவிதத்தில் அழகியலான செயற்பாடுதான்.

இனி, மகிழ்ச்சியான நிகழ்வுகள் திருமணவீடு, சாமத்தியவீடு, மணிவிழா, பொன்விழா போன்றவற்றையும், துக்கமான செத்தவீட்டையும் பந்தல் போட்டுச் செய்யும் வழக்கம் வந்துவிட்டது. செத்த வீட்டுக்கு வெள்ளை கட்டுவதில்லை. ஆனால் மழைக்காலம் என்றால் முகடு வைத்த பந்தல் போடப்படும் வழக்கம் இன்று வந்துவிட்டது. எவ்வளவுதான் பந்தல்கள் வந்தாலும் வெள்ளை கட்டுவதில் ஒரு பெருமை இருப்பதை செல்வநாயகப்பா உணர்கிறார். தான் இன்னும் உயர் நிலையில் இருக்கும் ஓர் அடையாளம் அது என நம்புகிறார். மற்றைய சடங்குகள் இப்போது அருகிவிட்டன. இல்லையென்றே சொல்லலாம்.

# கெத்து

நடராஜா பார்த்திபன்



முந்த நாள் சாமத்திய வீட்டுக்கு வராதவர்கள் சிலர் இன்று வந்திருக்கிறார்கள். அவர்களிடம் தான் செல்வ நாயகப்பா தன் பேத்தியின் அன்றைய விடயங் களைச் சொல்லிக்கொண்டிருக்கிறார். அவருக்குச் சரியான பெருமையாக இருக்கிறது. இருக்காதா….. தனது குடும்பத்தின் முதலாவது பேத்தியின் நிகழ்வு. மக்கள்,மருமக்கள்,பேரப்பிள்ளைகள்,உறவுகள், அயலவர்கள் என வந்து வாழ்த்திச் சாப்பிட்டுச் சந்தோசமாகப் போயிருக்கிறார்கள்.

செல்வநாயகப்பாவுக்கு சொந்த பந்தங்கள் வந்து போக வேண்டும். அயலிலுள்ளவர்களோடு மிகவும் நெருக்கமாக இருக்க வேண்டும். நண்பர்கள் அடிக்கடி சந்தித்து அளவளாவ வேண்டும் என்று பெரிய தவிப்பு. முந்தியென்றால்...இப்ப அவருக்குத் தான் போய் இவ்வாறான விடயங்களை செய்ய உடல் ஒத்துழைப்பு வழங்குவதில்லை. அதனால் யாராவது வீட்டுக்கு வந்தால் விடார். இன்று வந்தவர்கள் தாங்கள் அன்று வராததற்கான காரணங்களை ஆளாளுக்குச் சொல்லிக் கொள்கிறார்கள்.

ஓமோம்,உண்மைதான், அதனாலென்ன…. ...போன்ற விடைகளை செல்வநாயகப்பா சொல்லிக் கொண்டி ருக்கிறார். இதற்கிடையில் மகளிடம் பலகாரம் கொண்டுவா ரீயைப்போடு ஜனாவையும் ஒருக்கா வரச்சொல்லு என்று ஆணை பிறப்பிக்கவும் செய்கின்றார்

ஜனார்த்தனியைத் தான் ஜனா என்றார்.

அவள் தாத்தாவின் செல்லம். “தாத்தா என்னுடைய வகுப்புப் பிள்ளைகள் சிலர் வீடியோ எடுத்து மண்டபம் பிடிச்சு பெரிதாய் செய்தவர்கள்” என்று மட்டும் சொல்லி இருந்தாள். அவளுக்கும் மிகவும் கோலாகலமாக கொண்டாட வேண்டுமென்ற விருப்பம் இருந்ததும் ஒரு காரணம் தான்.

“வீட்டில் ஒரு கொண்டாட்டம் நடந்த நாளும் மறந்து போச்சு. இவன் சின்னராசாவின் கலியாணம்….ம் இனசனத்தை அயலட்டையைக் கூட்டி ஒரு கொண்டாட்டம் போடத்தான் வேணும்” என நினைத்துக் கொண்டிருந்த வருக்கு இப்பதான் நல்லதொரு வாய்ப்பு கிடைச்சி ருக்கு. இப்போது ஜனார்த்தனியும் ஆசைப்படுகிறாள் என்பது இரட்டிப்பு மகிழ்ச்சி.

மகளும் மருமகனும் அடக்கி வாசிக்கத் தான் விரும் பினார்கள். அதற்கு மாறாகத் தான் ...தன் மகளோடு தனது அபிப்பிராயங்களையும் ராங்கித்தனங்களையும் காட்டலாம். மருமகனோடு …..அவர் தகப்பன் விரும்பா விட்டால் என்ன செய்வது? என்ற யோசனையோடு இருந்தவருக்குப் பேத்தி எடுத்த முடிவு வாய்ப்பாகி விட்டது.

பலகாரத்தட்டைக் கொடுத்துப் பின் அவர்களுக்கு முன்னுள்ள ரீப்போவில் வைத்துவிட்டு “எடுத்து சாப்பிடுங்க” என்று சொல்கிறாள். “அப்பா கொஞ்சம் கவனித்து கொள்ளுங்கோ நான் போய் ரீ எடுத்துக் கொண்டு வாறன்” என்று சொல்லியபடி வீட்டுக்குள் போகிறாள்.

“ஓமோம் நான் கவனிக்கிறேன். நீ போய் எடுத்துக்கொண்டு வா”.

கிழவருக்குக் கொஞ்சம் புழுகிறதுக்கு வாய்ப்பு கிடைத்தது வலு சந்தோசம். இயல்பாகவே மிகைப் படுத்திக் கதைக்கும் பழக்கம் உள்ளவர் செல்வநாயகப்பா. நல்ல கதைகாரன் தான். செல்வநாயகப்பா கல்யாண மெண்டாலே கட்டிப்பிடிச்சு அழுகிறவர் செத்த வீடெண் டால் கேட்க வேண்டுமோ...என்று ஊரில் கதைக்கிற வர்கள். இப்போது சந்தர்ப்பமும் வாய்த்திருக்குது.

“மகளோடு வேலை செய்யிறவர்கள் மருமகனின் ஆட்கள் தன்னுடைய இனசனங்கள் பேத்தியாரோடு படிக்கிற பிள்ளைகள்…. அப்பப்பா வஞ்சகமில்லாமல் நாங்களும் காட்டடித்துக் கொடுத்தம். அந்த நேரத்துக்கு எல்லோரும் வந்திருந்தினம் சனமெண்ட சனமே”.

“கோல் எடுப்பமெண்டு மகள் கேட்டவள்தான் . நான் தான் என்னடி பிள்ளை நாங்க என்ன ஒரு பரப்பு காணிக்குள்ளையே வீடு கட்டி இருக்கிறம். எங்கட முத்தமே ஒரு பரப்புக்குக் கூட. இப்ப பாக்கிறீங்க தானே. இன்னும் வெள்ளையும் அவிழ்க்கேல்லை. அண்டைக்கு நிலபாவாடை போட்டுட்டு போனவன் தான் இண்டைக்கு பின்னேரம் வந்து வெள்ளையைக் கழட்டுவான்”. தன்னுடைய கதையை கேட்கிறார்களோ இல்லையோ அவர் கதையை நிற்பாட்டுவதாக இல்லை.

“ஏன் பந்தல்க்காரனும் மூண்டு நாளைக்குப் பிறகுதான் பந்தலை பிரித்து எடுத்துக் கொண்டு போவான். கதிரைகளும் அவன்தான் கொண்டுவந்து போட்டவன். பொழுது படுகிற நேரமாய்த்தான் வருவாங்கள்”.

“கதையோட கதை நீங்கள் பலகாரத்தை எடுங்கோ”. என்று இரண்டு தரம் அவர்களைத் தூண்டினார். “பிள்ளை ரீயைக் கொண்டு வாவன்….”.

வந்தவர்கள் போதும் போதுமென சொல்லிக் கொண் டனர்.

“என்ன அண்டைக்கு வந்திருந்தால் நல்ல சாப்பாடு. சாப்பிட்டவை எல்லோரும் நல்ல சாப்பாடு நல்ல சாப்பாடெண்டு சொன்னவை. இப்படியான இடங்களில் சாப்பாட்டில் கவனம் எடுக்க வேணும்.என்ன சொல் றீங்க…..?” வந்திருந்தவர்களும் உண்மைதான் என சொல்லியும் தலையாட்டியும் கொண்டனர். இந்த சாப்பாட்டுக்கு இல்லாவிட்டாலும் சே!,அண்டைக்கு வந்திருக்கலாம். இண்டைக்கு வந்து இந்த ஆளின்ரை அறுவைக்குள்ளே சங்கடப்பட வேண்டி வந்திட்டுதே என்று தமக்குள் நினைத்துக் கொண்டார்கள்.

“இப்ப பாருங்கோ,கோயில் என்றால் அந்த கோயிலுக்கு பொறுப்பாக ஒரு சமையல்க்காரன் இருப்பான். அவன் தன்ரை இஸ்டத்துக்குத்தான் சமைப்பான். இது நாங்களே வீட்டில் எண்டபடியால் நல்ல சமையல்காரர்களுக்கு சாமான்கள் வாங்கி கொடுத்துத் தரமான மரக்கறிகளை வாங்கிக் கொடுத்துச் சிறப்பாகச் செய்யலாமெல்லோ”. ரீயைக் கொண்டு வந்து கொடுத்துட்டு தந்தையின் கதைகளிலிருந்து ஓய்வு கொடுத்தாள் மகள்.

“பிள்ளை ஜனா என்ன செய்கிறாள். அவளை கூட்டிக் கொண்டு வா. அவையும் பிள்ளையைப் பார்க்க வேண்டும். விரும்புவினந்தானே”.

வந்தவர்களும் பிள்ளை வந்தால் பிள்ளையிடம் கொடுக்க வேண்டிய பரிசுப் பொருட்களை அல்லது பணத்தைக் கொடுத்திட்டுப் போகலாம் என்று நினைத்துக் கொள்கின்றனர். அதுதானே அவர்கள் வந்ததன் நோக்கம்.

அவர்களும் தங்களுக்கு இருந்த அவசர அவசிய வேலைகளை ஒப்பிக்கின்றனர். உரிய நேரத்தில் சபைக்கு நிற்க முடியாத நிலையையும் நின்றிருக்க வேண்டும் என்ற ஆதங்கத்தையும் சேர்த்துக் கதைத்துக் கொண்டிருந்தனர். முந்தநாள் ஒரு கல்யாண நாளுங்கூட. அந்தக் கல்யாணத்தில கட்டாயம் கலந்து கொள்ள வேண்டிய நிர்ப்பந்தத்தைச் சொன்னாள். யாழ்ப்பாணம் ஹொஸ்பிட்டலில் ஒரு கிளினிக் இருந்ததாக மற்றொருவர் சொன்னார். கட்டாயம் போய் நிற்க வேண்டிய வேலை ஒன்றை ஒருவர் கூறினார்.

“பரவாயில்லை எல்லோருக்கும் வசதியும் வாய்ப்பும் வாறதில்லைத்தானே.அதுகளையும் பார்க்கத்தானே வேணும்” என்று மகள் கூறுகிறாள்.

“பிள்ளை அது சரி இப்ப நீ போய் ஜனாவைக் கூட்டிக்கொண்டு வா” என்று சொல்கிறார். “ஜனா ஜனா” என்று அழைத்தபடி அவள் வீட்டுக்குள் போகிறாள்

“சே...நேற்று நாள் கூடாது. கள்ள வியாழன் கழுத்தை அறுப்பான் என்று முன்னோர்கள் சொல்லி வைத்ததால நேற்று ஒருத்தரும் பெரிசா வரேல்லை. நாங்கள் நாள் கோள் பார்ப்பதை விடவும் கூடாது”. தன்னுடைய சோதிட அறிவையும் சொல்லிக் காட்டுகிறார்.

“என்ன நேற்றைக்கு வந்திருந்தால் வீடியோ, போட்டோ எடுத்து சென்றிருக்கலாம்” என்று சொல்லி திரும்பிப் பார்க்க மகளும் பேத்தியும் வந்து கொண்டிருக்கிறார்கள். நேற்றிருந்த மேக்கப் இல்லாதது செல்வநாயகப்பாவுக்குக் கொஞ்சம் கவலை தான். இருப்பினும் பேத்தியின் முகத்தின் பொலிவும் பூரிப்பும் திருப்தியைத் தருகிறது. உரிச்சு வைச்சு தகப்பனைப் போலத்தான். நல்ல நிறமும் வளத்தியும் உடற்கட்டும்... என வந்தவர்கள் சொல்லும்போது கறுத்த சிறிய தோற்றம் கொண்ட தன் தோற்றமும் தன்மகளின் தோற்றமும் கொஞ்சம் உறுத்தினாலும் அவர்கள் சொன்னதை ஆமோதிப்பது போல “உவள் அவ பேத்தியாரைப்போல மரும கன்ரை தாயைத் தெரியுமா?” என்று கேட்டு அவர்களின் பதிலை எதிர்பார்க்காது உரிச்சுப் படைச்சு லட்சுமி அக்காத்தை உவள்” என்று புளகாங்கிதத்துடன் சொல்கிறார்.

வந்தவர்கள் பிள்ளையிடம் பரிசுப் பொருட்களை, பணத்தை கொடுக்கும் போது மகளிடம் “பிள்ளை உந்த ரெலிபோனில படமெடுக்கலாமெல்லே...பின்னை எடன் பிள்ளை…”

“ஓமப்பா”என்று சொல்லியபடி போனை எடுத்து வரப்போகிறாள்.

“இந்தக் காலம் பல வசதிகள் வாய்ப்புகள். எங்கடை காலத்தில போட்டோ எடுக்கிறதெண்டால் பருத்தித்துறை குகன் ஸ்ருடியோவுக்குத்தான் போக வேணும். இனி கார் பிடிக்க வேணும். எத்தினை அடுக்குகள் பண்ண வேணும்…எத்தனை பாடுகள். இப்ப எல்லாம் கையுக் குள்ளை. அதுவும் நல்லதாப் போச்சு . படம் எடுத்திட்டா அந்தக் குறையும் இல்லாமல் போயிடும்”.

“இப்ப வீடியோவும் எடுக்கலாம் அம்மப்பா”.

“அப்ப அதையும் எடுத்துவிடுவம்”.

”அம்மப்பா....முந்தநாள் எடுத்த வீடியோவில போட்டோவில் சேர்த்துவிடலாம்”.

“அப்படியே உனக்கு அல்பம், வீடியோ இன்னும் சிறப்பாய் வந்தால் சந்தோசம் தானே”
“என்னை விட உங்களுக்கு தான் பெரிய சந்தோசமா யிருக்கிறது. ”

“எனக்கும் சந்தோசம்தான் பிள்ளை உன்னுடைய சந்தோசம் தான் என் சந்தோசம்” என்று சொல்லிய படி பேத்தியை அணைத்துக்கொள்கிறார்.

மாலை மயங்கும் நேரம். வெள்ளை கட்டிய வேலுப் பிள்ளை வருகிறார். “வா.வாடாப்பா எங்கை ஆளைக் காணேல்ல என்று யோசித்துக் கொண்டிருக்கிறன்”. “பள்ளிக்கூட உடுப்புகள் கொஞ்சம் கிடந்தது. தேய்ச்சுப் போட்டு வாறன். சொன்னபடி நேரத்திற்குக் கொடுக்க வேணுமெல்லே.” வேலுவின் வேலையில் யாரும் குறை சொல்லமுடியாது. அவ்வளவு நேர்த்தி. ஜனா வந்து சொல்லியவை அவருக்கு நினைவுக்கு வருகிறது .

“அம்மப்பா நான் போட்டுக் கொண்டு போற யூனி போமைப் பார்த்து எங்கள் வகுப்பு பிள்ளைகள் கேப்பினம் என்னடி இவ்வளவு நீற்றா இருக்கிறது இந்த யூனிபோம் . அவ்வளவு அழகா இருக்கும் .அளவாக நீலம் போட்டு அயனும் நல்லா இருக்கும்.”

வேலுப்பிள்ளை கொஞ்சம் காசு வைச்சு வட்டிக்குக் கொடுப்பதாகவும் கதை அடிபடுகிறது. ஆள் நல்ல பிரயாசை. மனிசியும் நல்ல சிக்கனம். ஒத்தாசை. இனிக் குடிவெறியுமில்லை. வீட்ல கொஞ்சத் தோட்டமும் செய்யிறதாக் கேள்வி. பின்னை வசதி வாய்ப்புக்கென்ன குறை?.

”இந்தா வெத்திலையைப் போடு” என்று கூறி வெத் திலைத் தட்டத்தைக் கொடுக்கிறார்.

”நான் போடுவதில்லை. ஏன் உங்களுக்கு தெரியாதே.. வெள்ளைகளோட வேலை செய்யும் நாங்கள் போட்டால் பல கரைச்சல்.”

“அதுசரி அண்டைக்கு பலகாரம் எல்லாம் கொண்டு போனியே?”.

“இல்லை . நான் முதல்நாள் கட்டிப்போட்டுப் போனன். பிறகு நிலபாவாடை அடுக்குகளைப் பார்த்துக்கொண்டு நிண்டன். சாப்பாட்டு நேரத்துக்கு நேரம் போயிடு மெண்டு உடனே போயிட்டன்”.

“பிள்ளை வேலு வந்து நிக்குது. அண்டைக்குப் பலகாரமும் ஒன்றும் கொடுக்கவில்லை”. வேலுப்பிள்ளை சாப்பாட்டு நேரத்துக்கு வந்து சாப்பிட்டிட்டு சாப்பாடும் எடுத்துக்கொண்டு போகவில்லை என்பது செல்வநாயகப் பாவுக்குக் வருத்தந்தான். இப்ப அதுகளை உவை பெரிசா விரும்பிறதில்லையாம் என்று தனக்குள் எண்ணிக்கொண்டார்.

“பிள்ளை கொஞ்சம் பலகாரம் கொண்டுவா. கையோட தேத்தண்ணியும் போட்டுக் கொண்டு வா” என்று சத்தமாகக் கூறுகிறார்.

“ஏன் இப்ப அதுகள கஸ்டப்படுத்துறியள். அதுகளும் எத்தனை நாட்களாக எவ்வளவு வேலைகளைச் செய்து .... நானும் இப்ப பலகாரத்தைத் திண்டிட்டுப் போய் பிறகு இரவு சாப்பிடவும் ஏலாது.”

“ஏன்ராப்பா உனக்கும் இப்ப இந்த பணக்கார வருத்தம் ஏதும் இருக்குதே”.

வேலுப்பிள்ளை ஒரு மாதிரி பார்ப்பதைப் பார்த்து... ..“அதுதான்ராப்பா உந்தச் சீனி வருத்தத்தைத் தான் சலரோகம் எண்டதிற்குப் பதிலாக...”.

“இல்லை வருத்தம் ஒன்றும் இல்லை” .

“பின்னை, உனக்கெப்படி வரும். எவ்வளவு வேலையைச் செய்கிறாய். உந்தச் சயிக்கிளில கொஞ்ச நஞ்சத் தூரமே ஓடுகிறாய். உனக்கேன் வருத்தம் வருகுது. சரி சரி பின்னைப் பலகாரத்தை அவள் பொடிச்சி யிட்டைக் கொண்டு போய்க்குடன்.”

“பிள்ளை வேலுவின்ரை பலகாரத்தைக் கட்டிக் கொண்டு வா”. கூறியபடி “அது சரி உன்ரை கணக்கை ஒருக்காச் சொல்லன்”.

”உங்களோடை என்னத்தைக் கதைக்கிறது. நிலபாவா டையும் கோயிலடியிலிருந்து பந்தல் வரைக்கும் போட்டது. அதுக்கும் நாலு பேரைக் கூட்டிக்கொண்டு வந்தனான். இனிப் பந்தலும் பெரிய பந்தல்தானே”.

“அது சரி. அதை யாரும் மறுக்கிறமே. நீ இப்ப கணக் கைச் சொல்லன்”.

“எல்லாமாக இருபத்தைந்தாயிரம் தாங்கோ.” செல்வநாய கமப்பா ஒரு கணம் திகைத்துப் போனார். ஒரு மாதிரி தன்னைச் சுதாரித்துக் கொண்டவர்”

“சரி வேலு ..நாலு பேரைக் கேட்டு விட்டு தாறனே” என்றார்.

வேலுப்பிள்ளைக்குக் கோபம் தலைக்கேறி விட்டது.“எனக்கு உங்கடை காசு வேண்டாம்” என்று சொல்லிக் கொண்டு தான் கட்டி வைத்த பொட்ட ளியைத் தூக்கிச் சைக்கிள் கரியரில் கட்டிக் கொள்கிறான்.

“ஏன்ராப்பா கோவிக்கிறாய் ? நாலு பேரைக் கேட்டு ஊர் வழக்கப்படி தாறனெண்டுதானே சொல்றன்”.

“நீங்கள் வேலு வெள்ளை கட்டு, நிலபாவாடையும் போட வேண்டும் என்று சொன்னவுடன் நாலு பேரைக் கேட்டிட்டு வந்து நான் கட்டேல்ல. இப்ப நீங்க நாலு பேரைக் கேட்டிட்டுத் தாறன் என்று சொல்லுறீங்க. எனக்கு உந்த காசு வேண்டாம். நான் போட்டுவாறன்.” என்று சொல்லிக்கொண்டு வேலு சைக்கிளில் ஏறிப் போகிறான். பலகாரப் பாசலுடன்வந்த மகள் வேலுப் பிள்ளையைக் காணவில்லையே என்று தகப்பனைப் பார்க்கின்றாள். செல்வநாயகப்பா நாடியில் கையை வைத்துக்கொண்டு வேலுப்பிள்ளை போகின்ற பாதையைப் பார்த்துக்கொண்டு நிற்கிறார்.

## கருகு குறுங்கதை

# இல்லாதபோது...

மிச்சப்பட்ட பாண் துண்டுகளை அவர்
தமது வீட்டு வாசலில் நின்று காகங்களுக்குச்
சின்னச் சின்னத் துண்டுகளாகப் பிய்த்துப்
போட்டுக் கொண்டிருந்தார்.
ஒரு துண்டு போடும்போது ஒரு காகம் மட்டுமே
வந்தது. மற்றத் துண்டுக்கு
நான்கைந்து காகங்கள் வந்தன.
துண்டுகளை மீண்டும் மீண்டும் போட
நூற்றுக்கணக்கான காகங்கள் வந்துவிட்டன.
சிறிது நேரத்தில் அவரின் கைவெறுமை ஆனது.
காகங்களின் எண்ணிக்கையும் குறைந்து
குறைந்து... அந்தத் தெரு வெறுமையானது.
அவரின் கண்கள்... காகங்களே அற்றதெருவி
னைப் பார்த்தும் பார்க்காமலும் மூடிக்கொண்டன.

*திருமலை சுந்தா*

## முதுகுவலி

மனிதன் இரண்டு கால்களைக் கொண்டு நேராக நிமிர்ந்து நடப்பது அவனுக்குரிய தனித்துவமும் இன்னொரு பண்புநலனாகும். நிமிர்ந்து நிற்கும்போது விலங்குகள் அல்லது எதிரிகள் யாரேனும் வருகிறார்களா அல்லது ஒளிந்திருக்கிறார்களா என்று நோட்டம்விடுவது இலகுவாக இருந்தது. நடக்கும்போது மனிதனுக்குக் கைகள் தேவைப்படுவதில்லை. எனவே எறிதல் சமிக்ஞை செய்தல் போன்றவற்றிகு நம்மால் கைகளைப் பயன்படுத்த முடிகிறது. இந்தக் கைகளால் எவ்வளவு அதிகமான விடயங்களைச் செய்ய முடிந்ததோ அந்தக் கைகளுக்கு உரியவர்கள் அவ்வளவு அதிக வெற்றிகரமாகத் திகழ்ந்தனர்.எனவே பரிணாம வளர்ச்சியின் தேவையானது உள்ளங்கைகளிலும் விரல்களிலும் நரம்புகள் மற்றும் தசைகளின் அடர்த்தியை அதிகரித்தது. அதன் விளைவாக மனிதர்கள் தங்கள் கைகளைக் கொண்டு மிக நுண்ணிய வேலைகளைச் செய்யும் திறனைப் பெற்றனர். குறிப்பாக மேம்பட்ட கருவிகளை அவர்களால் தயாரிக்கவும் பயன்படுத்தவும் முடிந்தது. மனிதர்கள் கருவிகளைத் தயாரித்தனர் என்பதற்கான முதல் ஆதாரம் சுமார் 25 லட்சம் ஆண்டுகள் பழமையானது. கருவிகளின் தயாரிப்பு மற்றும்அவற்றின் பயன்பாட்டைக் கொண்டுதான்
தொல்பொருள் ஆய்வாளர்கள் பண்டைய மனிதர்களை இனங்காணுகின்றனர். ஆனால் நேராக நடப்பதில் ஒரு பிரச்சினையும் இருக்கிறது. நம்முடைய மனிதக்குரங்கு மூதாதையரின் எலும்புக்கூடு நான்கு கால்களைக் கொண்டு நடந்த ஒரு சிறிய தலையைக் கொண்ட ஒரு விலங்கைத் தாங்கிப் பிடிப்பதற்காகவே பல லட்சக்கணக்கான ஆண்டுகளாக வளர்ந்திருந்தது. எனவே நேராக நிற்கும் ஒருவிலங்கைத் தாங்கிப் பிடிப்பதற்காக குறிப்பாக பெரிய மண்டையோட்டைத் தாங்கிப் பிடிக்க வேண்டியிருந்தது. இது ஒரு சவாலான விடயமாகவே இருந்தது. மனித குலம் தன்னுடைய பிரமாண்டமான கனவுகளுக்கும் சுறுசுறுப்பான கைகளுக்கும் முதுகுவலி கழுத்துப் பிடிப்பு ஆகியவற்றின் வடிவில் ஒரு பெரிய விலையைக் கொடுக்க வேண்டியதாயிற்று.

**நன்றி : சேப்பியன்ஸ்**

# ஊன்று கோல்

## தெளிவத்தை யோசெப்



வானத்துச் சரிவில் நிற்கும் கதிரவன் வளர்த்துவிடும் நிழலாய் நீண்டது அம்மாவின் நினைவு.

நினைவை நீட்டிவிட்ட குரல் கதவடியில் பலமாகக் கேட்டுத் தேய்ந்து தெருவோடு போயிற்று. "அம்மோவ்" என்னும் அவனுடைய குரல் அச்சாக அவருடைய குரலே போன்ற அந்தக் குரல். எத்தனையோ தடவை அம்மாவே ஏமாந்திருக்கிறார்கள்.

அவர்தான் கூப்பிடுகிறாரோ என்று கை வேலையையும் போட்டுவிட்டு ஓடி வந்து பார்த்தால் அவர் அயர்ந்து தூங்கிக் கொண்டிருப்பார். நெகிழ்ந்து கிடக்கும் போர்வையைச் சரிசெய்துவிட்டு வெளியே மெதுவாக எட்டிப் பார்த்தால்... பிதுங்கி வழியும் கீரைக் கூடையைத் தலையுடன் சேர்த்து இடக்கரம் அணைந்திருக்க, வலக்கரத்தில் தளதளக்கும் கீரைக்கட்டுடன் அவன் தான் நிற்பான்.

கைக்கடங்காத கட்டுக்கீரை அவன் பிடியில் ஒரு விநாடி மொறு மொறுத்து அம்மாவின் முந்தானையில் விழும். அவன் கீரைக்கட்டை உதறிக்காட்டிய வேகத்தில் நுணுங்கி விழுந்த இரண்டோர் இலைத்துகள்களையும் சிதறி விழுந்த நீர்த்துளிகளையும் காலால் தேய்த்து வாசல் கல்லில் தள்ளிவிட்டு அம்மா உள்ளே போவதற்குள் அவன் அடுத்த வீட்டுப்படியில் "அம்மோவ்" என்று நிற்பான்.

"அசல் அவர் மாதிரியே" என்று முனகிய வண்ணம் அவர் சாய்ந்து கிடக்கும் கட்டிலையும் எட்டிப் பார்த்துக் கொண்டு உள்ளே நடக்கும்போது அம்மாவின் உயிர்கூடச் சிரித்துக்கொள்ளும். அவன் அடுத்த வீட்டிலும் "அம்மோவ்" என்பதைக் கேட்பதற்காக நிற்கும் இடைநேரத்தில்தான் அந்தத் தண்ணீர்த் தேய்ப்பும் தள்ளலும்.


அடுப்படியை அடையுமுன்னமே "அம்மா" என்று குரல் வரும் உள்ளறையிலிருந்து. அம்மிக்கல்லின் மேல் கீரையை வீசிவிட்டு உள்ளே ஓடினால்..

வலது முழுங்கையைக் கட்டில் சட்டத்தில்

**சிறப்புச் சிறுகதை**

# தெளிவத்தைஜோசப்

சந்தனசாமி ஜோசப் என்ற இயற் பெயரைக் கொண்டவர். தெளிவத்தை எனும் கிராமத்தில் ஆசிரியராக இருந்தவர்.



இதனால் தெளிவத்தை எனும் பெயர் அவரோடு ஒட்டிக் கொண்டது. இலங்கையின் மலையகப் படைப்பாளிகளில் முக்கியமான ஒருவர் அறுபதுகளில் எழுதத் தொடங்கி எழுபதுகளில் தனித்துவம் மிகுந்த ஒரு எழுத்தாளராகப் பரிணமித்தவர்.

காலங்கள் சாவதில்லை என்பது இவருடைய முக்கியமான நாவல். நாமிருக்கும் நாடே சிறுகதைத் தொகுதிக்காக இலங்கைச் சாகித்ய விருது பெற்றுள்ளார். இவரது குடநிழல் என்ற புதின நூல் 2010 ஆம் ஆண்டுக்கான யாழ் இலக்கிய வட்டம் - இலங்கை இலக்கியப் பேரவை எனும் விருதைப் பெற்றது.

2013 ஆம் ஆண்டுக்கான விஷ்ணுபுரம் விருதையும் பெற்றுக் கொண்டார். இவரது தெளிவத்தை யோசப் கதைகள் என்னும் தொகுதியிலிருந்து இக் கதை எடுக்கப்பட்டுள்ளது.

தேய்த்துக் கொண்டிருப்பார். அம்மாவுக்குத் தெரியும் அதன் சூட்சுமம். அவருடைய கையைப் பற்றித் திருப்பிய வண்ணம் மெதுவாகக் கட்டிலடியில் அமர்ந்து முழங்கையைச் சொறிந்து கொடுப்பார்கள். அரித்த இடத்திற்கு அந்தச் சொறிவு தரும் இதம் அவரைவிட அம்மாவுக்கே அதிகம். முதிர்ந்த அந்த முகத்தில் விரிந்து கிடக்கும் மந்தகாசம் அவருக்குப் பணிவிடை செய்வதில் கிடைக்கும் மனமகிழ்வுக்கு ஓர் எடுத்துக்காட்டு. அவருடைய வாயில் வார்த்தைகள் குழறும். அவருக்குச் சொல் தெரியும்.... சொல்லவும் தெரியும்.... ஆனால் சொல்லத்தான் முடியாது. சொல்ல வேண்டியதற்குச் சரியான உருவம் தரச் சக்தியற்ற வாய். “வாடா கண்ணே” என்று கூற நினைப்பதை “வாழா கழ்ழே” என்றே ஒலி செய்கிறது அவருடைய வாய்.... சக்தியிழந்த வாய்.

இழுத்துக் கட்டிய மத்தளத் தோலில் கத்தி முனையால் ஒரு கொத்துப் போட்டது போல. வலப்பக்கம் மட்டுமே வாய் சிறிது பிளந்திருக்கும். இடப்புறம் பசைபோட்டு ஒட்டியது போல் ஒட்டிக் கொண்டிருக்கவில்லை என்றாலும் திறக்க முடியாத ஒரு நிபாத நிலை.

ஒரு நாள் ஊன்றி நின்ற கால்தான். தனியாக அல்ல... அம்மாவையும் தாங்கிக் கொண்டு. அதில் ஒன்று இன்று சூம்பிக் கிடந்தது. அடித்து, அணைத்து, ஆதரித்த கைகள்தான். அவற்றில் ஒன்று அசைவற்றுக் கிடந்தது. அடித்துப் போட்ட பாம்பாய்.

இடக்கை, இடக்கால் எல்லாமாய் முழு இடப்பக்கமுமே இரத்தமின்றிச் செத்துப்போய், வேரிலே பூச்சி விழுந்த மரமாய் வெம்பிக் கிடந்தது. இருப்பது, எழும்புவது, உண்பது, உடுப்பது, ஒன்றுக்கு இரண்டுக்குப் போவது எல்லாமே துணையுடன்தான்.

தம்மையே துணை என்று வந்து தமக்கே துணையாகிவிட்ட தம் துணைவியை அவர் பார்த்தார். அந்தப் பார்வையிலே பாறையாகிக் கிடந்தது கணவன் மனைவியைப் பார்க்கும் பாசமா, நம்பிக்கையா எது என்பது?

ஊதிவிட்ட பஞ்சுத் திவலைகளாய் நுரைத்துக் கிடக்கும் அம்மாவின் நரைத்த தலையை அவருடைய வலக்கரம் நீவித்தருகிறது. தலை நடுவே ஓடித் தலைமயிரை இருபாதியாகப் பிரிக்கும் அந்தச் சுண்டு விரலளவு கோட்டில் நெற்றித்தொட்டு உச்சிவரை ஊர்கிறது அவருடைய விரல். அவருடைய விரல் நடை தந்த கிளர்வு அம்மாவை எங்கோ இட்டுச் செல்கிறது. என்றோ காலியாகிவிட்ட பெருங்காயச் செப்பாக அம்மாவின் காலியாகிவிட்ட வாழ்வின் ஆதி நாளைய மணம் குப்பென்று மணத்தது. அவருடைய விரல் தந்த உணர்வில் கண்கள் மூடிக்கொள்கின்றன. மனம் பார்க்கத் தொடங்கி விட்டால் கண்ணுக்கு வேலை ஏது?

கண்கள் மூடிக்கிடக்கக் கை மாத்திரம் அவருடைய முழங்கையைச் சொறிந்து கொண்டே இருக்கும். அவரும் கையை வளைத்தும் திருப்பியும் கொள்வார். சொறிவு தரும் உணர்வுக்கேற்ப அம்மாவின் தலையில் ஓடும் விரல் நடை பிறழாமல்.

“எனக்கு முந்தி நீ போயிட்டீன்னா? என் பாடு நடுவீதி நாய்தான்!” தமக்கே சொல்லிக் கொள்கிறார். அம்மா நடந்ததை நினைக்கையில்

அவர் நடக்கப்போவதை நினைக்கிறார்.

அம்மா திடுக்கிட்டு விழிக்கிறார்கள். அவர் குழறுவது நமக்குத்தான் புரியாது. அம்மாவுக்கு நன்றாகப் புரியும். அவருடைய ஒரு பக்கத்து உதடுகள் கோணல் மாணலாக நெளிந்தன. இதயத்தின் வேதனை. துடிப்பு, பிழவு அதில் எழுதி ஒட்டியிருக்கிறது.

துடிக்கும் அவருடைய உதட்டை அழுத்திமூடி, சொறிந்து விட்டுக் கொண்டிருந்த கையைத் தன் நெஞ்சோடு அணைத்துக் கொண்டு அம்மா குமுறுகிறார்கள். அந்த நெஞ்சின் துடிப்பை அந்தக் கை உணர்ந்திருக்கும். "இல்லை.... இல்லை" என்பதுடன் நிறுத்திக் கொண்டு வெகு சிரமத்துடன் நெஞ்சுவரை வந்துவிட்ட வார்த்தை களை விழுங்கிவிட்டு வேறு புறம் முகத்தைத்திருப்பிக் கொள்ளுகிறார்கள். தம் கண்ணீரை மறைக்க அல்ல, அவர் கண்ணீரைக் காணச் சகியாமல்.

"உங்களை விட்டுவிட்டு நான் சாகமாட்டேன்" அப்படி என்றால் உங்களைக் கொன்றுவிட்டுத்தான் நான் சாவேன் என்பது போலத்தானே? எந்தத் தமிழ்ப் பெண்ணாவது தன் கணவனிடம் இதைக் கூறுவாளா? மஞ்சளுடன் போவதில்தானே மகிமை, மகிழ்வு எல்லாம்?

நெஞ்சுவரை வந்துவிட்ட வார்த்தைகள் உள்ளிறங்கையில் கூட அம்மாவுக்கு எத்தனை அருவருப்பு. குமட்டிய வாந்தியைத் துப்ப வழியின்றி விழுங்குவதைப்போல் அம்மா அவருக்கு முன் இறப்பாள் என்று எண்ணுவதே பாவமாயிற்றே. அம்மா இறந்துவிட்டால் அவர் கதி?

"அம்மா, அம்மா" என்று நொடிக்கு நூறு தரம் அந்த உள்ளறையிலிருந்து குரல் வந்து கொண்டே இருக்குமே, அதற்கு யார் பதில் கூறுவது?

அம்மாவும் அலுக்காமல் சளைக்காமல் நடந்து கொண்டே இருப்பார்கள். இருக்க நடக்கக் கணக்குப் பார்த்தால் நடக்குமா? உள்ளறைக்கும் சமையலறைக்குமாக அம்மா போடும் நடைகளை நீட்டிப்போட்டால் நாளுக்கு நாற்பது மைல் குறையாது.... அத்தனை நடை!

இடுப்பு வேட்டி நழுவித் தொடையில் கிடக்கும், அதற்கு ஒரு தரம் அம்மா... எழுந்து சற்று உட்கார வேண்டும் அதற்கும் அம்மா.... ஒன்றுக்குப் போக, அம்மா... ஊட்டிவிட, அம்மா... ஆக வேண்டிய அத்தனை மனிதத் தேவைகளுக்கும் அம்மா... அம்மா... அம்மா... தான். அந்த அம்மா இல்லாவிட்டால் இத்தனை தேவைகளையும் யார் கவனிப்பார்கள்? யாரால் கவனிக்கமுடியும். மனம் சளைக்காமல்? அம்மா ஆணாய் நின்று சமாளிக்கக் குடும்ப பாரம் ஒன்றும் பெரிதல்ல என்றாலும் தூணாய் நின்று சுமக்க வேண்டி இருக்கிறதே அவரை. என்றுமே அவர் இப்படி இருந்ததில்லை. அன்றெல்லாம் ஆலமரமாகத்தான் நின்றார். ஆயிரம் பேருக்கு நிழல் கொடுத்துக்கொண்டு. மோதிரத்தில் பதித்த இரத்தினமாய் ஈழத்தின் மத்தியில் பதிந்துவிட்ட மலை நாட்டில் அவரும் இலையாக நின்றார். பட்ட ணத்தில் இருப்பவர்களுக்குப் போலப் பச்சைக் கண் ணாடி தேவையில்லை. பச்சையைப் பார்ப்பதற்கு. அண்ணாந்து பார்த்தால் பரந்த நீலம். குனிந்து பார்த்தால் பரந்த பச்சை.

மலையோடு மலை இணையும் பள்ளங்களில் நெகிழ விட்ட துகிலாய்ச் சலசலத்தோடும் அருவிகள். கடலிலே காற்று நீல அலை எழுப்புவது போலத் தேயிலை மலையிலே காற்று, பச்சை அலை எழுப்பும். பார்வை பட்ட இடமெல்லாம் பசுமை என்றால் செழிப்பு என்பது தானே பொருள்?

அவரும் செழிப்புடன்தான் இருந்தார். பச்சைப்பசேல் என்று. வெயில் மழை பாராமல் உழைத்தார். தனக்காக உழைப்பவர்களை தாழ்த்தியே வைப்பதுதான் தேயிலை யின் குணமோ என்னவோ உயர்ந்து நின்ற அவரும் குனிந்தார்.

ஆலமரத்தின் அடியிலேயே வெயில். பால்வனமாய் இருந்த வாழ்வு பாலைவனமாயிற்று. கால் ஊன்ற முடியாத கனல். அதில், பெண் நிழலில் அவர் நிற்க வேண்டிய நிர்பந்தம்.

இந்த வியாதி தனக்கு எப்படி வந்தது என்பதே அவருக்குத் தெரியாது. நோய் எமனைப்போலத் திடுதிப்பென்று வருவதில்லை! அறிகுறிகளுடன்தான் வரும். நமக்கு ஏன் இந்த வியாதி வரப்போகிறது என்ற அசட்டையில் நாம் தாம் ஆரம்பத்திலேயே கவனியாமல் வளர்ந்து முற்றிய பிறகு வருந்துகின்றோம். அவரும் அப்படித்தான். நாற்பது வயசு நாற்பத்திரண்டாகும் இரண்டு வருட இடைக்காலத்தில் என்ன என்னவோ நடந்துவிட்டது. இரண்டாக இருந்தவை எல்லாம் அவர் வரையில் ஒன்றாகி ஒன்றாக இருந்ததெல்லாம் பாதியாகி....

நினைக்கச் சுடும் நரக வேதனை! அனுபவிப்பவருக்கு எத்தனை எத்தனையோ வைத்திய நிபுணர்கள், எத்தனை எத்தனையோ புதுமுறை வைத்தியர்கள், மருந்து

மாத்திரைகள் என்ற நிமிடத்துக்கு நிமிடம் மணிக்கு மணி கண்டு பிடித்துக் கொண்டே இருந்தாலும் அத்தனை மருந்து மாயங்களாலும் அத்தனை நோய்களுமா தீர்ந்துவிடுகின்றன? ஐம்பது புது முறைகள் என்றால் நூறு புது வியாதிகள்!

முடமாகி.... முடங்கி.... மூலையில் விழுந்த பின்னும், பங்களாக் கொடுத்து, சம்பளம் கொடுத்து வைத்திருக்கத் தோட்டத்தாருக்கு என்ன பைத்தியமா? அனுப்பிவிட்டார்கள்.

அதன்பிறகு....

அவருடைய உடலில் பாதி அம்மாதான். செத்துப்போன பாதி உடலை இட்டு நிரப்பும் பொறுப்பு அம்மாவினுடையதாகிவிட்டது.

மனைவி என்ற பதமே மறந்து அம்மா என்ற சொல்லுக்கு ஆதரவு என்பதே பொருளாகிவிட்டது. நெய்யே தொன்னைக்கு ஆதரவாகிவிட்ட ஓர் நிர்ப்பாக்கிய நிலை. மலைநாட்டின் குளிர்காற்றோ கீரிமலையின் கடற்காற்றோ அவருடைய பாரிசவாதத்திற்கு பலன் அளிக்கவில்லை. வைத்தியர்கள் இருகையை விரித்தது போல இயற்கையும் தன் பெருங்கையை விரித்து விட்டது. விளைவு? ஒருவரே மற்றவருக்கு அனைத்துமாகி அன்றாடம் நாம் மேலே கண்ட அதே காட்சிதான்.

பால் இருந்த பாத்திரத்திலே இன்று பாஷாணம் இருக்கிறது. பாத்திரம் ஒன்றுதான் என்றாலும் பாஷாணம் தனித்துத்தான் இருக்க வேண்டும் என்பது பெரியவருடைய கட்சி. ஆகவே மக்களாலும் அவரைத் தம்முடன் இருந்திக் கொள்ள முடியவில்லை. இந்த வண்டியையும் நூல் கட்டி இழுப்பவர்கள் அவர்கள் தாம். "எலெக்ட்ரிக் பில்"லிலிருந்து எல்லாமே நாளை என்று இல்லாமல் நடக்கிறது. அலுங்காமல் நலுங்காமல்.தந்தையால் அம்மா படும் அவஸ்தை மக்களின் மனத்தை வெகுவாகப் பாதித்தது. ஆகவே அடிக்கடி "அந்தக் கண்ராவியை பார்க்க இயலாது" என்ற வருவதில்லை. அவர் இறந்துவிட்டால் என்ன என்று கூடச் சிற்சில வேளை எண்ணுவார்கள். ஏன் எண்ண மாட்டார்கள்?

அவரைக் கட்டிக்கொண்டு அம்மா அழுவது. எந்த நேரமும் அறைக்குள்ளே பூட்டிக் கிடப்பது. எல்லாம் "பேன் கட்டிக்கல் இழுப்பது" போன்ற பேதமை என்பது அவர்களுடைய கருத்து. அவர்களுடையது மட்டுமல்ல! பொதுவாக அண்டை அயலர்வாசிகள் அத்தனை பேருடைய கருத்தும் அதேதான்.

அன்று மூத்தவனுடைய கல்யாணத்தின் போது கல்யாணம் பெண் வீட்டில் நடந்தது. அவரைக் காரில் ஏற்றிக் கொண்டு போய் கல்யாண வீட்டில் போட அம்மா பட்டபாடு...

எத்தனைபேர் நினைத்திருப்பார்கள்.... சொல்லாவிட்டாலும், "ஏன் இந்த மனிதன் செத்துத் தொலையக்கூடாது?" என்று!

தானும் வாழாமல் பிறரையும் வருத்திக் கொண்டு இருப்பதை விடச் சாவது நல்லதுதான். ஆனால் "சாவே வா" என்றதும் வந்து விடுமா என்ன?

தூக்குவது, எடுப்பது, பிடிப்பது, காரிலிருந்து இறங்குவது எல்லாம் சுற்றந்தான் என்றாலும் துடிதுடிக்கும் இதயம் அம்மாவுடையதுதானே "எங்கே மோதிவிடுவார்களோ? எங்கே போட்டுவிடுவார்களோ?" என்று கவலை. உடையவனுக்குத்தானே உடைமை பெரிது? ஊரானுக்கு என்ன? "கை வலித்து விட்டு விட்டேன்" என்பான். "சடங்குகளில் கலந்து கொள்ளும் உடல் நிலையா அவருடையது? சொன்னால் கேட்கிறார்களா?"

அவரைச் சாய விட்டிருந்த சோபாவினருகில் அமர்ந்திருந்ததுதான் அம்மாவின் வேலை. அத்துடன் அங்கே எழுந்த மொழிப் பிரச்சினையைத் தீர்த்து வைப்பது. அவர் பேசுவது அம்மாவுக்கு மட்டுந்தானே புரியும்?

மகனையும் மருமகளையும் ஆசீர்வதிக்கையில் அவர் பட்டபாடு... எடுபடாத அவருடைய இடக்கை அவருள்ளத்தில் எரி மூட்டித் தகித்தது.

சுற்றி நின்ற இரண்டொருவர் கையால் வாயைப் பொத்திக் கொண்டார்கள். எங்கே பலமாகச் சிரித்து விடுவோமோ என்ற பயம். நேரடியாகத் தாமே சம்பந்தப்படாதவரையில் மற்றவர்களுடைய துயரம் நகைச்சுவைதானே?

அம்மா அழவில்லை. துயரத்தைத் தேக்கி வைத்தே பழகிவிட்ட அனுபவம் துணை நின்றது. வாழப்போகும் இரண்டு இளசுகளை வாழ்த்தும் நேரம் அழுது வைக்கலாமா அபசகுணம் மாதிரி?

"அந்த மனிதன் இப்படிக் கிடப்பதிலும் இறந்து விடுவது எத்தனை நல்லது!"

"ஆமாம் அந்த அம்மாதான் எத்தனை பாடுபடுறா? வெளியே தெருவில் போறதுக்குக்கூட அவுங்கதானாமே கூட்டிக்கிட்டு போவணும்? சேசே...."

திருமண வீட்டு ஆர்ப்பாட்டம் அடங்கி, அவரும் கண்ண யர்ந்த பின்பு ஒரு நிமிடம் வெளியே நகர்ந்த அம்மாவின் காதில் பழுத்த ஈயக்கோலைப் பாய்ச்சியது, யாரோ இருவருடைய பேச்சு....

இவர்கள் மட்டுந்தானா, எத்தனையோ பேர் எத்தனையோ விதத்தில் கூறிய அதேதான். ஒருவராவது அம்மாவின் முகம் பார்த்துக் கூறியதில்லை. முகத்துக்கு முகம் கூறப்படாதவை நம் செவிக்கு எட்டுவதில்லையா என்ன?

அப்போதெல்லாம் அம்மாவின் உடல் ஒரு கணம் சில்லிட்டாலும் உடனே சுதாகரித்துக்கொள்ளும். அவர் கள் சொல்லுவதிலும் உண்மை இருக்கிறது என்பது நீர்பட்ட கண்ணாடி காட்டும் மங்கல் உருவமாகத் தெரிந்தாலும், உண்மைதான் என்று ஏற்றுக் கொள்ளும் பலம் மனதிற்கு இல்லை.

“இப்படி நடந்துவிட்டால் எப்படித் தாங்குவேன்?” என்னும் விடயங்களும் நடக்காமல் இருப்பதில்லை! அவை நடந்துவிட்ட பிறகு தாங்கிக் கொள்ளாமல் இருப்பதும் இல்லை. இருப்பினம் “அதைத் தாங்கிக் கொள்ளும் பலம் என் மனதிற்கு இல்லை” என்ற ஒரு பலவீனம் எல்லா மனிதர்களிடமுமே உண்டு. அம்மா வுக்கும் அதே பலவீனந்தான்.

அண்டை அயலார் பார்வைக்கும் அம்மாவின் பார்வைக்கும் நிறைய வேறுபாடு உண்டு. அம்மாவின் கஸ்டம் அவரால் அம்மா படும் வேதனை, அவஸ்தை இத்தியாதிகளைக் கண்டே அவர்கள் அங்கலாய்த்தார்கள்! “இத்தனை பெரிய உலகை இரண்டே அறையுள் சுருக்கிக் கொண்டாளே பாவி” என்று. அம்மாவுக்குத் தம் அவஸ்தை ஒரு பொருட்டே அல்ல. அது அவஸ்தை என்றுகூட அவர்கள் கருதியல்லை. நோயின் நோவில் அவர் துடிக்கையில், அதைப் பார்த்துக் கொண்டு, வேதனையைப் பகிர்ந்துகொள்ள முடியாத பாவியாக நிற்கிறேனே என்பதுதான் அம்மாவின் துடிப்பு. இல்லா தவனுடைய கவலை வேறு. இருந்து பின் இல்லையான வனுடைய கவலை. முதலிலும் பார்க்க மூர்க்கமானது. கீரைக்காரனின் குரல் கிண்டிவிட்ட தீயின் சுவாலை அம்மாவின் மனதை எங்கெங்கோ விரட்டிக் கால்களை உள்ளறைக்கு விரட்டியது.

அவர் போய்விட்டார்.

ஆம் அம்மாவின் எத்தனையோ நாள் சுமையை ஒரே நாளில் ஊர் சுமந்துகொண்டு போய்விட்டது. கழுவி குளிப்பாட்டி! தெருவே, ஏன் ஊரே திரண்டிருந்தது என்பதற்கு அந்தக் கையடக்க இல்லத்தில் நேற்று கழுவி விடப்பட்டு இன்று காய்ந்து கிடக்கும் “சிமின்ட” தரை காட்டும் “நசநச” வென்ற அடிச்சுவடுகளே ஓர் எடுத்துக் காட்டு! சிறிதும் பெரிதும் கோணலும் மாணலுமாக.

அத்தனை கூட்டத்திலும் பிதுங்கிய திரட்சியிலும் அவர் மறைவு குறித்து மனம் கசிந்த ஜீவன் ஒன்று. ஆம் அம்மா மட்டுந்தான். மற்றவர்களுக்கு அது மரண வீடாகப் படவே இல்லை. ஓடுவதும், ஓடிவருவதும், பூவைக் கொண்டா, பெட்டியை நகர்த்து என்னும் ஆர்ப்பாட்டம் அனைத்திலும் இழையோடியது. மண வீட்டு மணமே ஒழிய மரண வீட்டு மயக்கமல்ல சடங்கு வேறுபாட்டைத் தவிர.

சிரித்த முகத்துடன் தூங்குபவரைப் போலத்தான் அவர் கிடந்தார். பெட்டி நிறைந்த பூவில் அவர் பிணமாகத் தோற்றவில்லை. சாகப் போகிறோம் என்று தெரிந்தவுடன் சிரித்திருக்கிறார். உள்ளம் வெடிக்கும் புன்னகை. அழகுடன் கிடக்கிறார்.

சாவுக்கு அஞ்சி, அரண்டு உயிர் விட்டவர்கள் தான். பிணமான பின்பு, கோரமாகக் கிடப்பார்கள் போலும் கண்டவர்கள் கதிகலங்கும் வண்ணம்.

அத்தனை பேர் மத்தியில் அழும் திராணி அம்மாவுக்கு இல்லை. பல்லி விழுங்கிய ஈ பல்லியின் அடிவயிற்றில் தெரிவது போல் உள்ளே போட்டு அமுக்கி வைத்திருந்த உள்ளக் கொதிப்பு, இதயக்குமுறல், அத்தனையும் உலர்ந்துவிட்ட உடலில் தெரிந்தன.

“அம்மாவுக்கு இனி விடுதலை”

“அவ்வளவு அவஸ்தைகளும் மடிந்து விட்டன.”

“இனி வெளியே போகலாம், வரலாம்” மரண வீட்டில் அடிபட்ட அனுதாபக் குரல்கள். அம்மாவால் காதைப் பொத்திக் கொள்வதைத் தவிர வேறு என்ன செய்ய முடியும்?

இத்தனை நாளாக இறைவனுக்கும் மேலாக இயம னைத்தான் வேண்டிக்கொண்டார்கள். “அவருக்கு முன்பு என்னிடம் வந்து விடாதே” என்று. இனி என்ன இருக்கிறது?

“என்னைத் தனியாக விட்டுப்போய் விட்டீர்களே!” பிரிந்து கிடக்கும் தலையுடன் கட்டிலில் மோதியழும்

அம்மாவைப் பார்த்தால்!

அவர் இல்லாத அம்மாவா, அம்மா இல்லாத அவரா அனாதை என்பது புரியும்.

அவர் உயிருடன் இருந்துகொண்டு அம்மாவை அழ வைக்கிறார் என்று சொன்ன ஊரும் மக்களும் அம்மாவின் இன்றைய நிலையைப் பார்த்தால்? அவர் இல்லாத உலகமே அம்மாவுக்குக் காலியாகத் தெரிகிறது. அவர் கிடந்த கட்டிலைப்போல. தேவன் இல்லாத கோயிலில் வலம் வர அம்மா விரும்பவில்லை.

"தருமராஜா, எத்தனையோ பேர் உன்னைக் கொடியவன் என்கிறார்கள். என் வரை நீ உத்தமன். என் பிரார்த்தனைப்படியே எனக்கு முன் அவரைக் கொண்டுபோய் விட்டாய். என்னையும்... என்னையும்.." அம்மாவின் கண்கள் மூடிக்கொண்டன.

நொண்டியின் கையில் இருக்கும் வரையில் தானே ஊன்றுகோலுக்கு மதிப்பு?

நொண்டியே போய்விட்ட பிறகு?

## அறிவுக்கதைகள் 1

# உழைப்பு

ஒரு ஊரில் ஒரு விவசாயி இருந்தான். கடின உழைப்பாளி. காலையில் வயலிற்குச் சென்றால் மாலைதான் வீடு திரும்புவான். மனைவி தயாரித்து வைத்திருக்கும் கஞ்சியைக் குடித்துவிட்டுப் படுத்து விடுவான். மீண்டும் காலை வேலைக்கு வழமைபோல் சென்றுவிடுவான். தான் இவ்வளவு கடினமாக வேலை செய்தும் சந்தோசமாக வாழமுடியவில்லை. ஆனால் தன்னை வேலை வாங்கும் பண்ணையார் எவ்வித வேலையும் செய்யாமல் எப்படிச் சந்தோசமாக இருக்கிறார்? இதற்கு விடையை மனை வியிடம் கேட்டுப் பார்த்தான். அவளுக்கும் தெரியவில்லை. சரி மன்னனிடம் கேட்போமென அரசவைக்கு வருகிறான். அரசரிடம் தனது கேள்வியைக் கூறுகிறான். அரசருக்குக் குழப்பமாகப் போய்விடுகிறது. பண்ணையார் வேலை எதுவும் செய்யாமல் சந்தோசமாக இருப்பது அரசருக்கும் வியப்பளிக்க பண்ணையாரை அழைத்து வரும்படி கட்டளையிடுகிறார்.பண்ணையாரைக் காவலர்கள் அழைத்து வருகிறார்கள். அரசன் பண்ணையாரைப் பார்த்து "நீர் என்ன வேலை செய்கிறீர்?" என்று கேட்க, "அரசே நான் வயலில் வேலை செய்வதில்லை ஆனால் எனக்காக இந்தக் குடியானவன் போல் பலர் வேலை செய்கிறார்கள்"

"அவர்கள் கஸ்டப்படும்போது நீர்மட்டும் எப்படிச் சந்தோசமாக இருக்கிறீர்?"

அரசனின் இந்தக் கேள்விக்குப் பண்ணையாருக்கும் பதில் தெரியவில்லை. மந்திரியாரிடம் கேட்கிறார் அரசர். அவருக்கும் புரியவில்லை.இந்தக் கேள்விக்குப் பதிலளிப்ப வர்களுக்கு 1000 பொன் பரிசு வழங்கப்படும் என்று அறிவிக்கப்படுகிறது. ஓர் பிச்சை எடுப்பவன் பதிலளிக்க வருகிறான்."அரசே! இந்த சிறுவிடயத்திற்கா உங்கள் யாருக்கும் பதில் தெரியவில்லை. அவன் குடியானவனைப் பார்த்து "நீ எவ்வளவு நேரம் வேலை செய்கிறாய்?" என்று கேட்கிறான். "காலையிலிருந்து மாலைவரை"

"அங்கு என்ன வேலை செய்கிறீர்"

"அங்கு பயிர்களைப் பராமரித்துக் களைகளைப் பிடுங்குவேன்"

"அந்தப் பயிர்களால் வரும் நெல்லு யாருக்குப் போகிறது"

"பண்ணையாருக்கு"

பண்ணையாரைப் பார்த்து

"வரும் நெல்லை என்ன செய்கிறீர்கள்"

"அரசுக்கு 2000 பொன்களுக்கு விற்கிறேன்"

"அதில் குடியானவனுக்கு எவ்வளவு கொடுப்பீர்கள்"

"100 பொன்"

"அந்த நெல்லை பக்குவமாக வளர்த்தெடுத்த குடியானவனுக்கு 100 உம் உமக்கு 1900 உம் எப்படிச் சரியாகும்"

"நிலம் என்னுடையது உழைப்புமட்டும்தான் அவனுடையது"

"உழைக்கத் தெரியாத உமக்கு ஏன் நிலம்" கேள்வியால் பண்ணையார் மட்டுமல்ல அரசனும் குழம்பிப் போய் "மந்திரியாரே இன்று முதல் யார் யார் உழைக்கிறார்களோ அவர்களுக்கு மட்டுமே நிலம் சொந்தம் என்று அறிவி யுங்கள்" என்று கூறி குடியானவனை அனுப்பி வைத்தான். பிச்சைக்காரனுக்கும் 1000 பொன் வழங்கப்பட்டது. மந்திரியும் பண்ணையாரும் குழம்பிப்போய் நின்றார்கள்.

**அர்த்தநாரி**



# சைக்கிள் புராணம்

## *அல்லது ........*

“அப்பா திருநா அண்ணை வந்திருக்கிறார்” மகள் கூப்பிட்டாள்.

“அவரை விறாந்தையில் இருத்தி அம்மா வரு மட்டும் கதைத்துக் கொண்டிரு. நான் இரண்டு நிமிடத்திலை வந்திடுவேன்.” நான் வளவின் பின்பகுதியில் பரந்து விரிந்திருந்த வேப்பமரக் காற்றின் குளுமையையும், பச்சைப்ப சேலென்ற அதன் செழுமையையும், அழகையும் அனுபவித்துக் கொண்டிருந்தேன். சுகவீனமான எங்கள் பசுமாட்டைத் தடவிக் கொடுத்துக் குசலம் விசாரித்துக் கொண்டிருந்தேன். என்னைச் சுற்றி ஆளுக்கொருபக்கமாக அணிவகுத்து நின்ற எங்கள் பெரியவனையும், வள்ளியையும் தடவிக் கொடுத்துக் கொண்டிருந்தேன்.

அவைகளிடமிருந்து விடைபெற்றுக் கொண்டு, குளியலறையில் கைகளை அலம்பி, சேட்டையும் மாட்டிக் கொண்டு, திருநா அண்ணை இருந்த விறாந்தைக்கு வந்தேன். திருநா அண்ணை தனியாக இருந்து விறாந்தை மூலையில் நிறுத்தியிருந்த எனது சயிக்கிளையே பார்த்துக் கொண்டிருந்தார். அவருடன் கதைத்துக் கொண்டிருந்த மனைவி தேநீர் தயாரிப்பதற்காக சமையலறைக்குச் சென்றிருக்க வேண்டும் மகள் தனது அறையிலிருந்து ஏதோ படித்துக் கொண்டிருந்தாள்.

“என்ன திருநா அண்ணை சுகமாய் இருக்கிறீங்களே. கனகாலமாய் இங்கால்பக்கம் வரேலை. தனியாயே வந்தனீங்கள். பத்மா வரேலையே”

“பத்மா இண்டைக்கு சதுர்த்தி எண்டு பிள்ளையாரடிக்கு போட்டா. நானும் கனகாலம் இங்கால் பக்கம் வரேலையெண்டு, ஒன்பதரைக்கு வீட்டடியால வாற வஸ்ஸிலை ஏறி இங்கை வந்திட்டேன். உங்காலை மச்சான் வீட்டை போட்டு இங்கை வாறேன். அவையும் இரத்தம் சோதிக்கவெண்டு ஆஸ்பத்திரிக்குப் போகப் போகினமாம்.”

“அதுசரி நீங்கள் எப்பிடி இருக்கிறியள். நாரிநோ எல்லாம் சுகமே”

“இல்லை அண்ணை. ஏதோ தசை விலத்திப் போட்டுதாம். எலும்பும் தேய்ஞ்சு போச்சுதாம். நரம்பும் சுளுக்கினமாதிரி. இப்போதைக்கு சரிவராதாம். சில வேளை மாதக் கணக்கிலை செல்லுமாம்.”

“அதுதானே நானும் பார்த்தனான். சயிக்கிள் நல்லாய் தூசி படிந்துப் போய் கிடந்தது. எந்த நேரமும் சயிக்கிளிலை அங்கை இங்கை போறவாற மனுசன்”

“என்ன செய்யிறதண்ணை கடவுள் சோதிச்சுப் போட்டார்.”

“பத்மாவைத் தனிய விட்டிட்டு அண்ணர் மட்டும் வந்திருக்கிறாராம் அப்பா” என்று குற்றம் சாட்டும் தொனியுடன் மனைவி வந்தாள். காலை இளம் சூட்டுக்கு தேநீர் சுவையாகத்தான் இருந்தது. திருநா அண்ணரும் இரசித்துக் குடித்தார்.

“ரீ நல்ல இதமாய் இருக்குது அக்கா”

“ பிளாஸ்கிளை நல்ல கணக்கான சூட்டிலை தண்ணி இருந்ததாலை, நல்லாய் வந்திட்டுது திருநா அண்ணை.”

திருநா அண்ணையைப்பற்றி உங்களுக்குச் சொல்ல வேணும். அவற்றை உண்மையான பெயர் திருநாவுக்கரசு. ஒரு பெண்கள் பாடசாலையில் ஆய்வுகூட உதவியாளராகப் பணி ஆற்றி, ஓய்வுபெற்று

**குப்பிழான் ஐ.சண்முகன்**



இருக்கிறார். அங்கே பெண்பிள்ளைகள் திருநா அண்ணை, திருநா அண்ணை என்று கூப்பிட, அவர் எல்லாருக்கும் திருநா அண்ணையாப் போனார். உண்மையில் அவர் எங்களிலும் பார்க்க இளமையானவர். எல்லாருக்கும் உதவி செய்பவர். பொய் வஞ்சகம் சூதுவாது அறியாதவர். அவரிருக்கும் இடத்தில் கலகலப்பு நிறைந்திருக்கும்.

ரீப்போவில் அடுக்கி வைத்திருந்த தினசரிகளைப் பார்த்துக் கொண்டிருந்தவர் கேட்டார்.

"எலெக்சன் எல்லாம் வரப்போகுது போலை கிடக்குது."

"ஓமண்ணை. சொல்லிக் கொண்டிருகிறாங்கள். வீட்டுக் கட்சிக்காறங்கள் ஒரு பக்கத்தாலை திரியிறாங்கள். சயிக்கிள் கட்சிக்காறங்கள் இன்னொரு பக்கத்தாலை திரியிறாங்கள். வேறையாக்கள் ஏதோ புதுக்கட்சி தொடங்கப் போகினமாம்."

"என்ன உங்கன்ரை சைக்கிள் கான்டிலை ஒரு சின்ன நெளிவு கிடக்கிற மாதிரி இருக்குது" சைக்கிளை பார்த்துக்கொண்டேயிருந்த திருநா அண்ணை கேட்டார்.

"ஓமண்ணை. அது ஒரு பெரியகதை. எட்டுபத்து வருடங்களுக்கு முந்தின காலத்திலை யாழ்ப்பாணத் திலை ஓடின முக்கிய வாகனம் சயிக்கிள் எண்டது உங்களுக்குத் தெரியும்தானே. அப்ப நான் கம்பஸிலை டிப்ளோமா செய்தனான். சயிக்கிளைதானே போக்குவரத்து. காலமை எட்டு மணிக்கு வகுப்பு ஏழு மணிக்கு வீட்டால வெளிகிட்டு கம்பசுக்கு போடுவேன்."

"அப்பிடி ஒருநாள் என்ரை இலட்சுமியிலை பறந்து போகேக்கை, ஒரு மீன்பெட்டிக்காறன் றோட்டிலை நிண்டு வியாபாரம் செய்கிறான். நடு றோட்டாலை வெட்டிப் போகலாமெண்டு பார்த்தா, பின்னாலை ஒரு லொறி வருகுது. றோட்டுப் பக்கம் இறக்கலாமெண்டா பெரிய பள்ளமாய் கிடக்கு. பிறேக்கைப் பிடிச்சு சிலோ பண்ணலாமெண்டு பாத்தா, பிறேக் அரைகுறையாய் செயலிழந்து போய் கிடக்கு. ஒண்டும் செய்யேலாது. லொறி வரக்கிடையிலை போகலாமெண்டு, மீன்காரனை மருவினாப் போல நடுறோட்டாலை வெட்டி எடுத்தேன். லொறி வந்திட்டுது. றைவரும் என்னிலை படாமல் மருவினாப்போல எடுகலாமெண்டு யோசிச்சவர் போல. கான்டில்லை லொறியின்ரை வொடி பட்டு அப்பிடியே சரிஞ்சு விழுந்து போனேன். நல்லவேளை கான் பக்க மாய்தான் விழுந்தனான். எழும்பிப் பார்த்தா முகத்திலை இருந்த கண்ணாடி இரண்டு மூன்று அடி தள்ளி விழுந்துபோய் கிடக்கு. நல்லவேளை உடையேலை. தோள்மூட்டு, முழங்கால் எல்லம் உரசல் காயங்கள். இரத்தம் கசியுது. தோள் மூட்டிலே சேர்ட்டெல்லாம் கிழிஞ்சு அலங்கோலமாய் போச்சு. நல்ல வேளையாய் பெரிய காயங்கள் ஒண்டும் இல்லை." என்ரை இலட்சுமி சயிக்கிளை தூக்கி நிமிர்த்தி பார்த்தா, கான்டில் சாடையாய் நெளிஞ்சு போய் கிடக்கு. முன்றிம் "ட" மாதிரி வளைஞ்சு போய் கிடக்கு. செயின்கவர் நசிந்துபோய் செயினை சுற்ற விடாமல் இறுகிப்போய் கிடக்கு."

"லொறி றைவர், லொறியை நிப்பாட்டிப்போட்டு இறங்கி வந்து பார்த்தார்.

"உங்களிலை தானே பிழை நல்லவேளை இந்த அள விலை கடவுள் காப்பாத்திப்போட்டார். சயிக்கிளைத் திருத்தக் கொஞ்சம் காசு தரலாம். இப்ப என்னட்டை காசு இல்லை. உந்தக் கடையிலை சொல்லிப்போட்டு போறேன். பிறகு வேண்டுங்கோ." அவர் போய்விட்டார். என்னைச் சுற்றி நின்று வேடிக்கை பார்த்த சனங்களும், ஒவ்வொருத்தராய் போய்விட்டினம்." அப்போதும் கொஞ்சம் தள்ளிநின்ற மீன்பெட்டிக்காரன், தனது வியாபாரத்திலேயே குறியாய் இருந்தான்.

"உன்னாலே தானே இதெல்லாம் வந்தது" என்றேன். ஏதேதோ எல்லாம் சொன்ன மீன்பெட்டிக்காரன், தனது கையிலிருந்த ஐம்பதோ, நூறோ தந்து சயிக்கிளை திருத்திக் கொள்ளுங்கள் என்று சொல்லிவிட்டு, அவனும் போய்விட்டான்." மூச்சை வாங்க நான் பேச்சை நிறுத்தி, ஆசுவாசப்படுத்திக் கொண்டேன்.

"பிறகென்ன நடந்தது சொல்லுங்கோ" என்றார் திருநா அண்ணை.

"அலங்கோலக் கோலத்தில் நான். ஓட முடியாது உடைந்துபோன சயிக்கிளுடன். அறிமுகங்கள் இல்லாத ஊரில் நடுறோட்டில் தனியனாய் தவிச்சுப் போனேன்." சங்கிலித் தொடராய் வந்த பழைய நினைவுகளில் மூழ்கிப் போய், நான் பேசாதிருந்தேன். இரண்டொரு நிமிடம் கனத்த மௌனத்தின் பின்......

"சொல்லுங்கோ" என்றார் திருநா அண்ணை.

"தனித்துப்போய், தவித்துப்போய் நின்றேனா...., தேவ வாக்காய், "என்னண்ணே நடந்தது" என்ற குரல் கேட்டுத் திரும்பினேன்." மோட்டார் சயிக்கிளில் எனது உறவினரொருவர் நின்று கொண்டிருந்தார். வர்த்தகரான அவர் அந்த இடத்தில் மிக செல்வாக்கு மிக்கவர். எங்கோ போகவென்று வந்தவர், இந்த பரிதாபக் கோலத்தில் என்னைக் கண்டு விசாரித்திருக்கிறார். பிறகென்ன? அவரைக் கண்டதும் கலைந்து போன சனங்கள் மீண்டும் கூடினார்கள். இரண்டொரு இளைஞர்கள், காயம்பட்டுக் கிடந்த சயிக்கிளை தூக்கிச் சென்று, சற்றே தள்ளியிருந்த கறாச்சில் கொடுத்தார்கள். உங்கள் அலுவல்களைப் பார்த்திட்டு பின்னேரம் மூண்டரை, நாலு மணிக்கு வாங்கோ நான் திருத்தி வைக்கிறேன் என்றான் கறாச்காரன். அவற்றை மோட்டார் சயிக்கிளிலைபோய், சந்தியிலிருந்த துணிக்கடையில் புதிய சேர்ட்டும் வாங்கிக் கொண்டு, போற வழியிலை

இருந்த அவரது வீட்டுக்குபோய், கை கால் முகம் கழுவி, அவரது மனைவி - எனது தங்கை முறையானவர் கொடுத்த தேநீரையும் அருந்தி, கம்பசில் கொண்டுவந்து விட்டுவிட்டு அவர் போய்விட்டார். போகும்போது "பின்னேரம் வர வேண்டுமா?" என்று கேட்டார்.
"நான் சமாளித்துக் கொள்கிறேன்" என்று சொல்லி அவரை அனுப்பி விட்டேன்.
"கான்டில் நெளிஞ்ச கதை இதுதான்"
இருந்த இடத்தால் எழும்பிப்போய், நெளிஞ்ச கான்டிலைத் தடவி, சயிக்கிளின் எல்லாப் பகுதியையும் வடிவாகப் பார்த்தார் திருநா அண்ணை.
" உங்கடை "றலிச்" சயிக்கிள். கான்டில் சாடையாய் நெளிஞ்சதைத் தவிர, சயிக்கிளை நல்லாய்த்தான் வைச்சிருக்கிறியள். உண்மையிலை சயிக்கிள் எங்கடை உடம்பிலை ஒரு அங்கம் போலத்தானே. கை கால் மாதிரிச் சைக்கிளும் எங்கடை உடம்பிலை ஒரு பகுதி தான்"
உணர்ச்சி வசப்பட்டிருந்தார் திருநா அண்ணை.
" என்னட்டை நிக்கிற சயிக்கிள் "றலி". றலி, றச், வீ எஸ் ஏ இதுகள் தான் சயிக்கிள்கள். பழைய காலத்துச் சாமான்கள். இப்ப வாறதெல்லாம் நோனா பொம்பிளையள் மாதிரி." கொஞ்சநேரம் ஒன்றும் பேசாமல் இருந்தார் திருநா அண்ணை.
"அந்த விபத்துக்குப் பிறகு உங்கடை சயிக்கிள் என்ன மாதிரி, லொறிக்காரன் காசு தந்தவனே"
"அவன் ஏமாத்திபோட்டான். அதிலை எனக்கு ஒரு உறுத்தல் திருநா அண்ணை. அந்த மீன்பெட்டிக்காரனிட்டை அந்தக் காசை நான் வாங்கியிருக்கக்கூடாது. அவன் பாவம். இப்ப நினைச்சாலும் ஒரு மாதிரிக் கிடக்கு தண்ணை."
"ஒருத்தரிலும் பிழையில்லை. உங்களிலையும் பிழையில்லை. மீன்பெட்டிக்காரனிலும் பிழையில்லை. லொறி றைவரிலும் பிழையில்லை. அப்ப ஒண்டும் செய்யேலாது தானே. கடவுள் அப்பிடி நினைச்சிட்டார் விதி அந்த மாதிரி."
"சரி அந்தக் கதையை விடுவம். பிறகு உங்கடை சயிக்கிள் என்னமாதிரி. பழைய மாதிரி இருக்காது தானே."
" ஓமோம். கொஞ்சநாள் அனுங்கிக் கொண்டு, முணு முணுத்துகொண்டு, புறுபுறுத்துக் கொண்டிருந்தாள். ஒத்தடங்கள் கொடுத்து, சின்ன சின்ன வைத்தியமெல்லாம் செய்தாப் போல, ஒருமாதிரி தேறிவிட்டாள். எண்டாலும், பழைய உற்சாகம் சுறுசுறுப்பு இல்லை. முந்தினமாதிரி "ங்ங்ங்ங்....." எண்டு விண்கூவிக் கொண்டு பறக்கிறதெல்லாம் பழைய கதையாய் போச்சுது."
கொஞ்சநேரம் ஒன்றும் பேசாதிருந்தார் திருநா அண்ணை. கையைத்தூக்கி நேரத்தைப் பார்த்தார்.
" வஸ்சுக்கும் நேரமாகுது. உந்த வஸ்ஸை விட்டால், ரவுணுக்குப் போய் இரண்டு, மூண்டு வஸ்ஸிலை ஏறி இறங்க வேணும். அலைச்சலும், காசுச் செலவும். ஒரு ஐஞ்சு நிமிடத்திலை என்ரை சயிக்கிள் கதையையும் உங்களுக்கு ஒருக்கா சொல்லவேணும்."
"நானும் வருத்தக்காரனானாப்போலை என்ரை சயிக்கிளும் இப்ப மூலையிக்கைதானே நிக்குது. பார்கிற நேரமெல்லாம் "என்னை எங்காவது கூட்டிக்கொண்டுபோ, கூட்டிக்கொண்டுபோ" எண்டு கேட்குது. எத்தினை இடத்துக்கு என்னோடை கூடவந்த சீமாட்டி. இந்த நிலைமையிலை நான் என்ன செய்யேலும் சொல்லுங்கோ."
கொஞ்சநேர தாமதத்தின் பின் திருநா அண்ணை தொடர்ந்து சொன்னார்.
"அதுதான் அதை ஆருக்கேன் கொடுப்போமென்று யோசிச்சேன். எங்கன்ரை பிள்ளையார் கோயிலுக்கு அடிக்கடி வாற மனிசன். பக்கத்தூர். ஒழுங்கான நல்ல ஆள். விலைக்குக் கேட்டுது. ஓமெண்டு குடுத்திட்டேன். காசைத் தந்திட்டு - கொஞ்சம் மலிவாய்த்தான் கொடுத்தனான் - நல்ல மாதிரிப் பாக்கிற ஆளிட்டை போச் சேர்ந்திட்டுது எண்டு நினைச்சேன்."
"சயிக்கிள் நிண்ட மூலையைப் பார்க்கிற போதெல்லாம், ஒருமாதிரி மனசு வெறிச்சோடிப் போய்தான் கிடந்தது. ஆனால் ஒரு கிழமையாலை அந்த மனிசன் சயிக்கிளை திருப்பிக் கொண்டத்திட்டுது."
" வீட்டிலை எல்லாரும் பேசுகினமாம். இந்த வயதுபோன காலத்திலை உனக்கு என்னத்துக்கு சயிக்கிள் எண்டு கோவிக்குதூகளாம். குறை விளங்கிக் கொள்ளாதையுங்கோ. ஒரு கிழமையோ பத்து நாளோ பாவிச்சதுக்கு கொஞ்ச காசைக் கழிச்சுக் கொண்டு தாங்கோ" எண்டு மண்டாடுது"
"நான் ஓமெண்டு சொல்லி அவர் தந்த காசு முழுவதையுமே திருப்பிக் குடுத்தேன்."
அந்த மனிசன் திகைச்சுப்போய்,
"இல்லை நீங்கள் கொஞ்சம் கழிச்சுப்போட்டுதான் தர வேணு"மென்று நிலையாய் நிண்டது.
"நான் கழிக்கேலை. என்ரை சீமாட்டி ஆக்களுக்கு பிரயோசனப்பட்டு நல்லாய் இருக்கவேணுமெண்டுதான் உங்களுக்குத் தந்தனான். நீங்களும் ஆசைப்பட்டுத்தான் கொண்டு போனனீங்கள். என்ன செய்யிறது! சந்தர்ப்பம் சூழ்நிலை இப்படியாய் போச்சு. நான் கழிக்கமாட்டேன். உங்களுக்கு ஒருமாதிரி இருந்தால், ஆரேன் கஸ்டப்பட்டதுகளுக்குக் குடுங்கோ. அல்லது நீங்கள் போய்வாற கோயிலுக்கு குடுங்கோ."
"இப்பவும் என்ர சீமாட்டி அந்த மூலையுக்கை இருந்து

என்னைப் பார்க்கிறாள். என்னை எங்காவது கூட்டிக் கொண்டுபோ கூட்டிக்கொண்டுபோ எண்டு கேட்கிறாள்."
" உங்களுக்கு ஆரேன் தெரிஞ்ச ஆட்களாய் இருந்தாச் சொல்லுங்கோ. மனசறிஞ்ச நல்லாக்களாய் இருக்க வேணும்."

" சரி நான் வாறேன். அங்கை சாப்பிட வரச் சொன்னவை. மச்சான் வீட்டை போய் சாப்பிட்டுட்டுப் போக வேணும்." திருநா அண்ணை போய்விட்டார். அந்த இடமெல்லாம் வெறிச்சோடின மாதிரிக் கிடந்தது. ஆனால் ஒருவித பேரமைதியும் கவிந்த மாதிரியும் இருந்தது.

## குறுங்கதை கண்ணுக்குத் தெரியா காற்றலை!

ஷைலஜாதாசன்

"அம்மா உங்கடை குடும்பபதிவு அட்டையைதாங்கோ"
"இந்தாங்கோ ஜீ.எஸ் ஐயா" தனக்கு முன்னால் அந்தரப்பட்டு கதிரையில் அமர்ந்திருந்த சிவரமணி அம்மாவிடமிருந்து குடும்ப அட்டையை பெற்றுக்கொண்ட கிராமசேவையாளர் சுந்தரமூர்த்தி ஒரு படிவத்தை எடுத்து விபரத்தைப் பார்த்து பதிந்து கொண்டிருந்தார். இருந்தாற்போல ஒரு யோசனை வந்தவராய் "அம்மா உங்கடை கணவரின்ரை பெயர் சிவசுப்பிரமணியந்தானே"" ஓமையா அவர் மோசம் போய் மூண்டு வருசமாச்சு" "அது சரி அவர் அரசாங்க உத்தியோ கத்திலை இருந்தவரெல்லே...அவரின் பென்சன் வருமெல்லே" "ஓம் ஐயா..அது எங்கை ஐயா இப்பத்தைய சிலவுக்கு காணும்?"
"ஓம் அம்மா நீங்கள் சொல்லுறது சரிதான்...ஆனால் மன்னிச்சுக் கொள்ளுங்கோ. அரச பென்சன் கிடைக்கிற குடும்பங்களுக்கு கொறணா வாழ்வாதார நிதி 5000 கொடுக்க முடியாது. இது அரசாங்க உத்தரவு. அதை மீறி என்னாலை ஒண்டும் செய்ய ஏலாதம்மா. இந்தாங்கோ குடும்ப பதிவு அட்டை.. போட்டு வாங்கோ" என்று சொன்ன சுந்தரமூர்த்தி ஜீ..எஸ் சைப் பார்த்து "ஐயா பென்சன் பேருக்குத்தான் வருகுதையா.. மூத்தவளின்ரை கலியாணத்துக்கு வங்கியிலை ஐஞ்சு லச்சம் கடன் எடுத்தனான். அதுக்கு வெட்டி கையிலை மூவாயிரந்தான் கிடைக்குது. அதை வைச்சு எப்படி ஐயா காலந்தள்ளுறது. என்ரை ரண்டாவது மகன் இடைக்கிடை மேசன் வேலைக்குப் போனவன். அதுவும் இப்ப இந்த ஊருக்கு ஊர் தடையாலை எல்லாம் போச்சு. ஜீ.எஸ் ஐயா உங்களுக்கு புண்ணியம் கிடைக்கும் எனக்கு நிவாரணம் கிடைக்க உதவி செய்யுங்கோ" என சிவரமணி அம்மா அழாத குறையாக கெஞ்சிக் கேட்க ஜீ.எஸ் எதற்கும் இணங்காதவராய் இருப்பதை அவதானித்த ரமணி அம்மா தனது கண்களிலிருந்து வழிந்த கண்ணீரை தனது சேலைத் தலைப்பால் துடைத்தபடி அவ்விடத்தை விட்டு அகன்றாள். அன்று மாலை தனக்கு நிவாரண நிதி கிடைக்காத கவலையில் தனது வீட்டு முன் விறாந்தையில் கீழே குந்தியிருந்து யோசித்தபடியிருந்தாள் சிவரமணி அம்மா. திடீரென அவளது வீட்டின் முன்னால் ஒரு உந்துருளி வந்து நிற்பதைப் பார்த்து எழுந்து அதனை அவதானிப்பதற்கு முன்பாக வந்து நின்ற உந்துருளியிலிருந்து இறங்கிய ஒரு இளைஞன் தூக்கமுடியாத ஒரு பெரும் பொதியை ரமணி அம்மா நிற்குமிடத்திற்கு கொண்டுவந்து வைத்துவிட்டு "அம்மா இதெல்லாம் உங்களுக்குத்தான் அம்மா..இதுக்குள்ளை அரிசி பருப்பு சீனியெண்டு ஐயாயிரம் ரூபா பெறுமதியான சாமானுகள் இருக்கு. அதோடை இந்த ஐயாயிரம் ரூபா காசையும் வைச்சுக்கொள்ளுங்கோ" எனச் சொன்ன இளைஞன் சிவரமணி அம்மாவிடம் ஐயாயிரம் ரூபா காசையும் கொடுத்தான். ரமணி அம்மாவுக்கு தான் ஏதோ கனவு காண்பது போல பிரமை ஏற்பட்டது. "தம்பி ஆரடா தம்பி நீ...உனக்கு அந்த கோணே சருடைய அருள் கிடைக்கவேணும். உதவி எண்டது தருணத்திலை செய்யிறதுதான் தம்பி உதவி" எனச் சொன்ன ரமணி அம்மா தன் முன்னால் நின்ற இளைஞனைப் பார்த்து கையெடுத்துக் கும்பிட்டாள். "ஐயையோ என்னை ஏனம்மா கும்பிடிறியள்.. இதையெல்லாம் ஒரு பெரியவர்தான் உங்க ளிட்டை குடுக்கச் சொன்னவர். அவருக்குத்தான் நீங்கள் நன்றி சொல்லவேணும்" எனச் சொன்ன அந்த இளைஞன் தான் ரமணி அம்மாவிடம் ஒப்படைத்த பொருட்கள் பணத்துடன் ரமணி அம்மாவைச் சேர்த்துத் தான் கொண்டு வந்த கைத் தொலைபேசியில் இரண்டு மூன்று படங்களை எடுத்து பதிவு செய்துகொண்டு விடைபெற்றுச் சென்றான்.அப்படி அகன்று சென்ற இளைஞன் தன்னிடம் பொருட்களை ஒப்படைக்கச் சொன்ன பெரியவரை அணுகி " இந்தாங்கோ ஐயா உங்கடை தொலை பேசி. நீங்கள் சொன்னமாதிரி அந்த அம்மாவையும் காசு பொருட்களையும் சேர்த்து அழகா படம் எடுத்திருக்கிறன் பாருங்கோ என தான் எடுத்த படங்களை அவரிடம் காட்டினான். அவற்றை பார்த்து மகிழ்ந்த அந்தப் பெரியவர், தான் பார்த்த படங்களின் மேல் தனது சுண்டு விரல்களால் மெல்ல அழுத்தினார். அழுத்தியதும் டிலீற் செயர்ஸ் எடிற் என்ற வாசகங்கள் முன்னால் குதித்து விழுந்தன. அதைப் பார்த்த பெரியவரின் விரல் டிலீற் என்ற பதத்தை அழுத்த, இளைஞன் பதிவு செய்த படங்கள் அத்தனையும் மாயமாக மறைந்தன.இதை அவதானித்த அவ்விளைஞன் "என்னையா இப்படிச் செய்து போட்டியள். இனி எப்படி பேஸ் புக்கிலை படங்களை போடப் போறியள்.,?." " தம்பி நானுன்னை படம் பிடிச்சு வரச் சொன்னது பேஸ் புக்கிலை அதையெல்லாம் போட்டு என்ரை பெருங் கொடையை பறைசாற்ற இல்லைத் தம்பி. எனக்கு ஒரு மன ஆறுதலுக்காகத்தான்.. தம்பி படமெடுக்கச் சொன்ன னான். வலது கை கொடுத்ததை இடது கை அறிஞ்சாலே நாம் கொடுத்ததின்ரை பலனே அற்றுப் போகுமடா" என மிக சாதாரணமாக சொன்ன ஜீ.எஸ். சுந்தரமூர்த்தியைப் பார்த்து அதிசயித்த அந்த இளைஞன் "ஒரு அங்கர் பெட்டியை கொடுத்துவிட்டே பேஸ் புக்கிலை போட்டு அசத்தும் இந்தக் காலத்தில் இப்படியும் ஒரு மனிதரா" என வியந்தபடி தனது உந்துருளியை உயிர்ப்பித்து பறந்துசென்றான் அவன்.

## ஞாபகங்கள் பேசும் 2

# காத்தவராயரும் இலந்தை மரமும்..

சந்திரா இரவீந்திரன்

பருத்தித்துறையில் ஓராங்கட்டைச் சந்தி என்றால் தெரியாதவர்கள் யாரும் இருக்க முடியாது. பருத்தித் துறை நகரின் மையத்திலிருந்து பிரதான வீதிவழியாக யாழ் நோக்கிப் பயணித்தால் வரும் முதலாவது மைல் சந்தி அது. அந்தப் பிரதான முச்சந்திக்கு நிறையக் கதைகள் இருக்கிறது. நகரின் மேற்கிலிருந்தும் ஊர்களிற்குள் நுழைய வேண்டிய வர்கள் அனைவரும் பஸ்ஸிலிருந்து இறங்கிக்கொள்ளும் பிரதான சந்தியும் அது தான். பெரும்பாலும் நகருக்குள் பிரவேசிக்கும் புதிய பயணிகளுக்கு ஊர்களின் வழியை அடையாளம் காட்டும் போது இந்த ஓராம்கட்டைச் சந்தியிலிருந்து தான் வழிக்குறிப்புகள் ஆரம்பமாவது வழமை. இந்தச் சந்தியிலிருந்து



மேற்கு நோக்கி நீளமாக நகரும் தம்பசெட்டி வீதி வழியாக நடந்தால் நிறையப் புதினங்களைப் பார்த்தவாறே ஏராளமான சிற்றூர்களுக்குப் போய்ச் சேரலாம்.

ஓராங்கட்டைச் சந்தியிலிருக்கும் பென்னம்பெரிய மெத்தை வீடு அப்போது எங்கள் பெரியபெத்தம்மாவின் (எங்கள் அம்மாவின் பெரியம்மா) வீடு. அங்கே அவவின் மகன் குடும்பம் இருந்தார்கள். பின்னாளில் அவர்களுக்குச் சொந்தமான வேறு வீட்டிற்கு அவர்கள் மாறிப்போக, வேறு பல குடும்பத்தினர் அங்கு வாடகைக்குக் குடியிருக்கத் தொடங்கியிருந்தார்கள். அச்சமயம் அங்கிருந்த ஒரு குடும்பம் மிஸிஸ் சின்னத்தம்பி ரீச்சரின் குடும்பம். அவர்கள் அங்கு குடியிருந்த காலத்தில் அவர்களுக்கு நடந்த ஒரு

துயரக்கதை இன்றைக்கும் என்னால் மறக்க முடியாதது.

அப்போது 83 யூலைக் கலவரத்தில் நாடு முழுவதும் கிலிகொண்டு கிடந்தது. இலங்கையின் தென்பகுதிகளில் நெடுங்காலமாகக் குடியிருந்த தமிழர்களும், படித்துவிட்டு தென்பகுதியில் போய் வேலை பார்த்துக் கொண்டிருந்த தமிழர்களும் சிங்களக்காடையர்களால் வெட்டிக்கொல்லப்பட்டும், தமிழர்களின் வீடுகள், மற்றும் உடமைகள் தீயிட்டுக் கொளுத்தப்பட்டும் பெரும் அநியாயங்களும் அக்கிரமங் களும் நடந்து கொண்டிருந்த நேரம் அது. அப்போது சின்னத்தம்பி ரீச்சரின் கணவர் அநுராதபுரத்தில் பணிபுரிந்துகொண்டிருந்தார். அநுரதபுரத்தில் வைத்து அவர் சிங்களக் காடையர்களால் கொடூரமாக வெட்டிக் கொலை செய்யப்பட்டமை எல்லோரையும் பதைபதைக்க வைத்திருந்தது.

சின்னத்தம்பி ரீச்சர் எனக்கு வடஇந்து சிறுவர் பள்ளியில் தமிழ் படிப்பித்தவர். பின்னாட்களில் வடஇந்து சிறுவர் பள்ளிக்கு உதவித் தலைமை ஆசிரியையாக பணியாற்றிக்கொண்டிருந்தவர். நான் வடஇந்து பெரிய பள்ளியில் படித்துக்கொண்டிருந்த போது அவரின் மகள் எனக்கு ரியூட்டரியில் கணக்குப் படிப்பித்துக் கொண்டிருந்தார். இந்தக் கலவரங்களின் பின்னர் அவரின் மகனொருவர் இளைஞனாக இருக்கும் போதே ஏதோவொரு நோய் காரணமாக இறந்து போனார். பின்னாளில் அந்த வீட்டைக் கடந்து போகும் தருணங்களிலெல்லாம் சின்னத்தம்பி ரீச்சர் குடும்பமும், அவவின் கணவரது கொடூர மரணமும் தான் முந்திக்கொண்டு என் ஞாபகத்தில் வருவதுண்டு.

அந்த மெத்தை வீட்டைக் கடந்து போனால் அடுத்து நான் உன்னிப்பாகக் கவனித்துச் செல்வது என்னுடன் படிக்கும் அருள்நங்கையின் வீட்டைத்தான். அருள்நங்கை சின்ன உருவம். புசுபுசுவென்ற சுருள் முடியுடனும். இரட்டைப் பின்னலுடனும் சிட்டுக்குருவி போல் எந்நேரமும் பறந்துதிரிவாள். அவளை நினைத் தால் என் ஞாபகத்தில் ஒரு விடயம் தவறாமல் வரும். அது வகுப்பில் ஒவ்வொரு பாடமும் முடிய, அடுத்த பாடத்திற்கான ரீச்சர் வரும் சொற்ப நிமிட இடை வெளிக்குள் வகுப்பிற்கு முன்னாலிருக்கும் முற்றத்தில் இறங்கி, தன் தண்ணீர் போத்தலிலிருந்து மளமளவென்று தன் இரு கால் பாதங்களிற்கும் தண்ணீரை ஊற்றிக் கழுவி விட்டு ஓடிவருவாள். அவளின் கால்கள் எப்போதும் வியர்ப்பதுண்டாம். அதனால் அப்படி ஓடியோடிப்போய் கழுவுவதாக பின்னர் ஒருநாள் சொன்னாள்.

அருள்நங்கையின் வீட்டைக் கடந்ததும் வலது புறம் நிலத்தைத் தொட்டபடி காற்றில் அசைந்து கொண்டிருக்கும் நீண்ட விழுதுகளுடனான பென்னம் பெரிய ஆலமரமும், அதனையொட்டியபடி உள்நோக்கி நகரும் சிறு கோயில் ஒழுங்கையும் தெரியும். வடஇந்து மகளிர் கல்லூரியின் வேலியோடு ஒட்டியபடி நகரும் அந்தக் குச்சி ஒழுங்கை பல விடயங்களிற்குப் பெயர் பெற்றிருந்தது. விழுதுகள் தொங்கும் அந்த ஆலமரத்தின் கீழ் வந்து கூட்டமாக நிற்கும் இளம்பெடிய ளுக்கு அங்கு பல சோலிகள் இருந்தன. அந்த வேலி யோரம் தான் நாவற்பழக்காரிகள், ஐஸ்பழக்காரன், கரஞ்சுண்டல்காரன் என எல்லோரும் வந்து நின்று, பள்ளி இடைவேளைகளில் எங்கள் நாக்குகளை தொங்கப்போட வைத்து, மனசை அலையோ அலை யென அலைய வைப்பது!

அந்தக் குச்சி ஒழுங்கையின் அந்தத்தில் ஒற்றைக்கூரையின் கீழிருக்கும் தொப்பிளாத்தை வைரவர் கோயிலின் தெற்குப்புறச்சுவரில் கறுப்புநிறக் கரிக்கட்டையால் வரையப்பட்டிருந்த சூலம், நான் சிறுபள்ளியில் ஆறாம் வகுப்பு முடித்து, எதிரே வீதிக்கு மறுபுறமிருக்கும் வடஇந்து பெரியபள்ளிக் கூடத்திற்குச் செல்லும் வரை அப்படியே தான் இருந்தது. கோவிலின் சிறு வீதியைச்சுற்றி மஞ்சள் பட்டு விரித்திருப்பது போல் புளியம்பூக்கள் எப்போதும் சிதறிக்கிடக்கும். எங்களது ஐந்தாம் வகுப்பு அந்த தொப்பிளாத்தை வைரவர் கோவில் வளவின் வேலியை அண்மித்தேயிருந்தது. வகுப்பிற்குள் புளியம்பூக்கள் காற்றோடு வந்து விழுவதுமுண்டு. மேசையில் வந்து விழும் பூக்களை மெதுவாக எடுத்து வாய்க்குள் போட்டுவிடுவோம். அவற்றைச் சாப்பிட்ட மறுகணமே பசி வயிற்றைக் கிளறத் தொடங்கிவிடும்.

பெரிய வகுப்புகளில் படித்துக் கொண்டிருந்த நேரம், ஓராங்கட்டைப் பக்கமாக ரியூசன் வகுப்புகளுக்குப் போய் வந்த காலங்களில் வகுப்புத் தோழிகளோடும் சரி, தனியாகவும் சரி, அந்தக் குச்சி ஒழுங்கையைக் கடக்கும் போதெல்லாம் கால்கள் ஏனோ, தானாகவே பின்னிக்கொள்ளும். மனதினுள் அலைந்து கொண்டி ருக்கும் எல்லா நினைவுகளும் அக்கணம் பொசுக்கென்று காணாமல் போய்விடும். கைகள் தானாகவே கூப்பிக்கொள்ளும். கண்கள் பயபக்தியுடனும், ஒருவித பயத்துடனும் மூடிக்கொள்ளும்.

அந்தக் கோயிலைக் கடந்துவிட்டால் போதும். அதற்கப்புறம் மனதையும் செயலையும் கட்டுப்படுத்துவதற்கு யாருமில்லையென்னும் தைரியத் தில் அது தன் எண்ணத்திற்கு இறக்கை கட்டிப் பறக்கத்தொடங்கிவிடும்.

வைரவர், காத்தவராயர், வீரபத்திரர், காளியம்மன் என ஒரு லிஸ்ற் இருக்கிறது. அதில் உள்ளவர்களைக் கண்டால் உள்ளுக்குள் எல்லாம் அடங்கியொடுங்கி விடும்! அது ஏனென்று இன்று

வரை காரணம் தெரியாது. காதால் கேட்டுக் கேட்டு உள்ளுக்குள் சேர்த்து வைத்திருந்த கதைகள் அப்படி என்று நினைக்கிறேன்.

பள்ளிக்கூடம் விட்டவுடன் வகுப்பிலிருந்து ஓடிவந்து, வெளி விறாந்தாவிலிருந்து முற்றத்தில் குதித்து, பூந்தோட்டத்தைத் தாண்டி ஓடிப்போய் பென்னம்பெரிய இரும்புக்கதவை இடித்துத் தள்ளிக் கொண்டு முதல் ஆளாக வீதியில் இறங்கிவிடுவதில் ஒரு பெருமை. பின்னர் தம்பசெட்டி வீதி வழியாக மேற்கு நோக்கி நீளமாய் நடந்து, வலது புறம் வரும் கல்லூரி வீதிக்குத் திரும்பி, ஆத்தியடிப் பிள்ளையார் கோவில் பக்கமிருக்கும் எங்கள் வீட்டைப் பார்த்து நடையைக் கட்டுவது தினசரி நிகழ்வு.

பள்ளிக்கூடத்திற்கும் வீட்டிற்கும் இடையிலான அந்தப் பகுதியில் தான் அந்நேரம் எங்கள் வாழ்க்கை ஒளி நிறைந்து, சுவாரஸ்யம் பெற்றிருந்தது. அது ஆசிரியர்களின் கண்களுக்கும், அம்மாவின் கண்களுக்கும் தெரியாத ஒரு சொர்க்கலோகப் பாதை! அங்கு சுதந்திரத்தை நாங்களாகவே பிடித்து எங்கள் கைகளிற் குள்ளும் கால்களிற்குள்ளும் பதுக்கி வைத்திருந்தோம்.

பள்ளிக்கூடம் விட்டு வெளியில் வந்தவுடன் எதிரில் தெரியும், வடஇந்து சிறுவர் பள்ளிக்கூடத்தின் வேலியை ஒட்டியபடி வடக்கே கடற்புறமாக நகர்ந்து போகும் வெள்ளவாய்க்கால் “பிறேமா தேயிலை“ வீட்டின் பின்மதிலையும் ஒன்று சேரத் தொட்டுக்கொண்டு அப்படியே பாவட்டம் பற்றைகள் நிறைந்த அரைகுறை இருளுக்குள் நழுவி மறைந்து போகும். அது எங்கு போய் முடிகிறதென யோசித்தபடியே தினமும் நானந்தச் சிறு மதவைக் கடந்து போவேன்.

“அது வி.எம் றோட்டிலை இருக்கிற அப்பா கடைப் புளியமரத்து மதவுக்குக் கீழால் ஆத்தியடிப் பிள்ளையார் கோயில் பக்கமாப் போகுதடி” என்று றஞ்சி சொல்லுவாள்.

“அதுக்குப் பிறகு எங்கை போகுது?” என்று நான் யோசித்தவாறே கேட்டால் “ஆத்தையின்ரை சீலைக்குள்ளை போகுது பேசாமல் வா..” என்று றஞ்சி என் வாயை அடைத்துவிடுவாள்.

பிறேமா தேயிலை வீட்டின் முகப்பைத் தொட்டுக்கொண்டு போவது அந்த விநாயக முதலியார் வீதிதான். அதைத்தான் வி.எம் றோட் என்று சுருக்கிச் சொல்லுகிறார்கள். அது வடக்கு நோக்கி நீளமாய் வளைந்து, நெளிந்து ஏறியிறங்கிப் போய், பருத்தித்துறை துறைமுகத்தோடு முடிவடைந்து விடும்.

இந்தப் புதினங்களைத் தாண்டிவிட்டால் பள்ளிக்கூடச் சத்தங்கள், ரீச்சர்மாரின் கண்காணிப்புகள் யாவும் கொஞ்சம் கொஞ்சமாகக் குறையத்தொடங்கிவிடும். அதற்குப் பிறகு ஒரு குருவிக்கும் பயப்படாமல் கைவீசி, மனம் போன போக்கில் நடக்கத் தொடங்கிவிடலாம். போகிற வழியில் வரும் ஒரு வீட்டில் வாடகைக்கு வந்து குடியிருக்கும் கணக்கு ரீச்சர் மிஸிஸ் கணபதிப்பிள்ளை அவர்களின் வீட்டையும் தாண்டி விட்டால் மிச்சசொச்சப் பயங்களையும் காற்றில் வீசியெறிந்து விடலாம். அதற்குப் பிறகு உலகம் எங்கள் கைகளில் தான்!

கணபதிப்பிள்ளை ரீச்சர் வீடு, அதே வீதியில் அடுத்துவரும் இன்னுமொரு மதவோடு ஒட்டியபடி இருக்கும். அந்த மதவிற்குக் கீழாக ஓடும் வெள்ளவாய்க்கால், பற்றைகள் நிறைந்து எப்போதும் இருளாகவேயிருக்கும். கண்ணுக்கெட்டிய தூரம் வரை குப்பைகள், பீங்கான் துண்டுகள், கடுதாசிகள் நிரம்பிக்கிடப்பது தெரியும்.

ரீச்சரின் வீட்டையும், காத்தவராயர் கோயிலையும் கிழித்துக்கொண்டு நகரும் வெள்ளவாய்க் கால், ஆத்தியடிப்பிள்ளையார் கோயில் வரை சென்று “சந்தியாங்கிணற்றை“ தொட்டுக்கொண்டு போய், ஈற்றில் இந்துசமுத்திரப் பெருங்கடலில் விழுந்து மறைந்து போகும். காத்தவராயர் கோயிலைச் சுற்றி முள்வேலி போடப்பட்டிருக்கும். கோயில் வளவு ஒரு பள்ளக்காணிக்குள் இருந்தது. தார் வீதியிலிருந்து குதித்து இறங்கினால் தான் கோயிலடிக்குப் போகலாம். ஒற்றைக் கூரையின் கீழிருக்கும் அந்தச் சின்னஞ்சிறு கோயில் கிழக்குப் பார்த்தபடி வெள்ளவாய்க்காலை நோக்கியிருக்கும். கோயிலின் வடக்குப்புறமிருக்கும் முள்வேலியைத் தாண்டினால் ஒரு குச்சு ஒழுங்கை. அந்த ஒழுங்கைக்கு அப்பால் இருப்பது தீனா அக்காவின் வீடு. தீனா அக்காவும், ஜேம்ஸ் அண் ணாவும் ஒருவரையொருவர் பயங்கரமாகக் காதலித்துக் கொண்டிருந்தது ஊரறிந்த விடயம். ஆனாலும் ஊரறியாத விடயமொன்றும் இருந்தது. அது எங்களுக்கு மட்டும் தான் தெரியும். அவர்கள் தினமும் இரகசியமாய் சந்திப்பது இந்தக் காத்தவராயர் கோயிலோடு ஒட்டியிருக்கும் பென்னம்பெரிய புளியமரத்திற்குக் கீழே என்பது தான் அது.

காத்தவராயர் கோயில் வளவிற்குள் நாங்கள் இறங்குவது இலந்தைப்பழத்திற்காக மட்டும் தான் என்றாலும் இத்தகைய புதினங்கள் நாம் எதிர்பாராமலே எமக்கு இலவசமாகக் கிடைப்பவை.

கோயில் மூலஸ்தானத்துக்குப் பின்னாலிருக்கும் சடைத்துப் பருத்த, பெரிய இலந்தை மரமும், கோயிலின் முன் வாசலுக்கு நேரெதிரேயிருக்கும் உயரமான, மெலிந்த இலந்தை மரமும் தான் எப்போதும் எங்களது இலக்காக இருக்கும். இரண்டு மரங்களின்

இலந்தைப்பழங்களும் வெவ்வேறு சுவைகளைக் கொண்டவை. பின்னாலிருக்கும் சடைத்த மரத்தை உலுப்பினால் கொழுத்த சதைப்பிடிப்பான இலந்தைப் பழங்கள் பொலபொலவென்று கொட்டும். நானும், அக்காவும் றஞ்சியும் எமது சட்டையின் கீழ்விளிம்பை மடித்துப் பிடித்தபடி மளமளவென்று பொறுக்கி அதற்குள் நிரப்புவோம். அவற்றின் செங்காய்கள் தான் எனக்குப் பிடித்தமானவை. அவற்றை உலுப்பும் போது அல்லது கற்களால் குறிபார்த்து எறியும் போது நொழுநொழுவென்று நசியும் பழங்கள் கொட்டினால் அவற்றை நான் றஞ்சியிடம் கொடுத்து விடுவேன். செங்காய்கள் கொட்டினால் அவற்றை றஞ்சி எனக்குத் தந்துவிடுவாள்.

கோயிலுக்கு முன்னாலிருக்கும் மரத்தை உலுப்பினால் அருமையாக சில காய்கள் மட்டுமே கொட்டும். அவை வேப்பம்பழ வடிவில் நீள் உருண்டையாக இருக்கும், ஆனால் அவற்றின் சுவையோ தனி. மெல்லிய துவர்ப்பும், மெல்லிய புளிப்பும், இனிப்பும் கலந்த மாக்கலவை போல் ஒரு அபூர்வ சுவை. ஆனால் அந்த மரத்திற்குக் கல் எறியும்போது றஞ்சி எப்போதும் சொல்வாள் ''காத்த வராயர் எங்களையே முழுசிப் பார்த்துக்கொண் டிருக்கிறார், கெதியா எறிஞ்சு விழுத்தடி'' என்று. நான் கண்களை மூடிக்கொண்டு கல்லை எறிவேன். எனக்கு காத்தவராயர் கோயிலின் முன்பக்கம் போய் தனியாக நிற்பதற்கு மனதிற்குள் தைரியம் இருப்பதில்லை. ஆனால் அதை யாருக்கும் சொல்லவும் விருப்பமில்லை. அதனால் முன்புறம் நிற்கும் இலந்தை மரத்திலிருந்து இலந்தைப் பழங்களை விழுத்துவதற்காக எப்போதும் அக்காவையும் றஞ்சியையும் வருந்தியழைத்துக் கொண்டிருப்பேன்.

நானும் அக்காவும் றஞ்சியும் பள்ளிக்கூடம் முடிய நேரே வீட்டுக்குப் போகாமல் இடையில் இந்தக் காத்தவராயர் கோயில் வளவிற்குள் இறங்கி இலந்தைப்பழம் பிடுங்குகிறோம் என்று கேள்விப்பட்ட அம்மா, ஒருநாள் எனக்கும் அக்காவுக்கும் சுழரச்சுழர பூவரசம் கம்பால் சவுள் அடி தந்தா. அம்மா அடித்த அடியில் கம்பு நார்நாராகக் கிழிந்து தொங்கியது. நான் இனிமேல் இலந்தைப்பழம் பிடுங்கப் போகமாட்டேன் என்று கத்தியழுதவாறே அம்மாவிடம் சத்தியம் வேறு செய்து விட்டேன்.

அம்மாவிடம் வாங்கிய அடிக்குப் பிறகு இரண்டு வாரங்கள் நல்ல பிள்ளைகளாக பள்ளி முடிந்ததும் நேரே வீடு தான். இரண்டு கிழமை கழிய பழையபடி இலந்தைக்காய்களினதும், பழங்களினதும் சுவை எங்களை சரசரவென இழுக்கத் தொடங்கி விட்டது. பிறகென்ன, ஒரு நாள் ஓடியோடி அவசரமாய் இலந்தைகளை பொறுக்கிக் கொண்டு வீடு வந்து சேர்ந்தோம். பிறகு மெதுமெதுவாக இலந்தை மரங்களின் கீழ் செலவழிக்கும் நேரம் அதிகரிக்கத் தொடங்கிவிட்டது. பழையபடி அம்மா கேள்விகள் கேட்கத் தொடங்கிவிட்டா. ஏன் வீடு வரத்தாமதமாகிறதென்ற சந்தேகம் அம்மாவுக்கு வலுக்கத் தொடங்கிவிட்டது. நாங்கள் பள்ளிக்கூடம் முடிந்த பின்னர் நடக்கும் சாரணர் பயிற்சி, விளையாட்டுப் பயிற்சி, நடனப்பயிற்சி என்று ஒவ்வொரு நாளும் ஒவ்வொன்றை மாற்றிமாற்றிச் சொல்லி சமாளித்து விடுவோம்.

பின்னேரம் 3.45க்கு பள்ளிக்கூடம் முடிந்து விடும். அன்று உண்மையாகவே விளையாட்டுப் போட்டிக்கான பயிற்சி இருந்தது. நாங்கள் அதனை முடித்துக்கொண்டு காத்தவராயர் கோயில் வளவிற்குள் இறங்கிய போது ஐந்தரை மணிக்கு மேலாகி விட்டது. பயிற்சிகள் முடிந்த பின்னரான களைப்பும், பசியும் தீர, குசாலாக இலந்தை மரத்தடி நோக்கி நடந்தோம். அன்றைக்கு இலந்தை மரத்தடி இலேசாக இருண்டு கிடந்தது. ஒரு விதமான குளிர்காற்று வீசிக்கொண்டிருந்தது. கோயில் முன்மண்டபத்தில் யாரோ விளக்கேற்றி வைத்திருந்தார்கள். தீபம் காற்றில் அங்குமிங்கும் அலைந்தலைந்து ஒளிர்ந்து கொண்டிருந்தது.
அன்றைக்கு நாங்கள் மரத்தை உலுப்பாமலே நிறைய இலந்தைப்பழங்கள் நிலத்தில் கொட்டிக் கிடந்ததைப் பார்க்க அதிசயமாகவும் சந்தோசமாகவும் இருந்தது. நானும் அக்காவும் றஞ்சியும் ஓடியோடி பொறுக்கியெடுத்து எங்கள் பள்ளிப்பைகளில் நிரப்பிக் கொண்டோம். பொறுக்கும் போது கைகளுக்குள்ளிருந்து தவறி விழுந்தால், மற்ற ஆள் அதனை லபக்கென்று பொறுக்கி விடுவதும், அதற்காக வாக்குவாதப்படுவதும் எப்போதும் போல் அப்போதும் நடந்து கொண்டிருந்தது.

நான் இலந்தைப் பழங்களை பொறுக்கிக் கொண்டு நிமிரும் போது வெளியில் தார்வீதியோரம் யாரோ சைக்கிளை மெதுவாக உழக்கியபடி காத்த வராயர் வளவை நோட்டம் விடுவது தெரிந்தது. யாரவர் என்று உற்றுப்பார்த்த போது நெஞ்சுக்குள் பகீரென்றது! அது எங்கள் அப்பா. என் கண்களையே என்னால் நம்பமுடியாமலிருந்தது. அப்பா கொழும்பிலி ருந்து எப்படி சொல்லாமல் கொள்ளாமல் திடீரென்று வந்தார் என்ற வியப்பு ஒருபுறம். காத்தவராயர் வளவிற்குள் நின்று நானும் அக்காவும் இலந்தைக்காய் பொறுக்குவதைக் கண்டுவிட்டார் என்ற பதற்றம் இன்னொருபுறம்.

தார்வீதிக்கரையில் சைக்கிளை மெதுவாக ஓடிக்கொண்டு போன அப்பா எங்களைக் கண்டதும் சைக்கிளை நிறுத்தி, ஒரு காலை நிலத்தில் ஊன்றியபடி ''என்ன செய்யிறியள் உங்கை? கெதியா வீட்டுக்கு வாருங்கோ..'' என்று ஒருவிதமான அதட்டல் குரலில் உரத்துக் கூறிவிட்டு அப்படியே மறைந்து போனார்.

அப்பா கொழும்பிலிருந்து பயணத்தால் வந்து, உடைகள் மாற்றி, வேஸ்டி உடுத்துக்கொண்டு நிதானமாகத் தான் எங்களைத் தேடி வந்திருக்கிறாரென்று விளங்கியது. ஆனால் எதற்காக திடும்மென்று இப்படி ஊருக்கு வந்தார் என்பது மட்டும் எனக்கு விளங்கவில்லை. ஆனால் அது அக்காவுக்கு விளங்கியிருக்குமென்று பல நாட்களுக்குப் பிறகு தான் எனக்குப் புரிந்தது.

வழமையாக அப்பா ஊருக்கு வருகிறாரென்றால் அதுபற்றி ஒரு மாதத்திற்கு முன்பே கடிதமூலம் எங்களுக்குத் தெரிவித்துவிடுவார். நாங்கள் பள்ளி முடிந்து வீடு நோக்கி வரும்போது, ஆத்தியடிப்பிள்ளையார் கோயில் சந்தியையும் தாண்டி, அப்பாவின் வாசனை என் மூக்கைத் துளைக்கத் தொடங்கிவிடும். அப்பா கொண்டு வரும் அன்னாசி, றம்புட்டான், மங்குஸ்தான், லாவுடு, விளாம்பழம், அதனோடு சேர்ந்து அப்பா பூசும் யாட்ழி பவுடர் என எல்லாம் கலந்த ஒருவித அபரிதமான வாசனையது. அது அப்பாவுக்கேயுரிய வாசனை! அந்த வாசனையை நான் அடையாளம் காணும்போதெல்லாம் என் நெஞ்சு சந்தோசத்திலும் பதற்றத்திலும் படபடக்கத் தொடங்கிவிடும்! அப்பா மீண்டும் பயணம் போகும் வரை அந்த வாசனை எங்கள் வீடெல்லாம் நிறைந்திருக்கும்.

இப்போ அப்பா எதற்காக இப்படி சொல்லாமல் கொள்ளாமல் வந்தார் என்ற யோசனை எனக்கு. அப்பாவைக் கண்டதிலிருந்து அக்கா திகைத்துப் போய் நின்றிருந்தா. றஞ்சியும் பயந்து போய் உடனேயே வீடு நோக்கி புறப்பட ஆயத்தமானாள். வழமையாக றஞ்சி எங்களுடன் சேர்ந்து வந்து ஆத்தியடிப் பிள்ளையார் கோயில் சந்தியில் பிரிந்து, சந்தியாங்கிணற்றுப் பக்கமிருக்கும் அவளின் வீடு நோக்கிப் போவாள். ஆனால் அன்றைக்கு எங்கள் அப்பாவை கண்டுவிட்ட பயத்தில் றோட்டுப்பக்கம் வராமல் கம்பி வேலியைப் பிரித்து, தலையை வெளியே தள்ளி, உடலைக் கோணலாக வளைத்து வெள்ளவாய்க்காலிற்குள் இறங்கிவிட்டாள். அதன் வழியாக பற்றைகளைப் பிரித்துக்கொண்டு சந்தி யாங்கிணற்றுப் பக்கம் ஓடியோடி நடக்கத் தொடங்கினாள். அவளின் அந்தச் செய்கை எனக்கு உள்ளூர ஒருவித அச்சத்தை ஏற்படுத்துவது போலிருந்தது.

“அடியேய்.. இருண்டு போச்சு உந்தப் பத்தைக்குள்ளாளை தனியாப் போகப்போறியே?” நான் பதற்றத்துடன் கேட்டேன்.

அதற்கு அவள் “ச்சே...எனக்கு அதுக்கெல்லாம் பயமில்லை போடி..” என்று சொல்லியவாறே விடுவிடென வெள்ளவாய்க்கால் ஊடாக நடந்து கொண்டு போய் அப்படியே மறைந்து விட்டாள்.

நானும் அக்காவும் அப்பாவின் தலைக்கறுப்பு தெரிகிறதா என்ற பயத்தோடு வீதிப்பக்கம் திரும்பிப் பார்த்தோம். வீதி வெறிச்சோடிப்போயிருந்தது.

அப்பா வழமையாக எங்களுக்கு அடிப்பதில்லை. எப்போவாவது அருமையாக வீட்டுக்கு வருபவர் எங்களுடன் செல்லமாகவும் அன்பாகவும் தான் இருப்பார். அடி தருவதில் நம்பர் வன் எங்கள் அம்மா தான். பொய் சொல்லக்கூடாது, களவெடுக்கக்கூடாது, பெரியவர்களை மதிக்க வேண்டும், அம்மா சொல் தட்டக்கூடாது எனப் பல போதனைகள் அம்மாவிட மிருக்கிறது. அவற்றில் ஏதாவதொன்று சிறிதாகத் தவறினாலும் பூவரசம்தடி பிய்ந்து சிதறிவிடும். அம்மா இப்படிக் கடும் கொள்கைகள் வைத்திருப்பதும் அதற்காக எங்களுக்கு அடிப்பதும் அப்பாவுக்கு மனசிற்குக் கஸ்டமான விசயம்.

“பிள்ளைகளை ஏன் அடிக்கிறீர்” என்று அப்பா சற்றே மனம் நொந்து கேட்பதை சில சமயங்களில் கண்டிருக்கிறேன். ஆனால் அன்றைக்கு அப்பாவே எங்களுக்கு தலைகால் தெரியாமல் அடித்துவிடுவாரோ என்று உள்ளூர ஒரே பயமாக இருந்தது. அப்பாவின் கோபத்தை நான் ஓரிரு தடவைகள் தான் கண்டிருக்கிறேன். ஆனால் அந்தக் கோபம் அப்பாவின் கண்களிலிருந்து புறப்படும் போதே நான் உள்ளுக்குள் முழுமையாகச் சிதைந்து விடுவேன். அதற்குப் பின் என் உடல் என் கட்டுப் பாட்டுக்குள் இருப்பதில்லை. தன்பாட்டில் உதறத் தொடங்கிவிடும். கால்களின் மேற்பாகம் நடுங்கத் தொடங்கிவிடும்!

திடீரென்று “வதனா அக்கா.... முனி..” என்ற றஞ்சியின் அலறல் பற்றைகளைப் பிய்த்துக்கொண்டு வந்து எங்கள் காதுகளில் அறைந்தது. என் கைகளில் இருந்த இலந்தைப் பழங்கள் சிதறிக் கீழே விழுந்தன. நான் ஓட ஆயத்தமானேன். அக்கா முழுசிக்கொண்டு நின்றிருந்தா.

“என்ன முழுசிக்கொண்டு நிக்கிறியள்? றஞ்சியை முனி அடிச்சிட்டுது போலை..” நான் சத்தமாக அக்காவை அதட்டியபடியே ஓடிப்போய் தார்வீதியில் ஏறிநின்றேன். அக்காவும் பயந்துகொண்டது போல் அவசரமாக நடந்து வந்து வீதியில் ஏறினா. இருவரும் வீடுநோக்கிப் போகும் போது எனக்கு அப்பா பற்றிய பயம் அதிகரிக்கத் தொடங்கிவிட்டது. கூடவே றஞ்சியின் நிலை என்ன என்றும் மனதிற்குள் ஒரே யோசனையாக இருந்தது. வீட்டிற்குப் போனவுடன் அப்பா “வாங்கோ வாங்கோ.. உங்கள் ரெண்டுபேரையும் தான் பார்த்துக் கொண்டிருக்கிறன்..” என்று இலேசான நக்கலுடனும் கோபத்துடனும் தலையை ஆட்டியவாறே தன்னருகில் அழைத்தார்.

“சரி இண்டைக்கு அப்பாவின் உரமான கைகள் எங்கள் முதுகை பதம் பார்க்கப் போகிறது..“ என்று நான் உள்ளூர நினைத்துக் கொண்டு அதற்காக என்னைத் தயார்ப்படுத்திக்கொண்டு நின்றிருந்தேன்.

ஆனால் அப்பா எடுத்த வீச்சில் அக்காவின் பக்கம் திரும்பி, கேள்விக்கணைகளைத் தொடுத்தார். அது அக்காவின் காதல் தொடர்பான கேள்விகள்.

‘‘எதுக்கு இலந்தைக் காணிக்கு தங்கச்சியையும் கூட்டிக்கொண்டு போனனி?’’

‘‘இல்லை..அவள் தான் என்னை வரச்சொல்லிக் கேட்டவள்.. ‘‘

‘‘அவள் கேட்டால் நீ போவியோ?’’

‘‘பாவமாயிருந்திது. அதுதான் போனனான்’’

‘‘ஆரங்கை வந்தது..?’’

‘‘ஒருத்தரும் வரேல்லை..’’ அக்காவின் பதில் அவவுக்கே முனியடிச்ச மாதிரி வெருண்டுபோய் வெளியில் வந்தது.

‘‘உண்மையைச் சொல்லு. இல்லையெண்டால் நானாகக் கண்டுபிடிப்பன்..’’

‘‘.............’’

அப்பாவின் கேள்விகளுக்குப் படபடவென்று பதிலளித்த அக்கா, கடைசிக்கேள்விக்குப் பதில் சொல்ல முடியாமல் நின்ற போது அப்பாவை விட அதிகம் திகைத்துப்போனது நான் தான். இப்போது அப்பா என் பக்கம் திரும்பினார்.

‘‘நீ...உண்மையைச் சொல்லு. வேற ஆரும் அங்கை வந்தவையோ?’’

‘‘இல்லையப்பா. றஞ்சி மட்டும் தான் எங்களோட வந்தவள்?’’ நான் பௌவியமாகவும் பணிவுடனும் எனக்குத் தெரிந்த உண்மையான பதிலைச் சொன்னேன்.

‘‘அவளைத் தவிர வேற ஒருத்தரும் வரேல்லையோ?’’

‘‘இல்லையப்பா. அப்பிடி ஆரையும் நான் காணேல்லை. ஆனால் றஞ்சி வெள்ளவாய்க்கால் வழியா வீட்டுக்குப் போகேக்கை, முனியைக் கண்டு கத்தின சத்தம் பெரிசாக் கேட்டது..’’ எனக்கு நாக்குளறியது.

‘‘முனியைக் கண்டவளோ?’’ அப்பா நெற்றியைச் சுழித்துக்கொண்டு கேட்டார்.

‘‘ஓம். அவள் வெள்ளவாய்க்கால் வழியா நடந்து போகேக்கை “முனி.. எண்டு பயந்து குளறின சத்தம் எங்களுக்குக் கேட்டது. பிறகு நாங்கள் ஓடி வந்திட்டம்..’’ எனக்கு பயத்தில் நாக்குளறுவது இன்னமும் நிற்காமலிருந்தது.

அப்பா வெடுக்கென்று திரும்பி அக்காவை ஒருமாதிரிப் பார்த்தார். பிறகு என்னைப் போய் உடுப்பை மாற்றி முகத்தைக் கழுவச் சொல்லி அனுப்பிவிட்டார். அக்கா அப்படியே அப்பாவுக்கு முன்னால் ஒருமாதிரி நெளிந்து கொண்டு வெருண்டு போய் நின்றுகொண்டிருந்தா. பிறகு அப்பாவின் விசாரணைகளில் அம்மாவும் சேர்ந்து கொண்டது கிணற்றடியில் முகம் கழுவிக்கொண்டிருந்த எனக்கு சாடையாகத் தெரிந்தது. நான் படிப்பதற்கு மேசைக்கு வந்த போது அக்காவின் கண்கள் அழுது வீங்கியிருப்பது தெரிந்ததும் எனக்கு ஒரே பதற்றமாக இருந்தது. அவவைப் பார்க்கப் பாவமாகவும் இருந்தது. இலந்தைக்காய் பொறுக்கப் போனதற்காக அக்காவுக்கு மட்டும் அடி விழுந்திருக்கிறது என்பதில் எனக்கு அக்கா மேல் தாங்க முடியாத இரக்கமாக இருந்தது. அக்கா பாவம் என்று உள்ளூரப் புலம்பிக் கொண்டிருந்தேன். ஆனாலும் நான் அடியிலிருந்து தப்பி விட்டேன் என்பதில் ஒரு பெரிய ஆறுதல் தான்.

றஞ்சிக்கு வெள்ளை முனி அடித்து, மூன்று நாட்களாகக் காய்ச்சல் காய்ந்து, பிறகு முதலிபேத்தி அம்மனுக்கும், காத்தவராயருக்கும் ஒரே நாளில் றஞ்சியின் அம்மா நல்லெண்ணெய் கொடுத்து விளக்கேற்றி, அவளுக்கு நூல் கட்டி விட்டதாகவும் ஊரெங்கும் கதை பரவியிருந்தது. றஞ்சி இரண்டு நாட்கள் பள்ளிக்கு வராமல் இருந்தாள். அதனால் பள்ளிக்கூடத்திலும் அந்தக்கதை பரவியிருந்தது.

அதெல்லாம் நடந்து பல மாதங்களுக்குப் பிறகு தான் எனக்குத் தெரிந்தது. அப்பா ஏன் சொல்லாமல் கொள்ளாமல் திடுதிப்பென்று பயணத்தால் வந்திருந்தார்? அவர் எங்களைத் தேடி நேராக ஏன் இலந்தைக்காணிப்பக்கம் வந்தார்? இலந்தைக் காணிக்குப் போனதற்கு ஏன் எனக்கு மட்டும் அடிவிழவில்லை? றஞ்சியைப் பயப்படுத்திய அந்த வெள்ளை முனி எது? அந்த சம்பவத்திற்குப் பிறகு நான் என்றைக்கும் காத்தவராயர் கோயில் வளவிற்குள் இறங்கினதேயில்லை. போகிற வழியில் நெஞ்சைத்தொட்டு பக்தியாகக் கும்பிட்டுவிட்டு நடையைக் கட்டிவிடுவேன்!

**அனுபவங்களைப் பகிருங்கள்...**

உங்கள் வாழ்நாளில் அனுபவித்த நிகழ்வுகளை எழுதி அனுப்புங்கள். களம்தரக் காத்திருக்கிறோம்.

“மயில்வாகனத்தார் ஐயா சிறு வயதிலேயே ஏதோ படிப்பு எல்லாம் படித்து விட்டு சீமைக்கு வேலைக்குப் போனவராம் அவற்ற பேரனும் நாலெழுத்து படிச்சவராம். அப்பொழுது இருந்து உடையார், வித்தானை வேலைஎல்லாம் அவர்களுக்குள் மாறி மாறி வருமாம். நல்ல பேரோட வருமானமும் அவர்களுக்குள் சுற்றி சுற்றி வந்ததாம்''. செல்லக்கிளி தன் சேலை தலைப்பால் தன் இரண்டாவது மகளின் ஈரத்தலையை துவட்டியபடி கதை சொல்வதுபோல் சொல்லிக்கொண்டே, இடையிடையில்

“இப்படி திரும்பிக் காட்டு. நீர் கோத்து காச்சல் வரப்போகிறது” என்றபடி

''கேட்டிலில தண்ணி எடுத்து அடுப்பில கொதிக்க வைச்சுட்டு வேர்க்கொம்பு எடுத்து தட்டு நான் வாறன்''

என்று தன் மூத்த மகளுக்குத் தான்சொல்லும் கதையோடு சேர்த்துச் சொல்லியபடி ஈரச் சேலை யின் தலைப்பை உதறிவிட்டு தன் இடுப்பை சுற்றி இழுத்து நாரிப் பக்கம் செருகிக் கொண்டே அடுப்படியில் போய் உட்கார்ந்தாள். தான் தொலைத்த படிப்பை தன் பிள்ளைகளுக்கு கிடைக்க வேண்டும் என்ற ஆதங்கம் மனதுக்குள் ஏக்கமாக உருவெடுத்தாலும் அதை நடத்திக்காட்டும் வல்லமை இருந்தால்தானே முடியும் என்ற சலிப்போடு தேயிலை பேணியை தேடுகிறாள்.

"அம்மா உன்னை முதலாளி அம்மா கூப்பிர்ரா" மகளின் குரல் கேட்டதும்

"இந்தா பிள்ளை தேத்தண்ணி போட்டு வேர்கொம்பு தூளையும் சீனியையும் போட்டு தங்கச்சிக்கு கொடு வாறன்''என்ற படி வேகமாக வாசலைக் கடக்கிறாள். தன் முன் காணிக்குள் ஒரு கொட்டில் போட்டுத் தோட்டம் துரவு வேலைகளைச் செய்யவும் , மயில்வாகனத்தார் தான் கூப்பிடும் போதெல்லாம் ஓடிப் போக என்று ஒரு குடும்பத்தை இருத்தி வைத்திருந்தார். பரம்பரையாகப் பணம் சேர்ந்து கொண்டே போவதாலும் உடல் உழைப்புக்கு அவசியம் இல்லாமல் போய் விட்ட நிலையில் வண்டியும் தொந்தியும் அவர் அடையாளம் ஆகிவிட்டது. அவருக்கு மணிமேகலை என்று ஒரு மகளும் மணியரசன் என்று ஒரு மகனும் இருக்கிறார்கள். அவர்கள் வீட்டு முற்றத்தின் முன் பகுதியில் ஒரு பெரிய பூந்தோட்டம். அதை சுற்றி அழகிய குரோட்ன்கள் வேலியாக அமைக்கப்பட்டு அதன் உள்ளே பல வர்ண ரோஜா மரங்களை அழகழகாக பாதுகாப்பு அரண் அமைத்து நாட்டி இருந்தார்கள். ஆங்காங்கே சிறு குடை போல் பந்தலிட்டு மல்லிகையும் அதனை சுற்றி நந்தியாவட்டை. தளதளத்த கரும் பச்சை நிறத்தில் இலைகளும் மரம் நிறைந்த வெள்ளைப் பூக்கள், பூக்க துடிக்கும் மொட்டுக்களும் தென்றலுக்கு ஈடு கொடுத்து

# என் அம்மாவும் சலித்து விட்டாள்

தீபதிலகை





ஆடிக்கொண்டு இருந்தன. இந்த அழகிய தோட்டத்துக்கு அழகுக்கு அழகு செய்பவர்களும் முன் காணிக்குள் இருக்கும் தம்பதி கள்தான். அந்த பூந்தோட்டத்தை சுற்றி வட்டமாக அகன்ற பளிங்கு பாதை. முன்னால் இருக்கும் இரும்பு கேட்டை தாங்கிபிடிப்பதுபோல் செங்கல் மதிற் சுவர் சுற்றி அரணாக கட்டி இருந்தது. இரும்புக் கேற் மூடி இருக்கும்போது பார்த்தால் தோகைமயில் ஒன்றை ஒன்று முத்தமிடுவதுபோல் காட்சி தரும். மயில்கள் இரண்டும் வண்ண தோகை விரிந்து ஆடுவது போல் கச்சிதமாக அமைத்து இருந்தார்கள். மதிலுக்கு மேலாக எட்டிப்பார்க்கும் குரோட்டன்கள்

இருமருங்கிலும் கேற்ரை அகலத் திறந்தால் மயில்வாகனத்தாரின் கார் தோட்டத்தை அரை வட்டம் போட்ட படி போட்டி கோவில் வந்து மிதக் கும். இதற்கு கேட் திறந்து விடுவதும் பின் கார் உள்ளே சென்றதும் கேற்றை மூடுவதும் காவலாளியா கவும் வேலை பார்க்கும் ஓல் இன் ஓல் கந்தசாமி முன் காணிக்குள் வாழும் குடும்ப தலைவன்

மயில் வாகனத்தின் மனைவி தெய்வானை. அவரின் தொட்டாட்டு வேலைக்கும் சமையல் காரியங்களுக்காகவும் பணிக்கு அமர்த்தப்பட்டவர் தான் முன்காணி குடியிருப்பாளர், குடும்ப தலைவி செல்லக்கிளி ஒவ்வொரு நாளும் சமையலில் உதவியாக இருந்து எல்லோரும் உண்டபின் மிகுதியை கொட்டிக் கொடுத்தால் அதை வாங்கிக் கொண்டு போய் கொடுத் தால் தான் அந்தக் குடும்பத்தின் அரை வயிறு நிறையும்.அவள் கணவன் நான்கு பிள்ளைகள் இந்த ஆறு ஜென்மங்களுக்கு தெய்வானை கிள்ளிக் கொடுக்கும் சாப்பாட்டில் எப்படி வயிறு நிறையும்? காலையும் இரவும் ஒவ்வொரு இறாத்தல் பாண். இதை தவிர வேறு உணவு பதார்த் தங்கள் அவர்கள் உணவுப் பட்டி யலில் இல்லை. ஏழைகளுக்கு இறை வன் அள்ளிக் கொடுக்கும் செல்வம் பிள்ளைகள். பணக்காரர்களின் வீடுக ளில் பொழுதுபோக்கு அதிகம். ஏழைகளின் பொழுதுபோக்கு இது ஒன்று மட்டும்தான் போலும். அதனால்தான் மயில்வாகனம் தம்ப திகளுக்கு இரண்டு பிள்ளைகள். இவர்களுக்கு நான்கு பேர். இத் தோடு நிறுத்திக் கொள்வார்கள்!? வெளியில் இருவரும் வேறு வேலை தேடி பாடுபட்டு உழைத்தாலும் அவர்களின் உணவு தேவைக்கு போக மிகுதிப் பணத்தில் பிள்ளைக ளுக்கு நல்ல உடுப்பு படிப்பு செலவு என்று விரலுக்கு ஏற்ற வீக்கம் என்பார்களே அப்படி வாழ்க்கையைக் கொண்டு போய் இருக்கலாம்.

அடிமை என்ற சொல்லை ஏன் மோகம் என்ற பதத்தோடு சேர்த்தார்கள்?அதற்குள் விழுந்தவன் மீண்டு வருவது சிரமம் என்பதினால் தானோ என்னவோ !சுதந்திரம் ஒரு மனிதனை பல வழிகளிலும் சிந்திக்க வைக்கிறது. தீர்க்கமாக முடிவெடுக்க வைக்கிறது. எடுக்கும் முடிவு தோல்வியிலேயே போய் முடிந் தாலும் மீண்டும் சளைக்காமல் திரும்பி எழ வைத்து விடும். அடிமைத்தனம் ஒருவனை ''சென்டி மென்ட்டல்பூல்''(sentimental fool) ஆக்கி இருப்பிடத்தை விட்டு நகர விடாது. அது தன்னை விட அடுத்தவனைப் பற்றிக் கொண்டு வாழ்வதால் பெரும்பாலும் எடுப்பார் கைப் பிள்ளையாகவே வாழ்ந்து விடுவார்கள். இந்த வகை மனிதர்கள் எல்லா இடங்களிலும் பரவலாகவும் ,பல குடும்பங்களில் கணவன்- மனைவியாகவும் இருக்கிறார்கள். அந்த வகையில் செல்லக்கிளி -கந்தசாமி ,மட்டுமல்ல இக் கதையின் கதாநாயகி மணிமேகலையும் தான். பிறந்த மண்ணை விட்டு வெகு தூரம் வந்தாலும் எப்போதும் ஒரு தர்மசங்கடமான மனநிலை (embarrassing)இல் இருந்து தன்னை மாற்றிக்கொள்ள விரும்பாதவள். இந்த நிலை செல்லக்கிளியின் இய லாத்தன்மை போல் அல்ல, இங்கே யும் அவள் சற்று வித்தியாசப்படு கிறாள். தற்பெருமை நிறைந்தவள் என்று சொல்வதை விட தான் தனித்தன்மை ஆனவள் என்றும் மற்றவர்களை விட உயர்ந்த ஸ்தா னத்தில் இருப்பவள் என்ற நினை வுகளை தன்னுள் வளர்த்துக் கொண்டு அதற்கு அடிமையாகி போனவள் வெண்ணிலா.

வெண்ணிலா வேறு யாரு மல்ல,மயில்வாகனத்தின் பேத்தி. மணிமேகலையின் மகள். மணிமேக லையின் பிறப்பு வளர்ப்பு பற்றி கதையின் ஆரம்பத்திலிருந்து புரிந்து இருக்கும். வெண்ணிலாவின் தந்தை லண்டனில் உள்ள பெயர் பெற்ற கம்பெனி ஒன்றில் நவீன வசதிக ளோடு கூடிய தொடர்மாடி கட்டிடங் களை நிர்மாணிக்கும் பொறியிய லாளர்களுக்கு முதன்மையானவர். அவர் இலங்கையில் இருந்து திறமை தகுதி இவற்றின் அடிப்ப டையில் இக் கம்பெனிக்கு என்று வேலைக்கான விசா கொடுத்து வரவழைக்கப்பட்டு பிரத்தியேகமாக பணியில் அமர்த்தப்பட்டவர். அவ ருக்கு மனைவியானதில் மணிமே கலைக்கு பெரும் ஆனந்தம்தான். ஆனாலும் தன் பிறப்பும் தன் குலப் பெருமையும் அதை விடப் பெரியது என்று அடிக்கடி சொல்லிக் கொள் வாள். அவளின் குணம் பற்றி ஒரு சிறு விளக்கம், மாபெரும் சேலைக்

கடைகளின் வாசல்கள் தோறும் காலை தொடக்கம் மாலை வரை சளைக்காமல் ஏறி இறங்குவாள். வரும் புதுப்புது டிசைன்களில் புதுப்பொலிவுடன் வரும் சாரிகளை புரட்டிப் புரட்டிப் பார்த்தாலும் எதிலும் திருப்தியை காணமாட்டாள். ஏதோ எங்கேயோ ஒரு குறை இருப்பதாகவே அவள் மனம் சொல்லும். இறுதியில் எதையும் வாங்காமல் திரும்பி வந்து விடுவாள். சிலர் ஆசைப்பட்டு தொட்டு பார்ப்பார்கள் தொங்கும் விலைப் பட்டியலைக் கண்டு சுட்ட கையை வெடுக்கென்று விலக்குவது போல் தம் இருப்பிடத்தை விட்டு விலகிக் கொள்வார்கள். அந்த ரகம் அல்ல இவள். இவள் பணம் காய்க்கும் மரத்துக்கு கீழ் படுத்து உறங்குபவள். அவள் செய்யும் செலவுகள் பற்றி அவள் கணவன் எதுவும் சொல்வதில்லை. அதேபோல் அவள் சொல் செயல் எதுவாக இருந்தாலும் அவளின் விருப்பம் தான் அவன் கணவன் காண்டீபனின் விருப்பமும். அதேபோல் அவள் மகள் வெண்ணிலா மகன் திலீபன் எல்லோரும் அம்மா சொல்லுக்கு மறுப்பு எதுவும் தெரிவிப்பதில்லை. சுருங்கச் சொன்னால் அவர்களின் உணவு உடை படிப்பு நட்பு வட்டம் எல்லாம் அம்மாவின் விருப்பப்படியே. அதேபோல்தான் அவள் கணவனும் எல்லோருடனும் நட்பு வைத்துக் கொள்வதை அவள் அனுமதிப்பதில்லை. தன்னுடைய நட்பு வட்டத்துக்கும் ஒரு வட்டம் போட்டு வைத்தி ருந்தாள். இந்த வட்டம் சாதி, பணம் படிப்பு நிறம் கௌரவம் அந்தஸ்த்து என்ற நிறம் மாறாத கோடுகளால் வரையப்பட்டது.

வெண்ணிலாவும் திலீபனும் லண்டனில் தான் பிறந்தவர்கள். ஆரம்ப பாடசாலையில் இருந்தே பிள்ளைகளின் நண்பர்கள் யார் என்பதிலும் அவர்கள் பழுப்பு கருப்பு நிற மனிதர்கள் மத்தியில் மட்டுமல்ல கலப்பு ஆங்கிலேயர்கள்,கல்வி தகுதி குறைந்த ஆங்கிலேயர்கள் என்ற தரத்தில் உள்ளவர்களையும் தன் பிள்ளைகளின் நட்பு வட்டத்துக்குள் நெருங்க விடாது கண்ணும் கருத்துமாக இருந்தாள். நம் நாட்டவர்கள் என்றால் இலங்கையில் எந்தப்பாகத்தை சேர்ந்தவர்கள். அவர்களின் சாதி குலம் கோத்திரம் என்ன என்று அக்கு வேறு ஆணி வேறாக தரம் பிரித்து அறிந்து வைத்திருப்பாள். மூச்சுக்கு முந்நூறு தடவை தன் குலப் பெருமையும் பண பலத்தையும் சாதிதடிப்பையும் பேசிப் பேசியே மற்றவர்களை பேச விடமாட்டாள். தன் பிள்ளைகளுக்கும் அவற்றை திணித்து வைத்து இருந்தாள். அவர்கள் அதிகம் பேச மாட்டார்கள் அவர்களுக்கு, தங்கள் அம்மா சொல்லும் விடயங்கள் பற்றிய விளக்கம் புரிந்ததோ இல்லையோ அவர்களும் அவற்றில் இசைவாக்கம் அடைந்து கொண்டார்கள்.

அவள் வீடு 5 படுக்கை அறைகள் கொண்ட நவீன வசதிகள் படைத்த 3 மாடி கட்டிடம். அவளின் விருப்பத்துக்கு மதிப்பளித்து அவள் கணவன் கவன மெடுத்து கட்டிய வீடு. இதைச் சொல்லிச் சொல்லி நண்பர்களுக்கும் உறவினர்களுக்கும் பெருமை காட்டு வாள் . வீட்டை சுத்தம் செய்ய, லோன்றி அயன் வேலை என்று ஒருவரும் சமையல் செய்ய செடிக்கு தண்ணி ஊற்ற கூப்பிட்ட குரலுக்கு ஓடி வர செல்லக்கிளி மாதிரி ஒருவரும் என இருவர் மணிமேகலையின் வீட்டில் வெண்ணிலா பிறந்த காலத்தில் இருந்து வேலை செய்கிறார்கள். இவர்கள் செய்யும் வேலைக்கு உரிய சம்பளம் அவரவர் வங்கிக்கு போக மணி மேகலையின் சுய புராணத்தை சலிக்காமல் கேட்பதற்கும் அப்பப்ப கிம்பளமாகவும் பெற்றுக்கொள்வார்கள்

வெண்ணிலா மூக்கும் முழியுமாக அழகாக இருப்பாள் மஞ்சள் எலுமிச்சம்பழ நிறம் றோஸ் கலர் கன்னங்கள். பார்ப்பவர்கள் மீண்டுமொருமுறை திரும்பிப் பார்க்க வைக்கும் அழகு. அதிலே மணிமேகலைக்கு கூடுதல் பெருமை. மகளின் அடர்த்தியான கருங்கூந்தலை நன்றாக பராமரித்து வளர்ப்பவள் அவள்தான். மகளின் உச்சியில் பென்சிலால் நேராக வரைந்த நேர்த்தியான கோட்டைப்போல் வகிடு எடுத்து இரட்டை பின்னல் போட்டு விடுவாள். மகள் நடக்கும்போது பின் புறத்தில் ஜடைகள் இரண்டும் முற்றி நீண்ட இரண்டு புட லங்காய்கள் ஒன்றோடு ஒன்று தொட்டு விளையாடுவது போல் தோன்றும் காட்சியை புன்சிரிப்போடு ரசிப்பாள்.

காலங்கள் விரைவாக ஓடிவிட்டன. பாடசாலைக்கு போன பிள்ளைகள் பல்கலைக்கழகத்துக்கு போக தொடங்கி விட்டார்கள். இப்போதுதான் தன் மகள் வளர்ந்து விட்டாள் என்ற ஒரு பொறி அவள் மனதில் தட்டியது. தன் மனதில் உள்ள தயக்கத்தை தன் கணவனிடம் பகிர்ந்து கொண்டாள்.

“இதை கேளுங்கோ அப்பா வெண்ணிலா போகும் யூனியில் கண்ட கண்ட நாட்டுப் பொடியளும் படிப் பாங்கள்தானே. அதுகள் ஆரெண்டு தெரியாமல் இவள் பழக வெளிக்கிட்டு பிறகு வம்பில போய் முடியாதோ? எனக்கு பயமாய் இருக்குது’’ என்றவளை

"உமக்கு எங்கட பிள்ளையில நம்பிக்கை இல்லையோ?

இதுவரையில் எதுவென்றாலும் வெண்ணிலா உம்முடைய பேச்சுக்கு மறு பேச்சு பேசி இருக்கிறாளோ? நீர் தான் ஒவ்வொரு நாளும் எங்கட சாதி குலம் ஊரில எங்கட செல்வாக்கு எல்லாம் என்ன என்று விளங்கபடுத்திதானே வளர்த்தனீர்.'' காண்டீபன் ஆறுதல் சொன்னான். சிறிது தயங்கிய பெருமூச்சோடு அவள் தொடர்ந்தாள்.

"இது தெரியுமோ! உங்களுக்கு செல்லக்கிளியைத் தெரியும் தானே''

"ம்ம் தெரியும் உம்முடைய காணிக்குளே இருந்து உங்கட வீட்டிலேயே வேலை செய்த குடும்பம். அவள் புருசன் பெயர் கந்தசாமி தானே?. செல்லக்கிளிக்கு என்ன நடந்தது?"

"ஐயோ செல்லக்கிளிக்கு ஒண்டும் நடக்கையில்லை. அவள் மகனும் மகளும் வெண்ணிலாவின்ர யூனியில்தான் படிக்குதுகளாம்.''

"உமக்கு யார் சொன்னது ?'' காண்டீபன் படுக்கையிலிருந்து எழுந்து உட்கார்ந்தபடி அதிர்ச்சியாக கேட்டான்

"வெண்ணிலா தான்''

"வெண்ணிலாவுக்கு எப்படி தெரியும் ?''

''ஊரில அப்பாதான் சொன்னாராம். வெண்ணிலா எங்க படிக்கிறா என்று செல்லக்கிளி கேட்க அப்பா யூனியின்ர பேரை சொல்ல, செல்லக்கிளியும் தன்ர பிள்ளையள் படிக்கிற யூனியின் பெயரை அதுகள் எழுதின கடிதத்தைக் காட்ட அதில் இருந்து அப்பா படித்து சொன்னாராம். செல்லக்கிளி டெலிபோனில பிள்ளையளுக்கு சொல்லியிருக்கிறாள். அதுகள் வந்து வெண்ணிலாவுக்கு சொன்னதுகளாம்.''

காண்டீபன் சிறிது நேர அமைதிக்கு பிறகு

"நாட்டு பிரச்சனை வந்தாலும் வந்தது கண்டதுகள் நீண்டதுகள் எல்லாம் வெளிநாடுகளுக்கு வந்து சேந்துட்டுதுகள். ஏயன்சிக் காரன் காசுக்கு எல்லாத்தையும் கொண்டுவந்து சேத்திட்டான்'' அவர்கள் இருவரின் சம்பாசனையில் மனிதம் ஆயுள் தண்டனை கைதியாக இரும்புக் கூட்டுக்குள் சென்று விட்டது.
சில வருடங்களுக்கு முன்பு இங்கிலாந்தில் அகதிகளின் வருகை பற்றி ஒரு கருத்துக்கணிப்பு நடைபெற்றது. அதற்கு அகதிகள் வருகைக்கு எதிராக வாக்களித்தவர்களில் காண்டீபன் போன்றோர்தான் அதிகம்.அதுவும் இலங்கையை சேர்ந்தவர்கள். என்ன காரணம் என்று ஆராய்ந்தபோது தாங்கள் படித்து தகுதி அடிப்படையில் இங்கு வந்தவர்கள். படிக்காமல் அகதிகள் அந்தஸ்து கோரி இங்கு வந்து கஸ்டப்படாமல் மாத்திரம் அல்ல தங்களை விட முன்னேற்றம் காண் கிறார்கள் என்பதை மனத்தளவிலும் பொறுக்க முடியாதவர்கள் அடுத்து தாங்கள் வேலை செய்து கட்டும் வரிப்பணத்தில் தங்களிடம் இல்லாத சொகுசு கார், தங்கள் பிள்ளைகளுக்கு இல்லாத இலவசம் என்றும் விசேடமாக பல்கலைக்கழகத்தின் அனுமதிக்கும் தனிப்பட்ட சலுகைகள், இதனால் மனமுடைந்து போனவர்களும் இந்தக் கருத்துக்கு கணிப்புக்கு எதிராக வாக்களித்து இருந்தார்கள். இந்த மனநிலையில் உள்ள காண்டீபனால் எப்படி செல்லக்கிளியின் பிள்ளைகள் லண்டனில் அதுவும் இங்கே பிறந்து வளர்ந்த தன் அருமை மகள் வெண்ணிலா படிக்கும் அதே யூனியில்! .......அவன் மனம் பொறுக்கவில்லை.

"அவர்கள் என்ன படிக்கிறார்கள் என்று வெண்ணிலாவிடம் கேட்டீரா ? ''
"ம் கேட்டேன். அவர்கள் Bsc படிக்கிறார்களாம். தங்களின் பயலஜி வகுப்புக்கு அவர்களும் சில வேளைகளில் வருவார்களாம்.''

"ஊரில வீட்டுக்குள்ளே வர தயங்கின சனம்.......'' அவன் தொடர முடியாமல் நிறுத்திக் கொண்டான். வெண்ணிலா மருத்துவம் படிக்கும் மாணவி. அவர்கள் தன் வகுப்புக்கு வரும்போது இவளிடம் பேசிப் பழக ஆசை பட்டாலும் அவள் விலகி இருந்து கொள்வாள். அது அவளின் குற்றம் அல்ல இது தான் அவள் வளர்ந்த வளர்ப்பு.

மணிமேகலைக்கு, விரைவில் மகளுக்கு மணமுடித்து வைக்க வேண்டும் என்ற உணர்வுகள் முளைவிடத் தொடங்கி விட்டது. ஊரிலே நல்ல இடம் பார்க்கும்படி அப்பாவிடம் சொன்ன போது

''இங்கே யார் இருக்கிறார்கள்? சொந்தத்தில் உள்ளவர்கள் எல்லாம் அவுஸ்திரேலியா,அமெரிக்கா,கனடா ஜெர்மனி, பிரான்ஸ் ,சுவிஸ் ,டென்மார்க் லண்டன் என்று போய் விட்டார்கள் அங்கு போன எம்மவர்கள் சாதி விட்டு சாதி மாறி கட்டி இருக்கினம். மதம் விட்டு மதம் மாறி கட்டி இருக்கினம். வேற நாடுகள் மாறி கட்டி இருக்கினம். அதை சிலர் பெருமையாகவும் சொல்லிக் கொள்ளும் போது தான் மனம் கொதிக்குது. அப்பளுக்கு இல்லாமல் தேடி பிடிக்கிறது பெரிய

கஸ்ரம்.'' இதை சொல்லும்போது அவரின் மூக்கு அவருக்குள்ளே இருந்து வரும் வெப்பம் காற்றில் சிவந்து விடும்.

" என்னப்பா செய்கிறது? சொந்த நாட்டில இல்லாட்டியும் வெளிநாட்டில் இருக்கிற எங்களுடைய சொந்தத் துக்குள்ளே எங்களைப்போல கவுரவமாக வாழும் சில பேர் இருப்பினும். பொறுமையாக விசாரித்துப் பாருங்கோ'' என்று அழாக்குறையாக சொல்லி வைத்து இருப்பதையும் கணவனிடம் சொல்லியிருக்கிறாள்.

."நேற்றும் அப்பாவோட கதைத்தனான். அப்பாவும் தனக்கு தெரிந்தவர்கள் மூலம் வெளி நாட்டில் இருக்கும். நம் நாட்டுப் புரோக்கர்கள் இடமும் சொல்லியிருக்கிறார். எவ்வளவோ வரன்கள் வந்து கொண்டுதான் இருக்கு. ஒன்றும் மனசுக்கு திருப்தியாக வரவில்லை'' என்று சோர்வாக சொன்னாள்.

கடல் போன்ற சேலைக் கடைக்குள் புகுந்து எதிலும் திருப்தி இல்லாமல் வெறும் கையோடு திரும்பி வருபவளுக்கு காலம் உருண்டோடுவதும் தெரிவதில்லை.

வெண்ணிலாவும் பருவ வயதில் எதிர்பால் இனக்கவர்ச்சி இல்லாதவள் அல்ல. அதேபோல் அழகுணர்ச்சி கொண்ட எவரும் அவளைக் கண்டு மயங்காதவர்களும் அல்ல. தன்னைத் தேடி வந்து தங்கள் காதலை வெளிப்படுத்தியவர்கள் எல்லோரிடமும் சற்று தள்ளியே இருந்தாள். அவளுக்கு அவள் அம்மா அப்படித்தான் சொல்லி வளர்த்து இருந்தாள். அவளை விரும்பி வந்தவர்களுக்கு அவள் சுலபமாக இல்லை என்று சொல்லிவிட்டாள். ஆனால் அவள் மனதை கவர்ந்தவன் 'லோரன்ஸ்' ஒரு ஆபிரிக்க நாட்டு தந்தைக்கும், ஐரிஸ் நாட்டு தாய்க்கும் மகன். அந்த கலப்பு அழகு தான் மற்ற மாணவர்கள் எல்லோரையும் விட அவனை தனித்துவமாக காட்டியது. சுருள் சுருளாக கருப்பு முடியும் பளபளக்கும் வெண்மையான மேனியும் கோழிமுட்டையை உடைத்து ஊற்றினால் அழகு காட்டும் தளதளத்த வட்ட கரு விழிகளும், அவன் பேசும்போதும் சிரிக்கும்போதும் முன் நெற்றியில் வந்து விழும் சுருட்டை முடிகளை சரி செய்யும் அழகும் வெண்ணிலாவை பல நாள் தூங்க விடவில்லை. அவனின் கம்பீரமான பேச்சு வகுப்பில் எல்லோரையும் கவர்ந்ததை விட அவளை பெரிதும் பாதித்து இருந்தது. அவள் தன் காதலை அவனுக்கு புரிய வைக்கும் முகமாக சில செயல்கள் மூலம் தெரிவித்த போதும் அவன் அதை புரிந்து கொண்டதாக காட்டிக் கொள்ளவில்லை. மற்றவர்களை விட அவன் தன்னோடு நெருக்கமாகவும் இருக்கிறான். நிறைய பேசுகிறான். தன் எண்ணங்களை அவன் புரிந்து கொள்ளாமல் இருக்க முடியாது அவள் நேரடியாக தானே தன் விருப்பத்தை சொல்லி விடலாம் என்று எண்ணும் போது அவன்"நான் உன்னுடன் அப்படி பழகவில்லை" என்று சொல்லிவிட்டால் என்ன செய்வது. எதுவாக இருந்தாலும் துணிந்து இரண்டில் ஒன்று பார்த்து விடலாம் என்று அசட்டு தைரியத்தை வர வைக்கும் போது அவள் கண்முன்னே அம்மா அரிவாளோடு வந்து நிற்கும் காட்சி எல்லாவற்றையும் அழிறப்பர் போட்டு அழித்துவிடும்.

அவளுக்கு 'மீரியாம்' என்றொரு நல்ல தோழி இருக்கிறாள். இருவரும் மருத்துவக் கல்லூ ரியில் முதல் ஆண்டில் இருந்தே நண்பிகள் ஆனவர்கள். அவள் கனடாவில் இருந்து இங்கு வந்து மருத்துவம் படிக்கிறாள். அவளிடம் தன் மனம் லோரன்ஸ் மேல் காதல் கொள்வதும் அதை அவனிடம் தெரிவிக்க பயமாக உள்ளது என்று தன் ஆசையை தெரிவித்தபோது அவள் வாய் விட்டு சிரித்துக் கொண்டே
"உன் விருப்பத்தை வெளிப்படையாக சொன்னால் தானே அவன் தன் விருப்பத்தை சொல்லுவான், அவன் இல்லை அப்படியான உணர்வு உன்மேல் எனக்கு வரவில்லை, நல்ல நட்பு மட்டும் தான் என்று சொல்லிவிட்டால் என்ன ? அப்பதானே உன் வாழ்க் கையின் முடிவை நீ சுதந்திரமாக எடுக்க முடியும்" என்ற தோழியின் பதில் அவளுக்கு துணிவையோ திருப்தியையோ கொடுக்கவில்லை. நண்பி தன் விருப்பத்தைத் தனக்காக அவனிடம் சொல்லி நல்ல தீர்வை பெற்று தருவாள் என்று நம்பினாள். இது என்ன சங்ககாலமா? தலைவியின் விருப்பத்தை பாங்கியிடம் சொல்லித் தூது அனுப்புவதற்கு.

நீ விரும்பினால் உனக்காக உன் பசிக்கு நீ தான் உணவு உண்ண வேண்டும் என்று அவள் உள்மனம் அவளுக்கு தீர்வு சொன்னது. இன்று நானே அவனிடம் நேரடியாகவே சொல்லி விடவேண்டியதுதான் என்ற எண்ணத்தோடு பல நாட்கள் வகுப்புக்குப் போவாள். அங்கே அவனைக் கண்டதும் அவள் இரவு முழுக்க போட்ட திட்டம் எல்லாம் புஸ்வாணம் போல் ஆகிவிடும். அம்மா அப்பாவின் கம்பளி அவளை இறுக்கிக் கொள்ளும் . மனதோடு அவன் மேல் கொண்ட காதல் 5 வருடங்களாக வளர்ந்து மரமாகி குழந்தை குட்டிகளையும் பெற்று சில வருடங்கள் ஆகியும்

விட்டன. சொல்லாத காதலுக்கு ஆயுள் கெட்டி போலும். லோரன்சோடு கனவில் வாழும் வாழ்க்கை பிரச்சனைகள் அற்ற சந்தோசமான வாழ்க்கையாக அவளுக்குப் பட்டது. அவளும் இன்று ஜிபி ஆகி தனியார் மருத்துவ மனையில் வேலை செய்கிறாள். வயதும் 40 ஆகிவிட்டது.

கடிகாரம் காலை 6மணியை காட்டிக்கொண்டு கொண்டு நில்லாமல் பெரிய முள்ளின் பின்னால் மெல்ல நகர்ந்து கொண்டு இருந்தது. 9மணிக்கு சேஜரிக்கு போகவேண்டும். குளிக்க போகு முன் இன்றைக்கு போடும் உடுப்புக்களை எடுக்க என்று அலமாரியை திறந்தவளை

"எத்தனை மணிக்கு வேலை" என்று கேட்டுக்கொண்டே காப்பியோடு அம்மா உள்ளே வந்தாள். வழமையாக வீட்டுவேலை செய்யும் கமலா அக்காதான் காப்பி கொண்டு வருவார். இன்று அம்மா! ஆச்சரியத்தோடு அம்மாவைப் பார்த்தாள்.

''என்னம்மா இன்று என்ன விசேடம்.''

''அப்படி ஒரு விசேடமும் இல்லை. நானும் உன் அப்பாவும் தூங்கி மாதங்களாகிவிட்டது. உன் தம்பி என்னோடு பேசுவதை குறைத்துக்கொண்டான்.''

"என் தம்பிக்கு என்ன வந்து விட்டது" அவள் கேட்டாள்

"அவனுக்கு ஒன்றும் இல்லை. எல்லாம் உன் கலியாணம் பற்றிதான்''அம்மாவின் குரலில் சோக நரம்புகள் கீச்சிட்டன.

"ஏன் என் கலியாணத்தால் அவனுக்கு என்ன பிரச்சனை''

"உனக்கு வந்த நல்ல கலியாணங்களை எல்லாம் அது சரி இல்லை இது சரி இல்லை என்று தட்டிக் கழித்து போட்டமாம். இப்ப வயது 40 ஆயிற்றுது. இன்னும் எவ்வளவு காலம் மாப்பிள்ளை பார்க்க போகிறீர்கள்?" என்று கோபப்படுகிறான் இப்பவும் "கோப்பி வேணுமா?" என்று கேட்டபோது ''எனக்கு ஒன்றும் வேண்டாம் அம்மா தயவுசெய்து எனக்காக அக்காவிடம் அவள் மனதில் யாரும் இருக்கிறார்களா? அவள் யாரையாவது காதலிக்கிறாயா? என்று கேளுங்கோ அப்படி யாரும் இருந்தால் அதையாவது கேட்டு பார்த்து செய்யுங்க" என்று சொல்லிக்கொண்டே ஸ்கூட்டரை எடுத்துக்கொண்டு கோவமா வெளியே போய் விட்டான்.

"அதற்கு அப்பா என்ன சொன்னார்?"

"அப்பா மட்டும் என்ன ? நானும் அதைத்தான் கேட்கிறேன்."

"நீ யாரையாவது காதலிக்கிறாயா?அவன் எந்த நாட்டு காரன் ஆக இருந்தாலும் பரவாயில்லை. என்ன வேலை செய்பவனாக இருந்தாலும் பரவாயில்லை. உனக்கு பிடித்து இருந்தால் போதும்''

காப்பியை அருகில் உள்ள கண்ணாடி மேசையில் வைத்து விட்டு அம்மா இவ்வளவு காலமும் தன்னைத்தானே சுற்றி கட்டி வைத்த இரும்புக் கூட்டை உடைத்து எறிந்து விட்டு திரும்பிப் பார்க்காமல் போய் விட்டாள். வெண்ணிலா காப்பி வைக்கப்பட்டு இருந்த மேசையின் நிலைக்கண்ணாடியில் தன்னைத் தானே பார்க்கிறாள். தன்தலை உச்சியில் பென்சில் கூர் போன்று அம்மா எடுத்த வகிடு அடிமட்டம் அளவுக்கு விரிந்து கிடந்தது. வகிடு நீட்டுக்கும் இடையிடையே வரிசையாக வெள்ளி சரிகை கோடுகள். புடலங்காய் போன்ற திரண்ட கூந்தல் கற்றைகள் பயற்றங்காய் போல் ஆகிவிட்டது. நெற்றியில் மெல்லிய கோடுகள். கன்னம்களை இழந்து நிறம் மங்கி இருக் கிறது. முகம் மாத்திரமா உடலிலும் சிறு தளர்ச்சியும் கூடவே சோர்வும் அப்பப்ப வந்து போக தொடங்கி விட்டது. இப்போ அம்மா வந்து "நீ யாரையாவது காதலிக்கிறாயா''?என்று கேட்கிறாள். பாவம் என் அம்மாவும் சலித்து விட்டாள்.

## மார்க்சியம்

மார்க்சியம் உலகைப் புரிந்து கொள்வதற்கான ஒரு தத்துவம். உலகை மாற்றுவதற்கான ஒரு வழிமுறை என்ற வகையிலும் பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியிலிருந்து உலகில் பெரும் செல்வாக்குச் செலுத்தி வருகிறது. மானுட விழுமியங்களை நோக்கிய மனிதனின் முழுமையான வளர்ச்சிக்குத் தடையாக இருக்கும் சகல தளைகளையும் உடைத்து உண்மையான மனித விடுதலையைப் பெற்றுத்தரும் ஒரு தத்துவமாக அது கருதப்படுகிறது.
ஒடுக்குதலுக்குள்ளான மிகப் பெரும்பாலான உலக மக்களின் ஒரு ஆதர்சமாக அது விளங்குகின்றது.




# வேடிக்கை மனிதர்கள்


**வி**டிந்தும் விடியாமலும்
இன்னும்
இருண்டு போய்க் கிடக்கிறது
அதிகாலையில் சுப்ரபாதம்போல
இன்று மனைவியின்
அர்ச்சனை
'ஏழி'யாகவே தொடங்கிவிட்டது
இன்று
ஆடி அமாவாசையாம்
கோயிலுக்குப் போய்
மோட்ச அர்ச்சனை
செய்ய வேண்டுமாம்
அம்மா, அப்பா
எங்களுக்காய்ப் பட்டபாடுகள்
அதுகளுக்காகப் போவதில்
எந்த தயக்கமும் இல்லை
ஆனால்
அதுகள் நிழலில் இளைப்பாறினோம்
எங்கள் நிழலில்
அதுகள் இளைப்பாறாமல்
போய்விட்டார்களே
என்ற கவலை
இன்றுவரை தொடர்கிறது
அர்ச்சனை நின்றபாடில்லை
மெதுவாக
தலையை நிமிர்த்திப் பார்க்கிறேன்
பூமித்தாய் இன்னும்
இரவு உடையில்தான்
இவளோ,
இன்னும் கொஞ்ச நேரம்
அணைத்தபடி
படு என்று கெஞ்சுகிறாள்
ஆனாலும்,
கோயிலுக்குப் போய் வந்து
வேலைக்கும் போகவேண்டும்
அவளை
ஒரு ஓரமாக சுருட்டிப் போட்டுவிட்டு ......
எழுந்து குளித்து வெளிக்கிட்டாச்சு
இப்ப தனியாகப் போக(ச்)
சங்கடமாக இருந்தது
யாரைக்
கூட்டிப் போகலாம்
என்று நினைக்கையில்
சத்தியண்ணாதான்
முதலில் ஞாபகம் வந்தார்
சத்தியண்ணா
ஒரு சமூகசேவகராய்
தன்னை
அடையாளப்படுத்திக் கொண்டவர்
எப்போதும்
கோயில் கோயில்
என்றே திரிபவர்..
சரியான ஆள் தான்..
இருவருமாய்..........
கோயிலில் சனக்கூட்டம்
தாய் தகப்பன்
இருக்கும் போது
நல்லாப் பாத்தார்களோ
தெரியாது
ஆனால்
இன்றைக்கு இப்படி(ச்) சனம்
நமக்கேன் வம்பு..
கோயில்
ஐயாமார் முகத்தில
ஒரே மலர்ச்சி
தெரிஞ்ச ஆக்களாப் பார்த்து
கொஞ்சம் வீக்கம்

உள்ளவையாகப் பார்த்து
விசேட
ஆசீர்வாதங்கள் நடக்குது
நானும் கோயிலுக்குள்ள
போய்
அர்ச்சனைத் துண்டு வாங்கி
வரிசையில் நிண்டு
மோட்ச அருச்சனை
எண்டு
துண்டை நீட்ட
ஐயா சொன்னார்
மோட்ச அருச்சனை
பத்து ரூபா என்று
சரி என்று நானும்
திரும்ப போய்
பத்துரூபா தட்டு வாங்கிவர
அதுக்குள்ள
ஐயாவுக்குத் தெரிந்த
யாரோ புகுந்திட்டினம்
காவல் நிண்டு
என்னுடைய முறைவர
அவசர.. அவசரமாக..
எல்லாம் முடித்துவிட்டு
தருப்பையைக் கழற்றி
தட்டில் வையுங்கோ
என்றார்..
கழற்றி வைக்க
தம்பி தட்சணை என்றார்
நானும் தருப்பையோடு
ஐந்து ரூபாயை
வெற்றிலையில் வைத்துக் கொடுத்தன்..
ஐயாவுக்கு
பெரிய சந்தோசம் இல்லைப் போலும்..
நானாக கொடுத்தால்
தட்சணை
கேட்டு வாங்கினால்
அதற்குப் பெயர்
பிச்சை என்று
எங்கோ படித்த ஞாபகம்
இப்ப கோயில் என்கிற
வியாபார நிறுவனங்களில்
இப்படி பிச்சையும்
எடுக்கிறார்களோ
என்று எண்ணிக் கொண்டிருக்க
வயிறு பிடுங்குகிறது..
இப்ப நானும்
சத்தி அண்ணனும்
வரிசையில் நின்று
கோப்பையை எடுத்து
அப்பாடா..
நல்ல சாப்பாடு
அப்பளம் மிளகாய்ப் பொரியலோடு
வடை பாயாசம்..
கோயில்ல என்ன சாப்பிட்டாலும்
அமிர்தமாக இருக்கும்
இண்டைக்கு
இன்னும் விசேடமாக
சாப்பிட உட்கார
வந்ததே
ஒரு குரல்
என்ன சத்தியண்ணே
என்று
குசலம் கேட்க
இந்த மனிசனும்
சம்பிரதாயத்திற்காய் கேட்க
அவரும்.
“அவரும் இண்டைக்கு அபிசேகம்
தான்..”
என்று சொல்ல வந்ததே வினை
சிரிச்சுக் கதைச்ச
சத்தியண்ணன்
முகம் வாடிப் போச்சு..

பிசைஞ்ச சோற்றை
கோப்பையில போட்டிட்டு
யோசிக்குது மனிசன்
எனக்கென்றால்
ஒன்றுமே விளங்கவில்லை
தம்பி
ஊரில எண்டால்
உவங்கள் வீட்டில
போய்
தண்ணி குடிப்பியளே..
எனக்கு வேண்டாம்
நீ.. சாப்பிடுறது என்றால்
சாப்பிட்டு வா..
என்று சத்தியண்ணை சொல்ல
எனக்குப் பசி
வயிற்றைப் புடுங்க
அண்ண
என்ன சொல்றியள்
கோயில்ல வந்து
நின்று கொண்டு
என்ன கதைக்கிறியள்.
அது சரி
உங்களுக்கு விருப்பம்
இல்லை எண்டாலும்
இது கோயில் சாப்பாடுதானே
அவை என்ன
தங்கடை வீட்டிலயா
சமைச்சு வந்தவை
எங்கேயாவது
ஓடர் பண்ணி எடுத்திருப்பினம்
சாப்பிடண்ணை
அந்த மனிசன்
முடியவே முடியாது என்றிட்டுது
நானும் விடாமல்
இப்ப தெரிஞ்ச படியால்
வேண்டாம் என்று சொல்றியள்
தெரியாவிட்டால்.
சாப்பிட்டிருப்பியள்தானே...
என்றேன்
அவர் மௌனமாகச் சிரித்தார்
எங்கடை சனத்தை
நினைக்க
சிரிப்பு தான் வந்தது
இத்தனை தூரம்
கடல் கடந்து வந்தும்
திருந்தவில்லையே!
சொந்த நாட்டில
துரத்திவிட
உயிரைக் கையில்
பிடித்துக்கொண்டு வரேக்கை
இந்த நாசமாப் போன சனம்
இவ்வளவு நஞ்சையும்
நெஞ்சுக்குள்ள
வைச்சுக் கொண்டுதானே
வந்திருக்குதுகள்
முகத்திலை
வெறும் புன்னகை
மனதினுள் அத்தனையும்
அழுக்கு...
இப்பதான்
எனக்கு யாரோ சொன்னது
ஞாபகம் வந்து
கோயிலுக்குப் போகும்போது
அழுக்காகப் போகும்
பழம் பாக்கு வெற்றிலைகள்
புனிதமாக
வெளியே வர.,
புனிதமாகச் செல்லும்
மனிதன். மட்டுமே
அழுக்குடன் திரும்புகிறான்..
இப்போது
சத்தியண்ணை மீது
இருந்த மரியாதை
அறவே
இல்லாமல் போய்விட்டது
அட கடவுளே
கோயில் கோயில் என்றும்
சமூக ஆர்வலர்
என்றும் நடிக்கும்
இந்த மனிதருக்குள்ளும்
இத்தனை அழுக்கா...
இந்த இருபத்தோராம்
நூற்றாண்டிலும்
இப்படிப்பட்ட வேடிக்கை
மனிதர்கள்..
எனக்கு அவரோட
பேசவே பிடிக்கவில்லை
என்ன தம்பி
மௌனம் என்றார்
சில நேரங்களில் மௌனமேசிறந்த
மருந்து என்றேன்...

# கொரோனா கற்றுத் தந்த பாடங்கள்

## கண்ணதாஸ்



இக் கதை சிறுகதை மஞ்சரியும் எங்கட புத்தகங்களும் இணைந்து நடாத்திய போட்டியில் பாராட்டுப் பெற்ற கதையாகும்.

“அம்மா ஏதாவது சாப்பாடு இருந்தாத் தாங்கம்மா.... பசி தாங்கேலாம இருக்கு...” அழுதவாறே தன் தாயாரான மாலதியைக் கேட்டாள் நான்கு வயதே நிறம்பிய அஸ்வினி. “கொஞ்ச நேரம் பொறுத் திரடா செல்லம். இன்னும் கொஞ்ச நேரத்துக்குள்ள அப்பா அரிசி சாமா னோட வந்திருவார். வந்தவுடன் என்ர செல்லக் குட்டிக்கு சமைச்சுத் தந்திடுவன்...” கண்களில் நீர் ததும்பக் கூறினாள் மாலதி. “என் னம்மா நீங்க... எவ்வளவு நேரமா இப்பிடித்தான் சொல்லிக் கொண்டி ருக்கிறீங்க. ஆனா இன்னுமே எங்கட அப்பா வாற மாதிரித் தெரியேல்ல...” பசி அடி வயிற்றில் பற்றியெரிய வார்த்தை அக்கினியாக வெளிவந்தது அஸ்வினிக்கு. தங்களது வாழ்க்கை யின் இயலாமையை எண்ணி வருந்தியவளாய் மாலதி தன் மகள் அஸ்வினியின் கேள்விக்கு மறுபதில் எதுவும் கூறாது கண்ணீர் சொரிந்தபடி கீழே விழுவதற்கு திகதியை எண் ணியபடி காத்திருந்த வீட்டுச் சுவரிலே சாய்ந்தபடியிருந்தாள்.

“அம்மா அப்பா எங்க போனவர்...” தண்ணீரால் நனைத்த துணியை வயிற்றில் வைத்தபடி கேட்டான் மகன் தருண். “உங்கட அப்பான்ர முதலாளி கணேசண்ணேட்டத்தான் போனவர். ஏதோ நேற்று வேலை செஞ்ச மேசன் வேலைக்கான கூலிய இண்டைக்குக் காலம வந்து வாங்கச் சொன்னவராமெண்டு போனவரடா.... இந்த மனுசன இன்னுமே காணேல்ல.....” பசி ஒருபுறம் உடலை வாட்ட பிள்ளைகளின் தவிப்பிற்கு ஈடுகட்ட முடியாதவளாய் உள்ள நிலை மறுபுறம் அவள் பதட்டத்தை மேலும் அதிகரித்தது.

“மாலதி....” தந்தையின் குரலைக் கேட்டதும் இரு பிள்ளைகளும் வெளியில் ஓடிவந்து தந்தையின் காலைப்பற்றிப் பிடித்தனர். அவர்க ளிருவரையும் வாரியணைத்த தந்தை சிவநேசன் கையில் வைத்திருந்த பையிலிருந்து பிஸ்கட் பைக்கற் ஒன்றை எடுத்து இருவரிடமும் கொடுத்தான். தற்காலிக உணவு கிடைத்த சந்தோசத்தில் இவர்களது முகம் சூரியனைக் கண்ட மலர்கள் போல் புதுப்பொலிவு பெற்றது. பிஸ்கட்டினை தன் இரு பிள்ளைகளும் சாப்பிடும் விதத்தினைப் பார்த்த சிவநேசனுக்கு முகத்தினூடாக கண்ணீர்த் துளிகள் வழிந்தோடியது. “ஏனப்பா இவ்வளவு நேரமா எங்க போனனீங்க...? நான் துடிச்சுப் போட்டன்....” சிவ நேசனைப் பார்த்துக் கேட்ட படியே அவ்விடத்திற்கு வந் தாள் மாலதி. “ஏதோ உலகம் முழுக்க கொரோனா வைரஸ் பரவுதாம். சனம் முண்டியடிச்சுக் கொண்டு சாமானுகள் வேண்டு துகள். இண்டைக்கு இரவில இருந்து மறு அறிவித்தல் வரை ஊரடங்குச் சட்டமாம். அது தான் கணேசண்ணேற்ற என்ர கூலிக்காசோட ஐநூறு ரூபா அதிகமா வாங்கி அரிசி சாமானுகள் வேண்டிக் கொண்டு வந்திருக்கிறன். இந்தா பிடி மாலதி....” கூறியபடி கையிலிருந்த பையைக் கொடுத்தான் சிவநேசன். “என்னப்பா இந்தச் சாமானுகள் எத்தின நாளைக் குப் போது மெண்டு வேண்டிக் கொண்டு வந்தனீங்க.... உங் கட சம்பளக் காசுக்கும் சாமானுகள் வேண்டிக்கொண்டு வந்திருக்க லாமே....” மாலதி கூறி முடிப்பதற்குள் “எடி யப்பா... இவ்வளவு சாமானும் ஆயிரத்து ஐநூறு ரூபா. முழுக்காசுக்கும் இவ்வளவு தான் சாமான்...” சிவநேசன் கூற “என்னப்பா சொல்லுறியள்” தலையில் கைவைத்தாள் மாலதி. “ இப்ப கடைக்காறன் தீர்மானிக்கிறது தான் விலை. விரும்பினா வாங்கிக் கொண்டு போ, இல்ல யெண்டா வெளிலபோ எண்டு கலைக்கிறானுகளடி. பத்தா யிரம் ரூபாவிற்கு ஒரு கிலோ அரிசி வித்தாலும் அத வேண்டிச் சாப்பிடுறத்துக்கு

எங்கட நாட்டில சில சனங்கள் இருக்கு.
அப்படிப்பார்க்கேக்க நாங்களெல்லாம் எப்படி வாழுறது. எங்களப் போல ஏழைகளெல்லாம் பிறந்திருக்கவே கூடாது...'' வாழ்க்கையின் வலிகள் சிவநேசனிடமிருந்து வார்த்தைகளாக வெளிவந்தது.
''அது சரியப்பா மரக்கறியொண்டும் வாங்கிக் கொண்டு வரேல்லயோ?'' மாலதி வினவ,
''அத ஏனப்பா கேக்கிற.... கொஞ்சம் அழுகின மரக்கறிகூட குறைஞ்ச விலைக்குத் தரமாட்டாங்களாம். அதுதான் வாறவழியில வள்ளியாச்சியின்ர வளவுக்குள்ள முருக்கமிலை கொஞ்சம் பிடுங்கிக் கொண்டு வந்தனான். இருக்கா எண்டு பார் மாலதி...'' சிவநேசன் கூற மாலதி பையினுள் முருக்கமிலையைத் தேடியவளுக்கு, வேறொரு பையில் மரக்கறி தென்பட
''என்னப்பா இப்ப சொன்னியள் மரக்கறி வாங்கேல்லயெண்டு. பிறகு எப்படி இதுக்குள்ள மரக்கறி வந்தது...'' கோபத்துடன் கேட்டாள் மாலதி.
''ஏன் மாலதி இப்ப கோபப்படுற.... நான் மரக்கறி வேண்டேல்லத்தான். ஆனா இவன் ராசன் மச்சான் இருக்கிறானெல்லோ அவன் தான் வேண்டித் தந்தவன்'' சிவநேசன் கூறி முடிப்பதற்குள்
''அவரோட நீங்க கதைக்காம விட்டே இப்ப ஒருவருசமாப் போகுது போல... பிறகு எப்படி வேண்டித் தந்தவர்....'' என வியப்போடு கேட்டாள் மாலதி. நான் சந்தையில மரக்கறி விலையைக் கேட்டிட்டு வாங்காம வாறத அவன் கண்டிருக்கிறான். நான் சைக்கிள்ள வரேக்க எனக்கு முன்னுக்கு அவன் தன்ர மோட்டச் சைக்கிள நிப்பாட்டிப் போட்டு தந்தவன். நான் வேண்டாமெண்டுதான் சொன்னனான். ஆனா.... அவன் தன்னில இருக்கிற கோவத்தில இந்த மரக்கறிய வேண்டாமெண்டு சொல்லாதீங்க ளெண்டும் காசு உதவி வேணுமெண்டா கேளுங்க. பிள்ளையள பட்டினி போட்டிராதீங்க, வேணுமெண்டா கொரோனா பிரச்சினை முடிய நீங்க வழம போல வேலைக்குப் போகேக்க நான் தாற காசத் திருப்பித்தாங்க எண்டும் சொன்னவன்ரி....'' கண்கள் பனிக்கக்கூறி முடித்தான் சிவநேசன்.
''சில.... சில.... நல்ல மனிதர்களையும் இனம் காட்டித்தான் இருக்கு இந்தக் கொரோனா வைரஸ்...'' என்று மாலதி கூற ''சரியாத்தான் சொல்லியிருக்கிற மாலதி. ஊரிலயே கஞ்சத்தனத்துக்குப் பெயர்போன கண்மணியக்காவ நான் வாற வழியில் கண்டனான். அவா சொன்னவா தங்கட பசு மாட்டில பால் கறந்து வைக்கிறாவாம். பின்னேரம் வந்து எடுத்துக்கொண்டு போய் பிள்ளையளுக்குக் காய்ச்சிக் குடுக்கட்டாம். காசொண்டும் வேண்டாமாம். திண்ட கையால காகம் கலைக்காத மனிசி இப்ப எப்படிச் சொல்லுது பாத்தியோ மாலதி இந்தப் பெருமையெல்லாம் அந்தக் கொரோனா வைரசையே சாரும். அட இன்னொரு பகிடியச் சொல்ல மறந்திட்டன். சனம் சாமானுக்கு அடிபட்டு வாங்க, இன்னொரு பக்கம் பெற்றோலுக்கு மெல்லேப்பா சனம் அடிபட்டு வாங்குது....'' சிவநேசன் சிரித்தபடி கூற, ''ஊரடங்கு எல்லேப்பா... பிறகு எப்படி இவேயள் வெளில போவீனம்.... வீட்டு முற்றத்தில தான் இவே அடிச்ச பெற்றோலுக்கு வாகனம் ஓடிப்பாக்கோணும்.....'' மாலதியின் பதிலைக்கேட்ட சிவநேசன் ''எட்டாம் வகுப்பு மட்டும் படிச்ச உனக்கு இது விளங்குது... ஆனா பெரிய பட்டப்படிப்புகள் எல்லாம் படிச்ச எங்கட சில சனங்களுக்கு விளங்கேல்லப் பாத்தியா.... இதுதான் சொல்லுறது புத்தகப்படிப்போடு மட்டும் இருக்காம கொஞ்சமாவது வாழ்க்கை பற்றிய அனுபவப்படிப்பும் தேவையெண்டு....''சிவநேசன் கூறி முடிப்பதற்குள் ''இப்ப நீங்க அவங்களைக் கேவலப்படுத்துறீங்களா..... இல்லையெண்டா என்னப் பெருமைப் படுத்துறீங்களா....?'' சிறு கோபத்துடன் கேட்டாள் மாலதி.
''உன்னப் பெருமைப்படுத்தவும் இல்ல, அவங்கள கேவலப்படுத்தவும் இல்ல... எங்கட நாட்டு நடப்பத்தான் சொல்லுறன். ரெண்டு மத்திய கிழக்கு நாடுகளுக்கிடையில சின்னனா ஒரு முறுகல் நிலை ஏற்படவே கான் கானா பெற்றோல் அடிச்சு வைச்ச ஆக்களடி எங்களட சனங்கள் அப்பிடி இதுகளெல்லாம் இன்னும் நிறையத் திருந்தக்கிடக்கு...'' கூறி முடித்தான் சிவநேசன். ''இனி உங்களுக்கும் மேசன் வேலை இல்ல. அரிசி சாமானும் கொஞ்சம் தான் கிடக்கு இதுகளெல்லாம் முடிய என்ன செய்யிறதெண்டே தெரியேல்ல....'' குழப்பத்துடன் கூறினாள் மாலதி. ''பட்டினி என்றொரு நிலமை வந்தால் எங்களுக்கும் கொரோனா அறிகுறி இருக்குகெண்டு ஆராவது ஒருத்தருக்குச் சொன்னால் போதும் பதினான்கு நாள் தனிமைப்படுத்தல் எண்டு சொல்லி அழைச்சுக் கொண்டு போய் மூன்று வேளையும் நல்ல சாப்பாடு தருவாங்கள்...'' சிவநேசன் கூறி முடிப்பதற்குள்
''என்ன பகிடியா விடுறியள்....'' என்று மாலதி கேட்க,
''நான் சும்மா சொன்னனப்பா... நீ போய் வேலயப்பாரு.... புள்ளி போட்டவனுக்குத் தெரியாதா கோலம் போட... கடவுள் எண்ட ஒருத்தன் இருக்கிற வரைக்கும் இந்த உலகத்தில அநாதையெண்டும், ஏழையெண்டும் ஆருமே கிடையாது... எல்லாம் அவன் பார்ப்பான்....'' சிவநேசன் கூறிமுடிக்கவும், மாலதி அவ்விடத்தை விட்டு நகரவும் சரியாக இருந்தது.

இரவில் வீட்டின் நடுவிறாந்தையில் சோபாவின் மீது இருந்து கொண்டு நல்லம்மாப் பாட்டி ஒரு பயிற்சி புத்தகத்திலே ஏதோ எழுதிக் கொண்டே இடையிடையே தனது இளைய மகளின் பிள்ளைகளின் விளையாட்டுக்களை இரசித்த வண்ணம் இருந்தாள். நல்லம்மாப் பாட்டி மனதில் ஏதோ இனம் புரியாத கலக்கம் இருந்தது. அது அவள் முகத்தில் பிரதிபலித்து கொண்டே இருக்கும். யாராவது கேட்டால் “என்னோட பேச்சை யார் தான் கேப்பாங்க” என்று சொல்லிக்கொள்வாள். நல்லம்மாப் பாட்டிக்கு இப்போது 72 வயதாகிறது ஆனாலும் நல்ல சுறுசுறுப்புடனும் உடல் ஆரோக்கியத்துடனும் இருந்தாள் நல்லம்மாப் பாட்டிக்கு மூன்று பிள்ளைகள், முதல் பிள்ளை வெளியூரில் அரசாங்க வேலை பார்க்கிறான். மற்றையது இரண்டும் பெண் பிள்ளைகள் கடைசி மகள் விமலாவின் வீட்டில்தான் தற்போது தனது வாழ்நாளை கழித்து வருகின்றாள். விமலாவிற்கு இரண்டு பிள்ளைகள் அப்பிள்ளைகளுடன் தனது கடைசிக் காலத்தை கழித்து விட எண்ணியிருந்தாள். தனது பேரப் பிள்ளைகள் மீது அவள் அளவில்லாத அன்பு வைத்திருந்தாள். தனது

சஹ்ர் சமன்



பிள்ளைகளை எப்படி அறிவுரை புகட்டி வளர்த்தாளோ அவ்விதமே அவர்களை வளர்க்க நினைத்தாள். 1990களில்இடம்பெற்ற உள்நாட்டு அசாதாரண சூழ்நிலை காரணமாக தனது வாழ்வாதாரமாக இருந்த பலசரக்குக் கடையையும் மற்றும் வாழ்விற்கு ஆதாரமாக இருந்த தன் கணவனையும்இழந்த பின்னர் மிகுந்த சிரமத்தின் மத்தியில் தனது பிள்ளைகளை படிக்கவைத்து மூத்த மகனை அரசாங்க வேலை கிடைக்கும் வரை கஸ்டப்பட்டு விட்டாள். இப்போது மூன்று பிள்ளைகளுக்கும் திருமணம் செய்து கொடுத்துவிட்டாள். எஸ்.எஸ்.சி வரை படித்த நல்லம்மா தனது பலசரக்கு கடையில் முன்னர் கணக்கு வழக்குகளைப் பார்ப்பதோடு நன்றாக வியாபாரமும் செய்வாள். ஆனால் கணவன் இறந்த பின்பு மீண்டும் ஒரு கடையைப் போட்டுத் தனியாகவே கஸ்டப் பட்டாள்.இடையிடையே பிள்ளைகளும் அவளுக்கு உதவியாக இருந்தார்கள். நல்லம்மா நிறைய கதைகளை தனது பிள்ளைகளுக்குச் சொல்லிக் கொடுப்பாள். அது பொழுதுபோக்காகவும் அறிவுரை தருவதாகவும் இருந்தன. படித்தவள் என்பதால் பாடசாலைப் படிப்பை விடவும் வீட்டுப் பாடத்தைப் பிள்ளைகளுக்கு கவனமாக சொல்லிக் கொடுத்தாள். நல்லம்மா பாட்டி சொல்லும் கதைகள் சுவாரசியமாகஇருக்கும்.இரவில் உறங்கும் போதும்கூட கதை சொல்லியே பிள்ளைகளை உறங்க வைப்பாள்.

இன்றைய நவீன யுகத்தில் பாட்டி சொல்லும் கதையைக் கேட்க பிள்ளைகளுக்கு நேரம் இருப்பதில்லை. அதிலும் இன்று அதிகரித்த கையடக்கத் தொலைபேசிப் பாவனை குழந்தைகள் முதல் பெரியோர்கள்வரை அனைவரையும் ஆட்கொண்டு விட்டது. விசேடமாகச்

சிறுவர்கள் அதில் உள்ள விளையாட்டு செயலிகளையே அதிகம் விரும்பி விளையாட ஆர்வம் காட்டுகின்றார்கள். அவ்வாறு ஆர்வம் காட்டுவதற்குக் காரணம் அவர்களின் பெற்றோர்கள் தங்களின் நேரத்தை மிச்சப்படுத்தவும் குழந்தைப் பராமரிப்பை இலகுபடுத்துவதற்காகவும், குழந்தைகளிடம் தொலைபேசியைக் கொடுத்து குழந்தைகள் அழுவதையோ அல்லது குறும்புகள் செய்வதையோ தவிர்த்து விடுகின்றனர். இதனால் எதிர்காலத் தலைவர்களான குழந்தைகள் சிந்திக்கும் ஆற்றலையும், உறவுகளின் தாற்பரியத்தையும் உணராமல் ஒரு கணனிமயமான பிள்ளைகளாக மாறுவது உறுதி.

நல்லம்மாப் பாட்டி தனது பேரப்பிள்ளைகளைத் தூக்கி கொஞ்சுவது மட்டுமன்றி தனது அனுபவத்துடனான கதைகளையும் சொல்லுவாள். நல்லம்மாபாட்டி கதை சொல்லும் போது பேரப்பிள்ளைகள் இரண்டு பேருமே அவளின் மடியின் மீது இருந்துதான் அதனைக் கேட்பார்கள். சில சமயங்களில் ‘‘கதை வேண்டாம் பாட்டி’’ என்று சொல்லிக் கொண்டு விளையாட ஓடி விடுவார்கள். அந்த சமயங்களில் விமலாவின் கணவர், பிள்ளைகள் வீட்டிற்கு வெளியே சென்று விளையாடு வதை தவிர்க்கும் நோக்கத்துடன் தனது கையடக்கத் தொலைபேசியில் உள்ள விளையாட்டு செயலியை திறந்து கொடுப்பார்.

இரண்டு பிள்ளைகளும் ஆர்வமாக அதனை வாங்கி விளையாடுவார்கள். இப்படியே நாட்கள் செல்லச் செல்ல பிள்ளைகள் நல்லம்மா பாட்டியிடம் கதை கேட்பதில் ஆர்வம் காட்டுவதில்லை. ‘‘பாட்டி உங்கள் கதையை விட அப்பா போன்ல இருக்கற கேம் விளையாடுறது நல்லாயிருக்கு,இனி கதைசொல்ல வேண்டாம்’’ என்று பிள்ளைகள் நல்லம்மாவிடம் கூறுவதோடு பாட்டியிடம்இப்பொழுது சரியாக பேசுவதில்லை. அதிக நேரம் தங்கள் அப்பாவின் தொலைபேசியுடன் தான் இருப்பார்கள். இதனால் நல்லம்மா தன் இறுதிக் கட்ட வாழ்நாட்கள் இப்படியானதே என கவலை அடையத் தொடங்கி விட்டாள். அவள் பிள்ளைகளுக்காக சொல்லவிருந்த கதைகளைக் அவர்களுக்கு சொல்ல முடியாமையால் மிகுந்த மனவேதனை அடைந்தாள். தான் தனித்துப் போனதாக உணர்ந்தாள். தன் மனப்புத்தகத்திலுள்ள பக்கங்கள் புரட்டப்படாமல் போய்விட்டதை நினைத்து வருந்தினாள். விமலாவின் பிள்ளைகள் வேண்டும் என்றே அவ்வாறு செய்யவில்லை, எது? நல்லது எது? கெட்டது என அறிந்து கொள்ளும் பருவமும் பக்குவமோ அவர்களுக்கு இல்லை.

நல்லம்மா தன் பேரப்பிள்ளைகளுக்கு கதை சொல்லும் நேரங்களில் இப்போதெல்லாம் ஒரு பயிற்சி புத்தகத்தில் ஏதோ எழுதிக் கொண்டிருப்பாள். இப்படியே அடிக்கடி எழுதுவாள் நாட்கள் நகர நகர நல்லம்மாவின் முதுமை நிலையும் மனவருத்தமும் முந்தைய சுறுசுறுப்பை அவளுக்கு கொடுக்கவில்லை. இதனால் படுக்கையில் கிடக்க வேண்டிய நிலைக்கு ஆளானாள். விமலா தனது தாயை நன்றாகக் கவனித்துக் கொண்டாலும் தாயின் குழப்பமான மனநிலையை அறிய முடியவில்லை. நல்லம்மாள் தன் பேரக்குழந்தைகள் தன்னை விட்டு பேச்சளவிலும், மனதளவிலும் வெகுதூரம் சென்று விட்டார்கள், தனது கதையை கேட்க விரும்பவில்லை என்று தினமும் மனதுக்குள் துடித்துக் கொண்டி ருந்தாள்.இதனால் உடல்நிலை மேலும் மோசமாகியது. ஆனாலும் அவள் பயிற்சி புத்தகத்தில் எழுதுவதை நிறுத்தவில்லை.இப்பொழுது தளர்வடைந்து விட்டாள் நடுங்கிய கைகளினால் கிறுக்கலாகவே எழுத முடிந்தது.

அன்று காலையில் அம்மாவிற்கு தேனீர் கொடுப்பதற்காக தன் தாயை எழுப்பினாள். ஆனால் நல்லம்மா எழும்பவில்லை. அசைவற்ற உடலாக படுத்திருந்தாள். நல்லம்மாவின் அருகே சென்று விமலா சத்தமாக அழைத்தாள். எவ்வித அசைவுமில்லை, பதட்டத்துடன் அருகே வந்து கையின் நாடியைப் பிடித்துப் பார்த்தாள். ஆம், உயிர் பிரிந்துவிட்டது அம்மா! அம்மா! என்று அலறித் துடித்தாள். கண்ணீர் மழை பொழிந்தாள். அந்த சத்தம் கேட்ட விமலாவின் கணவரும் அங்கு ஓடி வந்தார். அவரும் ஸ்தம்பித்துப் போய்விட்டார். இருவரின் கண்களும் கண்ணீர்க் கடலாகின. அச்சமயம் நல்லம்மாவின் தலையணை அருகில் இருந்த பயிற்சி புத்தகம் விமலாவின் கண்ணில் திடீரெனப் பட்டது. அதை எடுத்து அதன் முதல் பக்கத்தை புரட்டிப் பார்த்தாள். ‘‘கேட்காத கதைகள்’’ என்று தலைப்பிடப்பட்டு திகதி போட்ட வண்ணம் நிறைய கதைகள் எழுதப்பட்டு இருப்பதை கண்டாள். அருகே நின்று கொண்டிருந்த விமலாவின் கணவரும் அதனை வாங்கிப் பார்த்தார். கண்ணீர் கண்களை கடந்து வழிந்தது. தங்களது அறியாமையை நினைத்து தலையில் அடித்து அழு தார்கள். நல்லம்மாவின் பேரப்பிள்ளைகளும் அதனை வாங்கி பார்த்தாலும் அவர்களுக்கு அது உணரும் படியாக இருந்திருக்காது. ஆனாலும் அது முன்னர் கேட்காத கதையாகவே இருந்தது. அது நல்லம்மாவின் காதுகளுக்கும் அப்போது கேட்காத கதையாகவே இருந்தது.



# மஞ்சரி சிறுகதைகள்: ஒரு பார்வை

மஞ்சரி 12

பேராசிரியர் செ. யோகராசா

**என் அன்பு மேரி அன்ரி:**

அண்மைக் காலத்தில் இலங்கையில் கிறிஸ்தவ தேவாலயங்களில் இடம் பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவத்துடன் தொடர்புபட்ட விடயங்கள் இச் சிறுகதையின் பேசு பொருளாகவிருப்பது பாராட்டிற் குரியது. இயல்பான முறையில் வெளிப்படாமல் பிரச்சார வாடையுடன் இச் சிறுகதை காணப்படுவதும் வாசகர் மனதிலே தாக்கத்தை ஏற்படுத்தாமையும் இப் படைப்பின் குறைபாடுகளாய் அமைந்துள்ளமை கவனத்திற்குரியது.

**புரியாத உறவுகள்:**

ஈழத்தின் இறுதிக்காலகட்ட போரின்போது பெண்கள் தமக்கேற்பட்ட இராணுவக் கொடுமைகளிலிருந்து தப்புவதற்காக பொய்யான சில விடயங்களை அவர்களிடம் கூறுவதுண்டு. இதனால் புரியாத உறவுகள் ஏற்படுவதுமுண்டு. அவ்வாறானதொரு சம்பவம் பண்பாட்டு மீறலாக அமையாதவிதத்திலே இடம்பெற்றதுபற்றி எடுத்துரைக்கும் இச் சிறுகதை வித்தியாசமானதாக உள்ளமை கவனத்திற்குரியது.

**பெண்மையின் தவறோ?**

ஒரு கூட்டுக் குடும்பம் சார்ந்த பெண்களது வாழ்க்கைச் சிக்கல்கள் மனப்போராட்டங்கள் ஆகியன வெகு நுட்பமான முறையில் வெளிப்படுத்தப்படுகின்றன என்ற விதத்தில் பாராட்டிற்குரியதொரு சிருஸ்டியாகிறது இச்சிறுகதை. எழுத்தாளர் தமது சிறுகதையொன்றினை முதல் வரைபு ஆகத் தராமல் பல தடவைகள் திருத்தித் திருத்தி எழுதித் தரும்போதுதான் வெற்றிபெற முடியுமென்பதற்கும் இச் சிறுகதை சான்று பகர்கின்றது.

**டோக்கன்:**

தமிழ்நாட்டுக் களத்திலே எழுந்துள்ள இச் சிறுகதை தேர்தல் காலத்தில் அங்கு இடம்பெறும் வழமையான சம்பவமொன்றினை சுவராசியமான முறையில் விபரிக்கின்றது. முக்கியமான பாத்திரங்களின் செயற்பாடுகள் உண்மையானவையா பொய்யானவையா போன்ற ஐயங்களுக்கு உறுதியான பதில் கிடைக்காத விதத்தில் கதையை நகர்த்தியிருப்பதில் எழுத்தாளர் பெற்ற வெற்றியும் பாராட்டிற்குரியதாகும்.

**ஒரு பால்ய பொழுதொன்றில்:**

இச் சிறுகதையின் பேசுபொருள் இன்றைய இளைஞர் களுக்கு ஏற்புடையதெனினும் இச் சிறுகதையின் நீட்சி தவிர்க்கப்பட்டிருக்க வேண்டும். சிறுகதையின் முடிவிலும் கவனம் செலுத்தியிருக்கவேண்டும்.

**போர்க்களம்:**

அந்நியப்பட்ட அனுபவத்திற்குட்படாத களத்தினைக் கதாசிரியர் தேர்வு செய்துள்ளாரே என்ற வாசகரது மன ஆதங்கத்தினை சிறுகதையின் முடிவினூடாக ஒரு சிறு சொற்றொடர் ஊடாக கதாசிரியர் போக்கி யிருப்பது பாராட்டிற்குரியது என்றே கூறவேண்டும்.

**கனாக்காலம்:**

சிறுகதை எழுதுவதென்பதே கடினமான முயற்சி. அதுவும் ஒரு பக்கச் சிறுகதை எழுதுவதென்பது இன்னும் கடினமான முயற்சி. இவைபற்றிய புரிதல் எதுவுமின்றி கடினமான இம் முயற்சியீடுபட்டு சரிவு கண்டதோடு கனாக்காலம் என்ற சொற்றொடரின் கனதியையும் குறைத்துள்ளார் கதாசிரியர்.

**எழுத்தாளர்கள் கவனத்திற்கு...**

எந்த ஒரு எழுத்தும் பல தடவைகள் எழுதுபவரினால் திருத்தப்படும்போதுதான் அது முழுமையான வடிவம் பெறுகின்றதென்ற கருத்தை இப்பக்கத்தில் பேராசிரியர் முன்வைத்துள்ளார். இதனைக் கவனத்திற் கொண்டு எழுதும்படி அன்போடு கேட்டுக் கொள்கின்றேன்.

**மு. தயாளன்**



# எழுத்தின் அனுபவங்கள்.....

நந்தினிசேவியர்



## நட்புத் தொடர்பு

அரசியல்வயப்படுவதற்கு முன்னரே எனது இலக்கியப் பிரவேசம் நிகழ்ந்து விட்டது. அரசியல்வயப்பட்ட காலத்தில் வடமராட்சித் தோழர்கள் எனக்கு உந்துசக்தியாக இருந்தார்கள். அருள், சைவம், அல்வாய் நவம், நெல்லியடி சிவம்....என ஒரு பெரும்பட்டியலை இங்கே பதிய முடியும். தொழில் நுட்பக்கல்லூரிக்காலத்தில் அரசியல் உடன்பாடு காரணமாக " ஷெல்லி தாசன்" என்னோடு நட்பாகினார். அவர் ஆசிரியராக இருந்து வெளியிட்ட "வணிகமலர்". இதழில் " ஓ....அது" என்றுஒரு கதை எழுதினேன். என் பற்றிய அறிமுகக் குறிப்புடன் அக்கதை பிரசுரிக்கப் பட்டிருந்தது. கொமேசியல் அச்சகத்தில் அது அச்சிடப்பட் டமையால் அங்கு கடமையாற்றிய தாயகம் ஆசிரியராக பின்னர் உருவாகிய க.தணிகாசலம் அவர்களது நட்பு எனக்குக் கிட்டியது.கட்சியின் தோழமையால் அது பின்னர் விகசித்தது. புதுவையின் தொடர்பும் ஏற்படுகிறது. அக்காலத்தில்தான். டானியல் அன்ரனி, சசி. கிருஸ்ணமூர்த்தி, ராதேயன், வ.ஐ.ச ஜெயபாலன். அ.யேசுராசா ஆகியோரின் அறிமுகம் ஏற்படுகிறது. செ.கணேசலிங்கன் குமரன் சஞ்சிகையை ஆரம்பிக்கிறார். கிளிநொச்சியிலிருந்து களனி என்றொரு சஞ்சிகை வெளிவருகிறது. எனது மேற்குறித்த நண்பர்களில் சிலர் குமரன், களனியில் எழுதுகின்றனர். அரசியல் காரணங்களினால் அவ்விரு சஞ்சிகைகளிலும் நான் எழுதவில்லை. செம்மலர்கள் இலக்கியவட்டம் " அணு " என்ற இதழை வெளியிட்ட காலமும் அது. அதன் ஆசிரியர் டானியல் அன்ரனி.நாங்கள் தேசிய கலை இக்கியப்பேரவையினர். இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கத்துடன் எனக்கு தொடர்பேதும் இருக்கவில்லை. புதிய ஜனநாயகத்தை வலியுறுத்தி வடக்கு கிழக்கின் ஐந்து இலக்கிய அமைப்புகள் திருகோணமலையில் நடத்திய மாநாட்டில் தேசிய கலை இலக்கியப்பேரவை யின்சார்பில் நான் கலந்து கொண்டேன். மாநாட்டின் சிறுகதை அரங்கில் "நான் பாருங்கோ" என்றொரு சிறுகதையை வாசித்தேன். அக்கதையை முல்லைவீரக்குட்டி விமர்சனம் செய்தார். அன்புடீன், பாலமுனை பாறூக், கலைவாதி கலீல். ஆகியோரை அப்போதுதான் அறிமுகமா கினேன்.அ.யேசுராசா பார்வையாளராக அங்கு வந்திருந்தார். இலக்கியத்தைவிட தீவிரஅரசியலில் என் கவனம் மையம் கொண்டிருந்தது. இலக்கியத்தை ஒருபுறம் ஒதுக்கி இருந்தேன்.ஆனாலும் முற்றாக ஒதுங்கிவிடவில்லை.

## குறுநாவல்!

பேராதனைப் பல்கலைக்கழக தமிழ்ச்சங்க 50 வது ஆண்டுநிறைவைமுன்னிட்டு சிறுகதை, கவிதை, குறுநாவல் போட்டியை அறிவித்திருந்தது. அப்போது அதன் தலைவராக நண்பன் திருமலை நவம் இருந்தான். சிறுகதைப்போட்டியில் டானியல் அன்ரனியும், கவிதைப்போட்டியில் புதுவை இரத்தினதுரையும், குறுநாவல் போட்டியில் எனக்கும் முதல்பரிசு கிடைத்தது. கிடைத்த தங்கப்பதக்கத்தை மறுநாள் பிரயாணச்செலவுக்காக கண்டியில் விற்றேன். குறுநாவலின் பெயர் **ஒரு வயதுபோன மனிதரின் வாரிசுகள்.** காலையில் தொடங்கி மாலையில் முடியும். ஒரு ஓய்வூதியம் பெற அலையும் ஆசிரியரின் அவலக் கதை அது. துரதிஸ்டம் பரிசு பெற்ற அக்கதையும் தவறிப்போன என் படைப்புகளில் ஒன்றாகிவிட்டது. பேராதனை 50 ம் ஆண்டு இலக்கியவிழா ஒரு முக்கியமான. விழா. அவ்விழாவில் இரு துருவங்களாக இருஅணிகளாக இருந்த கவிஞர் காசி ஆனந்தனும், சில்லையூர் செல்வராசனும் கவியரங்கில் பங்குபற்றி கவிதை படித்தனர். நாங்கள் சில்லையூர் அணியினர் என்பது பரகசியமான விசயம். தமிழ் தேசியவாதிகளும், இடதுசாரிகளும் மாணவர்கள் மத்தியில் சரிக்குச்சரி இருந்தார்கள். எந்தவித சச்சரவுமில்லாமல் அந்நிகழ்வு நடைபெற்றது. இது உண்மையில் மறக்கமுடியாத சம்பவம். அந்தக்காலம் இடது சாரிகளான எங்களுக்குள் இருந்த தத்துவார்த்த முரண்பாடு மிக மோசமானதாக இருந்தது. மா.ஓ வாதிகளிடையேதான் இது கூடுதலாகப் பிரதிபலித்தது. நான் கலை இலக்கியம் பற்றிய மா.ஓ.வின் ஜெனான் கருத்தரங்கு உரையை மிக உன்னிப்பாக உள்வாங்கியிருந்தேன். அதற்கு அமைவாக எனது படைப்புகளை நான் கலை அழகோடும் மக்களுக்கான உள்ளடக்கத்தோடும் படைக்க முற்பட்டிருந்தேன். இதன் காரணமாக தேசிய பத்திரிகைகள் என் படைப்புகளை பிரசுரிக்கத் தயங்கின. அதுபற்றி ஒரு சுவராஸ்யமான தகவலை அடுத்துத் தருகிறேன்.

**வாசிப்பதனால் மனிதன்**
**பூரண மனிதனாகிறான்**


SKM
BOOKS
COMING SOON!
WWW.SKM-BOOKS.COM
BUY & SELL YOUR BOOKS ONLINE
SKM
BOOKS
SKM
BOOKS
SKM
BOOKS
SKM
BOOKS
SKM
BOOKS



# LUXMI EDUCATION CENTRE

# ADMISSIONS OPEN

UNLOCK YOUR POTENTIAL

## WHY CHOOSE US?

- Qualified and Experienced teachers
- 20+ Years Experience
- Covid Friendly Classes
- Leading Online lessons
- Offering:
  - Maths
  - Science
  - English
  - Physics
  - Chemistry
  - Biology

## REACH US AT:

Email: info@leconline.co.uk
Tel: 0208 573 0368
Mob: 07852 810285
Website: www.leconline.co.uk
101A Blyth Road, Hayes, Middlesex, UB3 1DB

## COURSES

11+,

YEAR 2, YEAR 3, YEAR 4,

YEAR 5, YEAR 6,

YEAR 7, YEAR 8, YEAR 9,

YEAR 10, YEAR 11,

YEAR 12 AND YEAR 13

OFFERING
ONLINE CLASSES
ENROL NOW!